
இராமாயணம் காவியமே!



ஆ.ரா.இராமசாமி

இராமாயணம் காவியமே!

ஆ.ரா.இராமசாமி
முதுநிலை கணக்காய்வு அதிகாரி (ஓய்வு)
தமிழ் மாநில கணக்காயர் அலுவலகம்,
சென்னை - 18

நூல் விவரம்

நூல்	:	இராமாயணம் காவியமே!
நூலாசிரியர்	:	ஆ.ரா.இராமசாமி 14, பாலகிருஷ்ணா தெரு, மயிலாப்பூர், சென்னை-4. தொலைபேசி: 91-44-24984990
முதற்பதிப்பு	:	2020
நூலின் வகை	:	ஆய்வு மற்றும் ஆன்மீக விழிப்புணர்வு.
உரிமை	:	அனைத்து உரிமைகளும் ஆசிரியர்க்கே
பக்கங்கள்	:	112
விலை	:	
சட்ட நிபந்தனை	:	சென்னை நகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

உள்ளே உள்ள உண்மைகள்

சுருக்கங்களின் விளக்கம்

1.	VR	:	வால்மீகி இராமாயணம்
2.	AVR	:	ஏஷியன் வேரியேஷன்ஸ் இன் ராமாயணா
3.	ALL	:	அலகாபாத்
4.	JR	:	ஜெயின் ராமாயணா
5.	சீ.ஆர்.சீ.,	:	ஸ்ரீநிவாச அய்யங்கார்
6.	Ibid	:	அதே புஸ்தகத்தில்

முகவுரை

பணி ஓய்வு காலத்தில் பல நூலகங்களுக்குச் சென்று பழமை யான ஆன்மீக நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன். அவைகள் ஆங்கிலத்திலும், சில தமிழிலும் இருந்தன. இந்நூல்களில் இதுவரை பாமரமக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லாத உண்மைத் தகவல்கள் ஏராளமாக கிடைத்தன. அந்த தகவல் களை அனைவரும் தெரிந்து கொள்ள விழைந்து இந்நூலை எழுதுகிறேன்.

அயோத்தியை தலைநகராகக் கொண்ட கோசல தேசத்தின் வீரமிக்க இளவரசனாகவும், பிற்காலத்தில் பாரத தேசத்தின் ஒரே சக்ரவர்த்தியாகவும் கோலோட்சிய, இராமனின் சரிதத்தை, மாமுனிவர் வால்மீகி விறுவிறுப்பான, இனிமையான 24,000 பாடல் களில், காவியமாக எழுதினார்.

வால்மீகி காலத்துக்குப் பின், பல துறைகளில் மக்களின் மனோ பாவம் மாறிவிட்டது. சங்க காலத்தில் இருந்த இராமாயணம் வழக் கொழிந்து போயிற்று.

இராமாயண பாடல்கள், நிறைந்த கருத்தாழமும், கற்பனைக் கலந்த வர்ணனைகளும், மகிழ வைக்கும் இலக்கிய நயமும், படிப்போரை அவைகள், உண்மை என நம்ப வைக்கும். ஆற்றலை யும் கொண்டவை.

இராமனின் கதையை தேவரிஷி நாரதர் வால்மீகிக்கு உபதேசித் தார். அவர், அசுரர்களின் கொடுமையிலிருந்து தேவர்களைக் காப்பாற்றி, 100 இராஜ்யங்களை இராமர் ஸ்தாபிப்பார் என உறுதி யளித்தார்.

இராமாயணம் என்றால், இராமரின் பயணம் என்று பொருள்.

இராமர் வனவாசம் என்ற போர்வையில், மகாராஷ்டிர மாநிலம் பஞ்சவடியில் (கோதாவரி உற்பத்தியாகும் இடம்) முகாமிட்டார். அந்த இடம் தண்டகாரண்யத்தைச் சேர்ந்த ஜனஸ்தானமாகும்.

தன்மகன் சம்பூகனைக் கொலை செய்தவரைத் தேடி அவ்விடம் வந்த, தண்டகாரண்ய சக்ரவர்த்தி இராவணேஸ்வரரின் சகோதரி சூர்ப்பநகை (மற்றொரு பெயர் சந்திரநகை) அவர்களைக் கண்டு,

‘‘நீங்கள் யார்? சந்நியாசி வேடத்தில் ஏன் இங்கே வந்தீர்கள்?’’ என விசாரித்தாள். சண்டை வலுக்கவே, இலட்சுமணர் அவளின் மூக்கை அறுத்து அங்கஹீனமாக்கித் துரத்தி விட்டார். அதன் விளைவாக உள்ளூர் மக்கள் இராம லட்சுமணர்களைத் தாக்கினார்கள்.

ஜனஸ்தானத்தில் இராமர் 14,000 மக்களைக் கொலை செய்து அவ்விடத்தை வெற்றிடமாக்கினார். இராவணனின் அமைச்சர், இராவணனிடம், தங்களின் ஜனஸ்தானம் காலியாகி விட்டது’’ எனத் தெரிவித்தார்.

தண்டகாரண்யம் என்ற பிரதேசம், தற்கால சத்தீஸ்கரிலிருந்து இலங்கை வரை பரவியிருந்ததாக அறியப்படுகிறது. ஆதியில் மகாபலியே தண்டகாரண்யத்திற்கு சக்ரவர்த்தியாகவும், அவருக்குப் பின் மகரிஷி பரசுராமர் காப்பாளராகவும், அவரைத் தொடர்ந்து பிரும்மாவின் கொள்ளு பேரன் தசமுகன் (இராவணேஸ்வரர்) பராக்கரமிக்க சக்ரவர்த்தியாகவும் இருந்தார்கள். பாரத தேசத்தின் தென் பகுதியான தண்டகாரண்யம் முழுவதும் இராவணேஸ்வரரின் தேசமாகும். அவர் எவ்வளவு வலிமை மிக்கவர் என்பது, தசரதர் ‘‘இராவணேஸ்வரருடன் யுத்தம் செய்ய மாட்டேன்’’ என்று இராமரிடம் தெரிவித்திருந்ததில் இருந்து அறியலாம்.

ஜனஸ்தானத்தில் சீதையைப் பறி கொடுத்த இராமர், அவளைத் தேடும் சாக்கில், தெற்கு பக்கமாக தன் பயணத்தைத் தொடர்ந்தார். செல்லும் வழியில் தன்னை எதிர்த்தவர்களை எல்லாம் கொன்று குவித்தார். அக்காலத்தில் தண்டகாரண்யத்தில் நெசவு மற்றும் விவசாயம் இல்லை. மக்கள் கல்லாலும், கட்டைகளாலும், நகத்தினால் கீறியும், பற்களால் கடித்தும், கை கால்களால் அடித்துக் கொண்டும் போரிட்டார்கள்.

இக்கால கட்டத்தில், இராவணேஸ்வரரின் இளைய சகோதரன் விபீஷணருக்கும், வாலியின் இளைய சகோதரர் சுக்ரீவனருக்கும் தன் அண்ணன்களின் அரியாசனத்தில் அமர வேண்டும் என, மனத்தளவில், ஆசையிருந்தது.

முதற்கட்டமாக வாலி, சுக்ரீவர்கள் இருக்கும் இடத்தைத் தேடி இராம லட்சுமணர்கள் தெற்கு பக்கமாகவே, மேற்கு தொடர்ச்சி மலை மீதே நடக்க ஆரம்பித்தார்கள். செல்லும் இடமெல்லாம் அவர்களின் ஆளுகைக்குள் வந்தது. அங்கெல்லாம் வர்ணாஸ்ரம தர்மம் புகுத்தப்பட்டது.

உலகமெங்கும் ஆதிக்க தீய சக்திகள் தங்களின் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தவும், மதத்தைப் பரப்பவும் இராமர் காட்டிய வழி முன்னோடியாக அமைந்தது.

தென் அமெரிக்காவின் பெரு நாட்டின் இன்கா பேரரசு, கி.பி.1528ம் ஆண்டில் 18 இலட்சம் சதுர கிலோ மீட்டர் அளவு பரந்திருந்தது. பெரும்பாலும், காடுகளும், மலைகளும் நிரம்பிய நாடு. அவர்கள் மாயா இனத்தவர்கள். அவர்களின் மொழியும், கலாசாரமும், தேவாலய கட்டிடங்களும் தமிழ் திராவிட பாரம் பரியத்தை ஒத்திருந்தன. தமிழர்களைப் போல் பழுப்பு நிறத்த வர்களே! ஜனத்தொகை ஒரு கோடியே, 60 லட்சம். நில வளமும், நீர் வளமும், கனிம வளமும், தங்கச் சுரங்கங்களும் நிறைந்த நாடு. தமிழர்களைப் போல் தங்க நகைகளை ஏராளமாக விரும்பி அணிந்தார்கள்.

இந்த செல்வமிக்க வளமான நாட்டின் மீது ஸ்பானியர்களின் கவனம் திரும்பியது. பெரு நாட்டின் பெருமையும், வளமும் சுதந் திரமும், மதமும் ஆதிக்க தீய சக்திகளின் சவால்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கி.பி. 1528ம் ஆண்டு, ஸ்பெயின் நாட்டின் அரசரின் அனுமதி யுடன் ஃபரான்சிஸ்கோ என்ற ராணுவத் தளபதி, 168 குதிரைப்படை வீரர்களுடன் பெருநாட்டில் நுழைந்தார்.

அதற்கு முன்பாக அந்நாட்டில் உள்ள அரசு வாரிசு சண்டை யைப் பற்றியும், இன்கா இனத்தவர்கள் நான்கு பிரிவுகளாக இருப்ப தாகவும், அவர்களிடையே பரஸ்பரம் ஒற்றுமை இல்லாததையும் தெரிந்து கொண்டார்கள். பெரு நாட்டு மக்கள் இந்தியர்கள் (இந்தோஇஸ்பானிக்) என்றே அழைக்கப்பட்டார்கள். அவர்கள் குதிரையைப் பார்த்ததில்லை.

ஸ்பானியர்களின் தோற்றத்தையும், ஆடைகளையும் பார்த்து அவர்கள் கடவுளர் என நினைத்தார்கள். அவர்களின் மன்னர் அதாஹுல்பா, சின்குவின்சரா என்ற மொழிபெயர்ப்பாளரை அனுப்பி, விசாரித்து வரக் கட்டளையிட்டார். அந்த மொழியாளி வீரன், திரும்பி வந்து மன்னரிடம் அவர்கள் ‘‘கடவுள் இல்லை, திருடர்கள், அசுரர்கள், இந்தியர்களை இரும்புச் சங்கிலியால் பிணைத்து வைத்துள்ளார்கள்’’ எனத் தெரிவித்தார். அவர்கள் தூங்கும் அறையைத் தீயிட்டுக் கொளுத்தி, கொல்ல வேண்டு மென்றும் அறிவுரைத்தார்.

ஸ்பானியர்கள், பெரு மன்னரை வீண் வம்புக்கு இழுக்கும் நோக்கத்துடன், சமரச பேச்சுக்கு அழைத்து, பைபிள் புத்தகத்தை அவருக்கு கொடுத்து, அது கடவுளின் வார்த்தைகள் எனக் கூறினார்கள். அதாஹுல்பா மன்னர், அதை வாங்கி, தன் காதில் வைத்துக் கொண்டு, ‘அது பேசவில்லையே’ எனக் கூறி அதைத் தூக்கி எறிந்து விட்டார். மன்னர் புஸ்தகங்களையே பார்த்ததில்லை.

தங்களின் மத நூலை தூக்கி எறிந்ததையே காரணம் காட்டி கஜாமார்கா என்ற இடத்தில் போர் தொடுத்தார்கள். மன்னர் 7,000 ஆயுதமில்லாத வீரர்கள் மற்றும் 12 மெய்க்காப்பாளர்களுடன் போர் களத்திற்கு வந்தார்.

அவர்களை பீரங்கி குண்டுகளால் தாக்கியும், குதிரைப் படைகளால் வெட்டிச் சாய்த்தும் மிரள வைத்தார்கள். 12 மெய் காப்பாளர்களும் கொலை செய்யப்பட்டார்கள். பீரங்கிகளையும், குதிரைகளையும் பார்த்திராத பெரு நாட்டு இந்தியர்கள் நிலை குலைந்து ஓடினார்கள். சிறிது நேரத்திலேயே 2,000 வீரர்களும் பிஜாரோ தரப்பில் 5 பேர் மட்டுமே இறந்தார்கள். மன்னர் அதாஹுல்பா சிறைபிடிக்கப்பட்டார். பிணைக்கைதியாக ஒரு அறையில் அடைக்கப்பட்டார். அந்த அறையின் கூரை வரை நிரம்ப தங்கமும், இரண்டு அறைகள் கூரை நிரம்ப வெள்ளியும் பிணையாக விதித்தார்கள். ஆனாலும் பெருநாட்டு மன்னரை விடுவிக்கும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. பிணை விதித்தற்கு அதிகமாகவே பெற்றுக் கொண்ட ஸ்பெயினர்கள் அவரை கிறிஸ்துவத்திற்கு மாற வற்புறுத்தினார்கள். பிழைத்து விட்டால், மறுபடியும் படை திரட்டி ஸ்பானியர்களைத் தோற்கடிக்கலாம் என்ற எண்ணத்தில் மன்னரும் கிறிஸ்துவத்திற்கு மாறினார். ஃபிரான்சிஸ்கொ என பெயர் சூட்டப்பட்டார்.

ஆனாலும் அவரை ஸ்பானியர்கள், நம்பிக்கை துரோகமாக, தொண்டையில் மரக்கட்டையால் குத்திக் குத்தி கொன்று, கிறிஸ்துவ முறைப்படி புதைத்தார்கள்.

பெரு நாட்டு இந்தியர்களின் ஜனத்தொகை 93% குறைந்தது. மிஞ்சியது 7% மக்கள் மட்டுமே. ஆண்கள் அடிமை ஆக்கபட்டார்கள். பெண்கள் கற்பழிப்புக்கு உள்ளானார்கள். வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. மாடமாளிகைகளும் கோயில்களும் இடிக்கப்பட்டன.

ஒரு தலைமுறையில் பெருநாடு கிறிஸ்துவ நாடாக மாறியது. ஸ்பெயின் கலாசாரம் திணிக்கப்பட்டது. பெருநாட்டின் இன்கா நாகரீகமும் கலாசாரமும் அழிக்கப்பட்டது.

ஸ்பானியர்களின் வெற்றிக்குக் காரணம் அவர்களின் போர் தந்திரங்கள், நய வஞ்சகம், சூழ்ச்சி, நவீன ஆயுதங்களான துப்பாக்கி, பீரங்கி, வெடிகுண்டுகள் மற்றும் மதவெறி.

இராம, லட்சுமணர்கள், தண்டகாரண்யத்தில் நுழைந்தபோது அவர்களிடம் வில், அம்பு, வாள், கதை, ஈட்டி போன்ற அந்த காலத்தில் சிறந்த ஆயுதங்கள் இருந்தன. போர்பயிற்சி பெற்றவர்கள். வாலியிடம் ஆயுதங்கள் இல்லை. பெருநாட்டு மக்களைப் போல் தண்டகாரண்ய மக்களிடமும் ஆயுதங்கள் இல்லை. யுத்தம் செய்யவும் தெரியாதவர்கள்.

இராம லட்சுமணர்களின் நோக்கமெல்லாம் தங்களின் தந்தை தசரதரை தோற்கடித்த தண்டகாரண்ய மன்னர்களைப் பழி வாங்குவதும், நாரதர் முன்பே தெரிவித்ததைப் போல், 100 ராஜ்யங்களை நிறுவுவதே ஆகும். இதை எப்படி சாதித்தார்கள் என்பதை நூலினுள் புகுந்து அடுத்து வரும் பக்கங்களில் காண்போம்.

- ஆ.ரா.ராமசாமி

அத்தியாயம் – 1

இராமர்

இராமரின் பிறப்பு

அயோத்தியின் அதிபரான தசரத மன்னர் புத்ரபேரின்றி அதற்கான வாய்ப்பும், வயது முதிர்ச்சியின் காரணத்தால், நிறைவேறாததால் புத்ரகாமேஷ்டி என்ற யாகம் செய்தார். யாக முடிவில் ஆஹவனீய அக்னியிலிருந்து பிரம்மதேவரின் தூதன் தோன்றி ஒரு தங்க கலசத்தில் பாயசம் ஏந்தி வந்து, தசரதருக்குக் கொடுத்தார். அதை இராணிகள் அருந்தினால் புத்ர பேறு அடைவார்கள் என கூறி மறைந்து விட்டார். அதை அருந்திய இராணிகள் உடனே கர்ப்பம் தரித்து இராம, லட்சுமண, பரத, சத்ருக்ன என்ற நான்கு மகன்களையும், சாந்தா என்ற மகளையும் ஈன்றெடுத்தார்கள்.[1]

கி.மு. 4342ம் ஆண்டு சித்திரை மாதம் வளர்பிறை நவமி திதியில் புனர்பூச நட்சத்திரத்தில் இராமரும், பரத, சத்ருக்னர்கள் பூச நட்சத்திரத்திலும், இலட்சுமணர்ஆயில்ய நட்சத்திரத்திலும் முறையே பிறந்தார்கள்.[2]

நமது சனாதன தர்மத்தின் இரண்டாவது குருவான வேத வியாஸர் மகாபாரதத்தை எழுதும்போது, அதன் ஒரு பகுதியாக இராமனின் கதையை 700 பாடல்களில் இராமோபாக்யானம் என்னும் தலைப்பில் எழுதினார். அதில் புத்ரகாமேஷ்டி யாகத்தைப் பற்றியோ பாயாசத்தைப் பற்றியோ சொல்லப்படவில்லை. இந்த இராமோபாக்யானம் என்கிற மூலராமாயணமே வால்மீகி ராமாயணத்திற்கு ஆதார நூலாக அமைந்தது.

தனக்கும், பார்யைகளுக்கும் புத்ரோத்பத்தியின் காலம் தாண்டிய பிறகும் (60 வயதிற்கு பிறகு), எதிர்பாராமல் நான்கு பிள்ளைகள் உண்டாயினர் என தசரதர் மகிழ்ச்சியடைந்தார்.

1. AVR PP 34-62, 2. Indian chronology

கௌஸல்யைக்கு அரை பங்கு பாயாசமும், கைகேயிக்கு கால் பங்கு மற்றும் அரைக்கால் பங்கு என இரு முறையும், நற்பண்புகளில் மேலான சுமித்திரைக்கு அரைக்கால் பங்கு மட்டுமே தசரதரால் கொடுக்கப்பட்டன. அதிகம் அருந்திய கௌஸல்யை, மிகவும் பலசாலியாகவும், திறமைசாலியுமான இராமரை ஈன்றெடுத்தாள். இருமுறை பாயாசம் அருந்திய கைகேயி, பரத, சத்ருக்னர் என்ற இரட்டையர்களை ஈன்றெடுத்தாள். அரைக்கால் பங்கே அருந்திய சுமித்திரை சேவகனான இலட்சுமணரை ஈன்றெடுத்தாள்.

தற்கால விஞ்ஞான உலகில் செயல்படும் செயற்கை கருவூட்டலுக்கு இதுவே வழிகாட்டியாக இருக்கலாம். வீர்யத்தின் அளவு மற்றும் சக்தியே பிறக்கும் மகவுக்கு பலமும், அறிவும், ஆரோக்கியமும் தருமென்பதற்கு இதுவே ஆதாரம்.

தசரதர் தன் புத்திரர்களை க்ஷத்ரிய தர்மபடி வளர்த்தார். அவர்கள் குருகுலவாசம் செய்து, வேத சாஸ்திரங்களைப் பயின்றார்கள். யுத்த பயிற்சியில் சிறப்பு பெற்று வல்லுனர்களாகத் திகழ்ந்தார்கள்.

இராமர் க்ஷத்ரிய தர்மத்தை நேசித்தார். அதை கடைபிடிப்பதையே தன் கடமை என்ற கொள்கை உடையவராக இருந்தார். அவருடைய க்ஷத்ரிய தர்மமே மேலான புகழையும் கீர்த்தியையும் அளித்து முடிவில் மோட்சமும் அளிக்கும் என்ற கொள்கைப் பிடிப்பில் இருந்தார்.

காஷ்மீரில் 7ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட விஷ்ணு தர்மோத்தர புராணத்தில் இராமர் எப்பொழுதும் கையில் தங்கத்தினாலான சிவலிங்கத்தை வைத்திருப்பார் என சொல்லப்பட்டிருக்கிறது.[3]

இந்நிலையில், மன்னர் தசரதரின் தர்பாருக்கு வந்த விஸ்வாமித்ர மகரிஷி, பதினைந்து வயதே நிரம்பிய இராமரை தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தாடகை வதம்

அக்காலக் கட்டத்தில் தென்னிந்திய வேத விற்பன்னர்களுக்கும், ஆரியவர்தனமாகிய வடநாட்டிலுள்ள முனிவர்களுக்கும் இடையே போட்டியும், விரோதமும் இருந்தது. தென்னிந்தியாவான தண்டகாரண்யத்தின் ஏகசக்ரவர்த்தியாக விளங்கிய இராவணேஸ்வரரின் உறவினர்களில் ஒருத்தியான தாடகை ஆயிரம் யானைகளின்

3. P 138 ALL. வால்மீகி இராமாயணம், அயோத்யா காண்டம்.

(இதை ஒரு யானை என்றே கொள்ள வேண்டும்) பலம் உடையவள். அவள் மாரீசனின் தாய். பிறவியில் ரூபலாவண்யத்தில் சிறந்து விளங்கியவள். சுந்தன் என்ற யட்சனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். சுந்தனை, அகத்தியர் சாபத்தினால் கொன்று விட்டார். பழி வாங்கும் விதமாக, தாடகையும் மாரீசனும் அகஸ்தியரைத் தாக்க முயன்று தோல்வியடைந்தார்கள். அவர்களை அகஸ்தியர், ''விகாரமான ராட்சதர்களாக மாறி மனிதர்களைக் கொன்று தின்று அலைவீர்களாக'' என சபித்தார். அவர்கள் அகஸ்தியர் வாழ்ந்த ஆஸ்ரமத்தை அழித்தார்கள். (இந்த இடம் சரயு நதி பாயும் பிராந்தியத்தில் உள்ளது). அவர்கள் ஆரிய வர்தனத்தில் உள்ள யாக யக்ஞுங்களை, மாம்ஸங்களை வீசியும், யாகம் செய்பவர்களை அடித்து துரத்தியும், யாகம் நிறைவேறாமல் தடுத்தார்கள்.

விச்வாமித்ரர் கேட்டுக் கொண்டபடி, சற்றும் யோசிக்காமலும், விசாரிக்காமலும், இராமர் தாடகையை அம்பினால் அடித்துக் கொன்றார்.[4]

500 பிராம்மணர்கள், சித்தி அடைவதற்காக, யாகம் செய்த போது மாரீசன் அவர்களைத் தடுத்தார். இராமர் ஒரு அம்பினால் அவரின் ஒரு கண்ணைக் கொத்தித் துரத்திவிட்டார்.[5] ரிஷிகளும் வேத விற்பன்னர்களும் மகிழ்ச்சியடைந்து இராமரைப் புகழ்ந்தார்கள்.

தாடகையின் வதம் இராமருக்கு தண்டகாரண்யத்தின் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்த ஆர்வமளித்தது.

இராமர் வில்லை உடைத்தது

ஜனக மகரிஷியின் அரண்மனையில் ஒரு வில் இருந்தது. அதை நாணேற்றி வளைப்பவருக்கே, ஜனகர் தன் வளர்ப்பு மகளான ஜானகியை (சீதையை) மணம் முடிப்பேன் என்று தெரிவித்திருந்தார். விச்வாமித்ரர் இராம லட்சுமணர்களை மிதிலைக்கு அழைத்துப் போனார்.

மிதிலைக்குள் நுழைந்த இராமரை உப்பரிகையிலிருந்து சீதை ஆசையுடன் பார்த்தாள். இதை கவித்துவமாக கம்பர், ''அவளும் நோக்கினாள்; அண்ணலும் நோக்கினார்'' என வர்ணிக்கிறார்.

விச்வாமித்ரர் கேட்டுக் கொண்டதின்படி, இராமர் அந்த வில்லை வளைத்து நாணேற்ற சம்மதித்தார். அந்த சிவதனுசை ஐயாயிரம்

4. பாலகாண்டம் சர்க்கம் 26, பக்கம் 135 CRS. 5. P164, AVR, திபேத் ராமாயணா.

பலசாலிகளான வீரர்கள் எட்டு சக்கரங்கள் பொருத்திய வண்டியில் ஏற்றி இழுத்து வந்தார்கள். (இது ஒரு கவித்துவ வர்ணனை).

அந்த வில்லை இராமர் தன் கால் கட்டைவிரலால் அழுத்தவே அது நிமிர்ந்து நின்றது. அதைப் பிடித்து வளைக்கவே அது 'டமார்' என்று உடைந்தது.

அந்த வில் பல தலைமுறைகளாக, ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக (தட்சயாக காலத்திலிருந்து) ஜனகரின் அரண்மனையில் இருந்ததாக கூறப்படுகிறது. மிகவும் உறுதியான தேக்கு மரத்தினாலோ அல்லது தேவதாரு மரத்தினாலோ செய்யப்பட்டிருந்தாலும் கூட அது காலக்கிரமத்தினால் பலமிழந்து உளுத்து போயிருக்க வேண்டும். அதனால் வளைக்க முயன்றபோது உடைந்தது. இரும் பினால் செய்யப்பட்டிருந்தால் அது வளையுமே தவிர உடையாது. இந்த சம்பவங்கள் எல்லாம் அதீதமான கவித்துவ வர்ணனையே.

சீதா ராம கல்யாணம்

ஜனகர் வாக்களித்தபடி எட்டு வயது நிரம்பிய சீதைக்கும், 16 வயது நிரம்பிய இராமருக்கும், வைதீக முறைப்படி சீரும் சிறப்புமாக திருமணம் நடந்தது. புதுமண தம்பதிகள் அயோத்தியில் சந்தோஷமாக காலம் கழித்தார்கள். இவ்விதம் 12 ஆண்டுகள் நிரம்பிய நிலையில், இராமரின் 28வது வயதில், அவருக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்விக்க மன்னர் தசரதர் தீர்மானித்தார்.

பாண்டிய மன்னன் சம்பரனுடன் நடந்த தேவாசுர யுத்தத்தில், தேவேந்திரனுக்கு ஆதரவாக போரிட்ட தசரதர், பாண்டியனுடைய தாக்குதலை சமாளிக்க முடியாமல், இருமுறை புறங் கண்டபோது கைகேயி அவரைக் காப்பாற்றினாள். இருமுறை காப்பாற்றியதற்காக அவளுக்கு இரண்டு வரங்களைக் கொடுத்தார்.[6] ஆனால், வேதவியாசர் அருளிய இராமோபாக்யானம் என்ற மூலராமாயணத்தில், ஒரு வரம் மட்டும் தான் தந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இராமருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய தசரதர் சுபமுகூர்த்த நாளை குறித்து விட்டார். ஆனால், பட்டமகிஷிகளிடம் தெரிவித்து அவர்களின் சம்மதத்தைக் கோரவில்லை.

''பரதன் வேறு ஜில்லாவுக்குச் சென்றிருக்கிறான். அவன் இல்லாத சமயத்தில் உனக்கு பட்டாபிஷேகம் செய்து முடிக்க

6. P-32, சர்க்கம் 9. அயோத்யா காண்டம், CRS.

வேண்டுமென'' தசரதர் இராமரிடம் கூறினார். ஆனால், கைகேயியை மணக்கும் போது அவளது மகனே தனக்குப் பின் மன்னராவான் என்று சத்தியம் செய்து கொடுத்திருந்தார்.[7]

தசரதர் இராமருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய தீர்மானித்ததை, எப்படியோ தெரிந்து கொண்ட கூனி என்கிற மந்திரை, முன்னொரு காலத்தில் தசரதர் கொடுத்த வாக்குறுதியைப் பயன்படுத்தி இராம பட்டாபிஷேகத்தை நிறுத்தும்படியும், பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்தால்தான், அவள் கௌசல்யைக்கு அடிமையாகாமல் மகாராணி என்ற பெருமையுடன் வாழலாம் என்றும், கைகேயிக்கு தூபம் இட்டாள். இந்த போதனையை ஏற்றுக் கொண்ட கைகேயி, இராமர் மரவுரி தரித்துக் கொண்டு பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும் என்றும், பரதனுக்கே பட்டாபிஷேகம் நடக்க வேண்டுமென்றும் பிடிவாதமாக நிர்பந்தித்தாள்.[8] காம வயப்பட்டு தன்னையிழந்து, அவளுடைய கால்களைப் பிடித்துக் கொள்ள முயன்றும், எவ்வளவோ கெஞ்சியும் அவள் பிடிவாதமாக இருந்து விட்டாள். தசரதரும், வேறு வழியின்றி சம்மதித்து இராமரைக் காட்டிற்கு செல்ல ஆணையிட்டார்.

“இராமரை காட்டிற்கு செல்ல பணித்ததையும், பரதனுக்கே இளவரசர் பட்டாபிஷேகம் என்பதை ஜனகருக்கு (சீதையின் தந்தை) தெரிவிக்கவில்லை. அவர் பரதரின் பட்டாபிஷேகத்தை நிறுத்தி விடுவாரோ என்ற பயமே காரணம். அதேபோல் மந்திரி பிரதானிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் தெரியபடுத்தவில்லை.''

‘‘தன் வம்ச சரித்திரத்தையும், இராஜ்ய ரகசியங்களையும் நன்கு அறிந்திருந்த இராமரும், பரதனும், தசரதர் கொடுத்திருந்த வாக்குறுதியையும் அறியாமல் இருக்க முடியாது. அப்படியிருக்க தனக்கு அபிஷேகம் செய்து கொள்ள சொன்னபோது அவருக்கு பூர்வ விருத்தாந்தங்களை ஞாபகப்படுத்தாமல் அபிஷேகம் செய்ய சம்மதித்தார்.''[9]

வனவாச நிமித்தம், இராமரை தண்டகாரண்யத்திற்கு செல்ல பணித்த தசரதர் தான் இராவணேஸ்வரரிடம் போரிட மாட்டேன் என்று சொல்லியிருந்தார்.

நாரதரிடம், இராமர் ‘‘நான் நாளை தண்டகாரண்யம் செல்வேன். சீதையைக் காரணமாகக் கொண்டு, இராவணனை அவனுடைய

7. P149, VR, All. 8. குறிப்பு 10. CRS அயோத்யா காண்டம்.
9. அயோத்யா காண்டம் குறிப்பு 4, 5, 10

குலத்துடன் நாசம் செய்வேன்'' (பக்கம் 27ல் காண்க) என்றார். நாரதர், “இராமர் நூற்றுக்கணக்கான இராஜ்யங்களை நிறுவுவார்'' எனக் கூறினார்.

இராமரும் சீதையும் மரவுரி தரித்துக் கொண்டு தங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் சோகத்தையும் அடக்கி கொண்டு, தாய் கௌசல்யையிடம் காட்டிற்கு செல்ல உத்தரவு வாங்க சென்றனர். அவர்களின் சோகத்தைக் கண்ட தாய் அதிர்ச்சியடைந்து கண்ணீர் மல்க செய்வதறியாமல் திகைத்து நின்றாள். இராமர், “சீதைக்கும் எனக்கும் துக்கத்தைத் தரக்கூடிய ஒரு பெரிய பயம் நேர்ந்திருக்கிறது. மகாராஜா என் பட்டாபிஷேகத்தை நிறுத்தி விட்டார். பரதனை இளவரசனாக ஆக்கப் போகிறார். நாங்கள் 14 வருஷங்கள் தண்டகாரண்யத்தில் வசிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்.

இப்பொழுதே இங்கிருந்து புறப்பட்டு போகிறேன். தங்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன். மனுஷ்ய சஞ்சாரமே இல்லாத காட்டில் தேன், கிழங்கு, பழங்கள் முதலியவற்றைத் தின்று மாமிசத்தை விலக்கி தபஸ்வியாக வசிக்கப் போகிறேன்,''[10] என கூறினார். (ஆனால் இராம, லட்சுமண, சீதை மாமிசத்தையே புசித்ததாக சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது - சி.ஆர்.சீ.,)

இராமர் வனவாசத்திற்கு சித்தமாகி தசரதரிடம் விடைபெறும்போது அவரிடம் பிரார்த்தனை செய்தார். “மகாராஜா! இதோ இருக்கும் என் தாய் கௌசல்யா தேவி மிகவும் வயஸ் சென்றவள். உத்தமமான நடத்தையுள்ளவள். அவளுடைய எல்லையற்ற வருத்தத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. தங்களிடத்தில் கோபிக்கவும் இல்லை; நிந்திக்கவும் இல்லை. தாங்கள் கேட்டவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வரங்களைக் கொடுக்கிறவர் அல்லவா? நானும் ஒரு வரம் கேட்கிறேன். என் தாய் என்னை விட்டுப் பிரிந்த துக்கத்தைத் தாள மாட்டாள். இது வரையில் அவளை பட்டமகிஷி என்று மரியாதையோடு நடத்தி வருகிறீர்கள். இது உண்மையோ? இனிமேல் நான் பிரார்த்தித்தற்காக அதிக மரியாதையோடும் ஆதரவோடும் அவளை நடத்த வேண்டியது. அவள் என்னை நினைத்து, நினைத்து என்னை விட்டு பிரிந்த துக்கத்தால் மரணமடையாமல் அவளைப் பாதுகாக்க வேண்டுமென்று தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

10. PP - 87 - 89 VR. CRS.

அவள் ஒன்றும் அறியாதவள். இனிமேல் அவளுக்குத் தங் களைத் தவிர வேறு கதி இல்லை. அவளுடைய சத்ருக்களின் கையில் அவளைக் காட்டிக் கொடுக்க கூடாது. என்னைப் பார்க் காமல் இருப்பதற்கு அவள் பொறுக்க மாட்டாள். என்னைக் காணாமல் அந்த துக்கத்தால் அவள் உயிரை விடாமல் இருக்க வேண்டும். நான் காட்டிலிருந்து திரும்பி வந்து என் தாயை யமனுடைய பட்டணத்தில் போய் தேடும்படி வைக்காமல் இருப்பது தங்களுடைய பொறுப்பு.'' (சி.ஆர்.சீ., விமர்சனம்: தசரதர் கௌசல்யையிடத்தில் நடந்து கொண்ட விதத்தை இராமன் வெகு சாதுர்யமாக வெளியிட்டு கண்டிக்கிறார்.)

கௌசல்யை மகாராஜாவிற்கு பிரியமான பத்தினி இல்லை.[11] கௌசல்யையைப் போல் சுமித்ரையும் தசரதரின் பிரீதியை அடையவில்லை.[12]

இராம லட்சுமணர்கள் சீதையுடன் ரதத்தில் ஏறி வனத்திற்குப் புறப்பட்டார்கள். சுமந்திரர் அவர்களுடன் வழி அனுப்புவதற்காகச் சென்றார்.

கங்கை கரையில் அவர்களை இறக்கி விட்டு திரும்பும் நிலையில், சுமந்திரரிடம், இராமர் கண்களில் நீர் தளும்ப, கை கூப்பிக் கொண்டு, துக்கத்தால் கண்கள் சிவக்க, பொலபொலவென்று கண்ணீர் உதித்து, ''பரதனிடத்தில், என்னிடத்தில் விசேஷ பிரீதி வைத்துள்ள கௌசல்யையை, உன் தாயைப் போல் உபசரிக்க வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்று கூறினார்.

சீதை தீனமாக அழுது கொண்டு, ரதத்தையும் என்னையும் பார்த்துக் கொண்டே நின்றாள் என்று மகாராஜாவிடமும் மகாராணி களிடம் கூறுங்கள் எனத் தெரிவித்தாள்.[13]

சுமந்தரரிடம், இலட்சுமணர் சொல்லியனுப்பியது:

''மக்களுக்கும், பிராணிகளுக்கும் பிரியமில்லாத ஹிதத்தைச் செய்யாத தசரதர் பிரியமில்லாதவராகவும் அவருடைய நாசத் தைக் கோருபவராகவும் இருக்கிறார். கைகேயி, பரதன் போன்ற வர்களைத் தவிர, மற்ற எவருக்காவது அவரிடத்தில் (தசரதரி டத்தில்) பிரியம் இருக்குமா? இராமரைக் காட்டிற்குத் துரத்தி, குடிகளையும் பிராணிகளையும் விரோதித்துக் கொண்ட தசரதர் சகல லோகங்களையும் சந்தோஷப்படுத்தி அர்த்தமுள்ள ராஜா

11. அயோத்யா காண்டம் சர்க்கம் 74 PP 298, 299. 12, Ibid P194,
13. Ibid சர்க்கம் 25 PP 244, 245

வாக, எப்படி இருக்க முடியுமென்று, தங்களிடத்தில் சொல்லச் சொன்னார்.'' சுமந்தரரும் அப்படியே தெரிவித்தார்.

கங்கையைத் தாண்டி இராமர் சென்று விட்டதை சுமந்தரரிடம் கேட்ட மக்கள் இராமரைப் பற்றி, ''அவர் எங்காவது யாக யக்ஞங்கள் நடந்தால் அது நியாயமாக சம்பாதிக்கப்பட்ட திரவியத்தால் நடக்கிறதா என்றும், எங்காவது விவாகம் நடந்தால் அங்கு சென்று இரு திறத்தாருடைய ஜாதி, குலம், ஐச்வர்யம், சீலம் முதலியவை ஒத்திருக்கிறதா என்றும் கவனிப்பார்'' என புலம்பினார்கள் (இராமர் வர்ணாஸ்ரம தர்மத்தை பாதுகாத்தார் என்பது புலனாகிறது).[14]

மிக்க துக்கமடைந்த கௌசல்யை தசரதரை நோக்கி, ''சுமந்திரர் வந்திருக்கிறார். ஏன் அவரிடம் பேசாமல் இருக்கிறீர்கள்? கைகேயிக்கு வரங்களைக் கொடுக்கும் போது சுலபமாகவும் சந்தோஷத்துடன் கொடுத்து விட்டு பிறகு, அதனால் இராமன் காட்டிற்குப் போக, இப்பொழுது அதைப் பற்றி வெட்கமும் வருத்தமும் படுவது என்ன ஆச்சரியம்? இதெல்லாம் அப்பொழுது ஞாபகம் இல்லையா? எழுந்திரும்; எது போனாலும் போகட்டும்; யார் என்ன கஷ்டப்பட்டால் தங்களுக்கு என்ன? சத்யம் தவறாமல் இருந்ததால் மிகுந்த புண்ணியம் சம்பாதித்தீர்கள். அது போதாதா? எனது துக்கத்தை நானே அனுபவிக்க வேண்டும். என்னைத் திருப்தி செய்ய தாங்களும் துக்கப்படுவது போல் காட்டிக் கொண்டால் என் துக்கம் தணியுமா? ஆகையால், அந்த வேஷம் வேண்டாம்; துக்கப்படாமல் இருந்தால் யாராவது தூஷிப்பார்களோ என்று பயந்து லோகாபவாதத்திற்கு கட்டுப்பட்டு பிரலாபிக்கிறீர்களா? அது வேண்டாம். இன்று கைகேயி இருக்கிறாள் என்று நினைத்து பயந்து இராமரைப் பற்றின சமாசாரத்தைக் கேட்காமல் இருக்கிறீர்களா? அந்த பயம் வேண்டாம். கைகேயி இவ்விடத்தில் இல்லை. தைரியமாகப் பேசுங்கள்'' என்று கதறி மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தாள். இதைக் கேட்ட தசரதர் ஒன்றும் தோன்றாமல் உட் கார்ந்திருந்தார்.

இராம லட்சுமணர்கள் சொல்லி அனுப்பிய செய்தியையும், கௌசல்யாவின் கதறல் பிரலாபத்தையும் கேட்டு மனமுடைந்த தசரதர், மூர்ச்சை அடைந்து கீழே விழுந்து உயிரிழந்தார். பரதன் வரும் வரை அவர் பிரேதத்தைக் காப்பாற்ற எண்ணெய் கொப் பரையில் வைத்தார்கள்.

14. அயோத்யா காண்டம் P 239, CRS.

அதேசமயம் கேகய தேசத்தில் ராஜகிருஹமென்ற ஊரிலிருந்த பரதன் ஒரு கனவு கண்டார். "என் பிதா தலைமயிரை விரித்துக் கொண்டு, அழுக்குப் படிந்த சரீரத்தோடு சாணத்தில் விழுந்து கிடந்தார். தேகமெங்கும் எண்ணெய் பூசப்பட்டிருந்தது. மகாராஜா கருத்த ஆடையை உடுத்திக் கொண்டு, கருத்த இரும்பால் செய்யப்பட்ட ஆஸனத்தில் உட்கார்ந்தார். கருப்பு நிற பெண்களும், மஞ்சள் நிற பெண்களும் அவரைச் சுற்றி நின்று கொண்டு கைகொட்டிச் சிரித்தார்கள். பிறகு சிவப்பு சந்தனத்தையும் சிவந்த மாலையையும் தரித்துக் கொண்டு, கழுதைகளால் பூட்டப்பட்ட ரதத்தில் உட்கார்ந்து அதிவேகமாக தெற்கே போனார். சிவப்பு வர்ணத்தை அணிந்த ராட்சசி பயங்கரமான முகத்துடன் சிரித்துக் கொண்டு மகாராஜாவை கட்டி இழுத்தாள்."

கங்கையைத் தாண்டி இராம லட்சுமணர்கள் மத்ஸ்ய தேசத்தை அடைந்தார்கள். அங்கே காட்டு பன்றி, ரிச்யம், பிருஷதம், மகாகுரு என்ற சுத்தமான மிருகங்களைக் கொன்று அதன் மாமிசத்தை சாயங்காலத்தில் ஒரு பெரிய மரத்தடியில் அமர்ந்து போஜனம் செய்தார்கள். விடியற்காலை அங்கிருந்து புறப்பட்டு பரத்வாஜ மகரிஷியின் ஆஸ்ரமத்திற்குப் போனார்கள். அவரின் உபசரிப்பை ஏற்றுக் கொண்டு, மறுநாள் காலை சித்ரகூடத்திற்கு புறப்பட்டார்கள். போகும் வழியில் யமுனை நதிக்கரையில் பல மிருகங்களைக் கொன்று போஜனம் செய்தார்கள்.[15]

மறுநாள் காலையில் இராமர் லட்சுமணரை எழுப்பி நாம் பயணத்தைத் தொடரும் காலம் நெருங்கி விட்டது என்றார். (14 ஆண்டுகள் வரையில் அன்னபானமின்றி, தூக்கமில்லாமல், கடுமையான விரதத்தை அனுஷ்டிப்பவனே இந்திரஜித்தைக் கொல்லக்கூடியவன் என்று அவன் வரம் பெற்றவன் என்றும் அதனால் லட்சுமணர் வனவாச காலம் முழுவதும் தூங்குவதில்லை என்றும் வழங்கும் பாரம்பரியக் கதைக்கு வால்மீகியில் ஆதார மில்லை) உடனே இலட்சுமணர் தூக்கம் தெளிந்த பின் சித்ர கூடத்தை நோக்கி பயணம் செய்ய ஆரம்பித்தார்கள்.

சித்ரக்கூடத்தை அடைந்து அங்கு தங்குவதற்கு பர்ணசாலை கட்டிக் கொண்டார்கள். கிரகபிரவேசத்தில் தேவதைகளுக்கு பலி கொடுக்க கறுத்த மானைக் கொன்று அதன் மாமிசத்தை இரத்தம் வற்றும் வரை அக்னியில் சமைத்தார்கள்.[16]

15. அயோத்யா காண்டம் P 233 CRS. 16, Ibid P235

அங்கு சந்தோஷமாகவும், தங்கள் இஷ்டப்படி சஞ்சரித்தும், ஜலக்கிரீடை செய்வது முதலிய சுகங்களையும் (இராமர் சீதையுடன்) அனுபவித்துக் கொண்டிருந்தார். இராமர் சீதையிடம் "மந்தாகினி நதியில் இறங்கி நாம் ஜலக்கிரீடை செய்யலாம் வா! அதற்கு வேண்டிய பொருள்கள் சித்தமாயிருக்கின்றன. பயத்தையும் வெட்கத்தையும் விட்டு, உன் தோழிகளுடன் விளையாடுவது போல் என்னுடனும் விளையாடு" என்று கூறினார். ஜலக்கிரீடை முடிந்து சோர்ந்து போன இராமர் கரையேற எத்தனித்தபோது அவரை சீதை பலவந்தமாக கையைப் பிடித்து இழுத்து ஜலக்கிரீடையைத் தொடர்ந்தாள்.

பிறகு, ராமர் ஒரு மலைசாரலில் உட்கார்ந்து, அங்குள்ள ருசியுள்ள சுத்தமான வெந்த மாமிசத்தை, தான் முதலில் ருசி பார்த்து, அந்த துண்டுகளை சீதைக்குக் கொடுத்து அவளை சந்தோஷப்படுத்தினார்.[17]

இந்நேரத்தில், அயோத்தியில், பரதன் தன் பிதாவிற்கு ஏதேனும் நடந்திருக்குமோ என்று அஞ்சி வெகு வேகமாக சரஸ்வதி நதியையும் பாலைவனங்களையும் தாண்டி அயோத்தியை அடைந்தார். தசரதரின் மரணத்தை அறிந்து, தன் மூத்த தாயான கௌசல்யை தேவிக்கு வருத்தம் தெரிவித்து ஆறுதல் கூறினார். தன் தாய் செய்த பாபத்திற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என தெரிவித்து, பிரதிக்ஞை செய்தார். இதற்கு பரத பிரதிக்ஞை என்று பெயர். நமது சனாதன தர்மமான இந்து மதத்தில் எந்தெந்த பாவங்கள், அவைகளுக்கு என்னென்ன தண்டனைகள் என்று விவரிக்கிறார். இதைப் படிப்பதால் தான் இந்து மக்கள் தர்ம நியாயம் உள்ளவர்களாகவும், மற்ற மதத்தினரிடமும் அன்பு செலுத்துபவர்களாகவும் போற்றப்படுகிறார்கள்.[18]

பரதன் தசரதருக்கு பலவிதமான மணமுள்ள கட்டைகளாலான சிதை அமைத்து பித்ருமேத விதிப்படி சாமவேத மந்திரங்களுடன் தகனம் செய்தார்.[19]

(நியாய விரோதமாக நடந்து கொண்டதால், அந்திய காலத்தில் புத்ர சோகத்தால் பீடிக்கப்பட்டு, நான்கு புத்திரர்கள் இருந்தும், ஒருவனாவது சமீபத்தில் இருந்து செய்ய வேண்டிய வைதீக லௌகிக கிரியைகளைச் செய்யாமல் போனதும், அவருடைய பிரஜைகளே அவரை நிந்தித்ததும், அவருக்கு கர்ம தண்டனை

17. அயோத்யா காண்டம் P 355- 356 CRS.
18, Ibid 301, Ibid 395 - 396 Items 20 Notes

என்று காட்டப்படுகிறது. இராம லட்சுமணர்கள் வனம் சென்று விட்டார்கள், பரதன் பாட்டன் வீட்டிற்கு சென்றுவிட்டார். சத்ருக்னன் அங்கில்லையா? அதைப் பற்றி சொல்லப்படவில்லை.[20]

இதனால் பத்ம புராணத்தில் ஒருவனுடைய கர்ம பலனை கொஞ் சமேனும் மாற்ற முடியாதென்பது காட்டப்படுகிறது. கைகேயிக்கு, தசரதர் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக, இராமருக்கு செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றத் தவறியதால் அவருக்கு நல்ல கதி கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது.

ஜடாயுவுக்கும், பாமர மக்களுக்கும், பரிவாரங்களுக்கும் சொர்க் கத்தை அடுத்த ஸாந்தனிக வாசம் கிடைத்தது. ஆனால், தசரதருக்கு மாத்திரம் தேவதைகள் வசிக்கும் சொர்க்க லோகத்திற்கு மேலான ஸ்தானம் கிடைக்கவில்லை.[21]

இராமர் காட்டிற்கு துரத்தப்பட்டதைக் கேட்டு மனம் வருந்திய பரதன், அவரை நாட்டிற்கு திரும்ப அழைத்து வர தன்னுடைய தாய்மார்கள், சத்ருக்னன், மந்திரி பிரதானிகள் மற்றும் நால்வகை படைகள், யானைகள், குதிரைகள், பல்லக்குகளுடன் சித்ரகூடத்திற்கு விரைவாக வந்தார். வரும் வழியில் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் அளிக்கப்பட்ட மிகச் சிறந்த உபசரிப்புகளையும், பலவிதமான குன்றளவிலான மாமிச உணவுகளையும் ஏற்றுக் கொண்டார்.

பரதனைக் கண்ட இராமர், நீ இந்த கோரமான காட்டிற்கு வந்த காரணம் என்ன? மகாராஜா பிழைத்திருக்கிறாரா? உன்னை விட்டு அவர் பிரிந்திருக்க மாட்டாரே! ஆகையால், துக்கம் மேலிட்டு சொர்க்கத்தை அடைந்தாரா? கைகேயி என்னை காட்டிற்கு அனுப்பியதால் உன்னை மக்கள் துரத்திவிட்டார்களா? (சி.ஆர்.சீ.,) இப்படியிருந்தால் பரதனுடன் ஸைன்யமும் பரிவாரங்களும் சுமந் திரரும் மற்றவர்களும் எப்படி வந்திருக்க முடியும்?) கொடிய துக்கங்களை அனுபவித்த என் தாய் சௌக்கியமா? என் பக்திக்கும் பிரியத்திற்கும் பாத்திரமான உன் தாய் கைகேயி தன் எண்ணப்படி காரியம் முடிந்து,[22] சௌக்கியமாய் இருக்கிறாளா? (இந்த விஷயத்தை இராமர் குறிப்பிட்டு அழுத்தமாக சொல்லியது அர்த்தபுஷ்டியானது, கவனிக்கத்தக்கது. மேலும், தசரதருடைய நிலைமையைப் பற்றி கேட்ட கேள்விகளுக்கு பரதன் பதில் சொல்ல இடங்கொடுக்காமல், அதைக் கேட்காமல் அவன் வந்த காரியம்

19, 20, 21. அயோத்யா காண்டம் P 395, 396, item. 20 Notes.
22. Ibid P 368-369 CRS

இன்னதென்று அறியாமல், அந்த சமயத்திற்கு அவசியமில்லாத, இராஜநீதி தர்மத்தை விஸ்தாரமாக அவனுக்கு உபதேசிப்பது பொருந்தவில்லை. இந்த விஷயத்தை எல்லோருக்கும் உபதேசிக்க வேண்டுமென்று பிற்காலத்தில் எவராலாவது இங்கே சேர்க்கப் பட்டிருக்கலாம்.)

வசிஷ்ட பகவானை நம் முன்னோர்கள் பூஜித்தப்படி நீயும் பூஜித்து வருகிறாயா? புரோகிதர்கள் ஹோமம் செய்து, உனக்கும் அதை செய்ய ஞாபகம் மூட்டிக் கொண்டிருக்கிறார்களா?

புரோகிதர்கள், மந்திரிகள், யுவராஜாவை உளவு பார்த்து பரிட்சிக்க வேண்டியதில்லை. மற்றவர்களை மாறு வேஷம் பூண்ட தூதர்களை ஒவ்வொருவருக்கு மூன்று வீதம் ஏற்படுத்தி, ஒரு வருக்கு ஒருவர் தெரியாமல் தங்களுடைய வேலைகளை ஒழுங்காக செய்கிறர்களா இல்லையா என்று பரிசோதித்து வருகிறாயா?[23]

உன் இராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டு திரும்பி வந்திருக்கும் சத்ருக்களை பலமற்றவர்கள் என்று அலட்சியம் செய்யாமல் இருக்கிறாயா?

பௌத்தன், சார்வாகன் மற்றும் நாஸ்திக பிராம்மணர்கள், கேவலம் தர்க்கத்தைப் பிரயோகித்து, நமது தர்மசாஸ்திரங்கள் இகத்திலும், பரத்திலும் பலனற்றவை என வாதிப்பவர்கள். அவர் களுடன் பழகாமல் இருக்கிறாயா? சகல விதத்திலும் மிக சிறந்த தான நமது இராஜதானியை ஜாக்கிரதையாக ரட்சித்து வருகிறாயா?

உன்னைச் சேர்ந்த பெண்களிடத்தில் அனுகூலத்துடன் நடந்து கொள்கிறாயா? அவர்கள் இதர புருஷர்களுடன் கலந்து பேசாமல் ஜாக்கிரதையாக பாதுகாக்கிறாயா? அவர்கள் சொல்வதை நிஜ மென்று நம்பாமல் இருக்கிறாயா? மிகவும் சஞ்சலமான தன்மை யுள்ளவர்கள் ஆகையால் அவர்கள் இரகசியத்தைக் காப்பாற்ற முடியாதவர்கள். ஆகையால் அவர்களிடம் இரகசியங்களைச் சொல்லாமல் இருக்கிறாயா?

உன் வரவுகள் அதிகமாகவும், செலவுகள் குறைவாகவும் இருக்கிறதா? நட்டுவன், விகடன், பாடகன், கூத்தாடி முதலிய தகாதவர்களுக்கு உன் திரவியத்தை ஏராளமாக கொடுக்காமல் இருக்கிறாயா?[24]

உன் பாரியைகள் மலடிகளாகாமல் உன் மனதின்படி நடக் கிறார்களா?

23. அயோத்யா காண்டம் P 373, 24. Ibid P 375

இம்மாதிரியான இராஜதந்திர ரீதியான அறிவுரைகளைக் கேட்ட பரத சத்ருக்னர்கள் இராமரை தசரதருக்கு தர்ப்பண சிரார்த்தம் செய்ய கோரினார்கள். இராமரும் மந்தாகினி நதி நீரை அள்ளி எடுத்து ஜலதர்ப்பணம் செய்தார்.

மனிதன் எந்த அன்னத்தை உண்கிறானோ அதையே அவனுடைய தேவதைகளும் உண்கிறார்கள். இராம லட்சு மணர்கள் தர்பங்களையும், கூர்ச்சத்தையும் தெற்கு நுனியாய் பரப்பி, அதன் மேல் புங்கை, இலந்தை கலந்த பிண்ணாக்கை வைத்து சபிண்டீகரண சிரார்த்தம் செய்து, "நாங்கள் பிரியமாக புசிக்கும் இந்த ஆகாரத்தை தாங்களும் புசிக்க வேண்டும்" என்றார்கள். ஆனால், அவர்கள் வனவாசத்தில் பலவிதமான மாம்ஸங்களையும், காய், கனி, கிழங்குகளையும் சாப்பிட்டார்கள் என்றே சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்கள் அரிசி சோற்றை சாப்பிடவில்லை என்றும் புங்கை இலந்தை பிண்ணாக்கைத் தான் சாப்பிட்டார்கள் என்றும் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பரதனும் பட்ட மகிஷிகளும் மந்திரி பிரதானிகளும் ஆயிரக்கணக்கில் படைசூழ வந்தவர்களிடம் பிண்டம் செய்வதற்கு அரிசியும் எள்ளும் இல்லாமலா இருந்திருக்கும்? அந்த பெரும் ஸைன்யத்தின் நடுவே வசிஷ்டரும் பிராம்மணர்களும், புரோகிதர்களும் இருந்திருக்க வேண்டுமே! இது அவர்களுக்கு, உள் மனதில் தசரதர் மேல் இருந்த கோபத்தையும் வருத்தத்தையுமே பறை சாற்றுகிறது.[25]

இதைக் கவனித்த கௌசல்யை, சுமித்ரையிடம் "சகல போக பாக்கியங்களயும் அனுபவிக்கத் தகுந்த நமது பர்த்தாவிற்கு ஒரு நாளும் கண்டறியாத இந்த புங்கை பிண்ணாக்கை இராமன் போட்டான் என்பதைக் காட்டிலும் துக்ககரமான விஷயம் வேறுண்டோ?" என்று பிரலாபித்தாள்.[26]

கைகேயியின் கோபத்திற்கு பயந்தோ, ஆசையால் மயங்கியோ, அவளின் பிடிவாதத்தால் முன் பின் யோசிக்காமலேயே நமது பிதா இந்த அதர்மத்தைச் செய்து விட்டார். ஆகவே தாங்கள் நாடு திரும்ப வேண்டுமென்று பரதன் இராமரிடம் வேண்டினார். இராமர் பதிலுக்கு சமாதானமாக, "நமது பிதா கேகய இராஜனிடத்தில், கைகேயியை விவாகம் செய்யும்போது, உமது பெண்ணுக்கு புத்திரன் பிறந்தால் அவனுக்கே என் இராஜ்யத்தைத் தருகிறேன் என்று பிரதிக்ஞை செய்தார். யுத்த சமயத்தில் கைகேயி செய்த உபகாரத்திற்கு பிரதிபலனாக இரண்டு வரங்களையும் அளித்தார்.

25. அயோத்யா காண்டம் P 384.

26. Ibid P 384.

அவர் இந்த பிரதிக்ஞையை எப்படி மறந்தார் என்றால், விவாக காலத்திலும், ரதி சமயத்திலும், உயிரை இழக்கும் தருணத்திலும், செல்வம் யாவும் கொள்ளையடிக்கப்படும் போதும், மித்ரனைக் காப்பாற்றவும் பொய்யை சொல்லலாம். அதனால் பாபமில்லை. இதை சுமந்திரர் மூலம் அறிந்திருந்தேன்."[27]

சமாதானமடைந்த பரதன் தன் அண்ணனின் பாத ரட்சைகளை அவரின் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டு அயோத்தி திரும்பினார்.

சித்ரகூடத்து ரிஷிகள், இராமர் மேல் கோபம் கொண்ட ராட்சதர்களால் தங்களுக்கு ஆபத்து நேருமோவென்று பயந்து, மனக்கவலை அடைந்து, ஜாடைமாடையாக இராம லட்சுமணர் களைப் பார்த்து பேசிக் கொண்டார்கள். சித்ரகூடத்தை விட்டு வேறு இடத்திற்கு குடிபுக தீர்மானித்தார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாக இராமர் உறுதியளித்தும் அவர்கள் திருப்தி அடையாததால், காரணம் என்ன என்று வினவ, அவர்கள், "சமீபத்தில் ஜனஸ்தானம் என்ற நகரம் உண்டு. அங்கு கரன் என்ற ராட்சதன் வசிக்கிறான். அவன் இராவணேஸ்வரன் தம்பி. அவனுக்கு உன்னிடம் எல்லையற்ற துவேஷமுண்டு. நீ இந்த ஆஸ்ரமத்தில் இருக்கும் வரை தபஸ்விகளை உபத்ரவித்துக் கொண்டே இருப்பார்கள்" எனக் கூறினார்கள். (சூர்ப்பநகையை இராமர் அங்கஹீனம் செய்ததைக் காரணமாகக் கொண்டு கரன் யுத்தத்திற்கு வந்தான் என்றும் ராட்சத நாசத்திற்கு அதே காரணமென்று பொதுவாக எண்ணப்படுகிறது. முன்பு தாடகை, சுபாகு முதலியவர்களை அவர் கொன்றதே இதற்கு காரணமாக இருக்கலாம்) உங்களை எவ்விதத்திலும் காப்பாற்றுகிறேன் என்று இராமர் உறுதியளித்தும், அவர்கள் ஆஸ்ரமத்தைக் காலி செய்து வெளியேறி விட்டார்கள். இராமரும் அடர்ந்த, இருண்ட காடான தண்டகாரண்யத்தில் பிரவேசித்தார்.

தண்டகாரண்யம் என்பது தண்டகன் என்ற தென்னிந்திய மன்னனுக்கு (அரக்கனுக்கு) சொந்தமான பிரதேசம். அது தற்கால சத்திஷ்கர் மாநிலத்திலிருந்து தெற்கே கன்யாகுமரி வரை பரவியிருந்தது. மிக சில மக்களே படித்தவர்கள். யுத்தம் செய்ய தெரியாதவர்கள். வெள்ளந்தியான காட்டுவாசிகள்.

தண்டகாரண்யத்தில் நுழைந்தவர்கள் சரபங்க மகரிஷியின் ஆஸ்ரமத்திற்குச் சென்று அவரிடம் ஆசி பெற்றார்கள். ஆஸ்ரம வாசிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்கள். ஆன்மீகப் புனிதர்

27. Ibid P 400 CRS

களைக் கொல்பவர்களைக் கொல்ல தான் விரும்புவதாக இராமர் சூளுரைத்தார். ஆனால் சீதை, "கபடமற்ற ஜீவர்களைக் கொல் லாதீர்கள். தண்டக வன அரக்கர்களை கொல்வதில் ஈடுபட வேண்டாம். ஏனென்றால், காரணமின்றி கொல்பவன் வெற்றி பெற லாம்; ஆனால், பிறகு பெருமையிருக்காது" எனத் தடுத்தாள். ஆனால் இராமர், "நான் ரிஷிகளுக்குக் கொடுத்த வாக்கை மீற மாட் டேன். நான் ரிஷிகளைக் காப்பாற்றுவேன்" என்று பதிலுரைத்தார்.

அங்கிருந்து கிளம்பி, பஞ்சவடிக்கு ஜடாயு என்ற கழுகு அரசு னுடன் சென்றார்கள். அங்கு செல்லும் வழியை அகஸ்தியர் காட்டினார். பஞ்சவடி என்றால் ஐந்து அரச மரங்கள் உள்ள இடம். இது தற்போதைய மகாராஷ்ட்ர மாநிலத்தில் நாஸிக், திரயம்ப கேஸ்வரம் அருகில், கோதாவரி நதிக்கு தெற்கு கரையில் உள்ளது. அங்கு பர்ணசாலை அமைத்துக் கொண்டு இராம லட்சுமணர்கள் சீதையுடன் 13 ஆண்டுகள் வாழ்ந்தனர்.

இராமர் சீதையுடன் தனியாக இருக்க, இலட்சுமணர் ஓரிடம் சகல வசதிகளுடன் கூடியவாறு அமைத்துக் கொடுத்து, அவர்களை சந்தோஷப்படுத்தினார்.[28]

சூர்ப்பநகை மானபங்கம்

இராம லட்சுமணர்கள் ஆஸ்ரமத்தில் காலம் கழித்து கொண்டி ருக்கையில் சூர்ப்பநகை (முறம் போன்ற நகங்களை உடையவள்; மற்றொரு பெயர்; சந்திரநகை. அதாவது, பிறைசந்திரனைப் போன்ற நகங்களை உடையவள்). ''தானாகவே அங்கு வந்து அவர்களைக் கண்டாள். "ஜடை முதலிய தபஸ்வி வேடம் தரித்து, பார்யையுடன் வில்லும் கையுமாக நீ இங்கே வர வேண்டிய காரணம் என்ன? இது ராட்சதர்கள் வசிக்கும் இடம் என்று தெரியாதோ?" என்று அதட்டி விசாரித்தாள்.

இராமர் தன் விருத்தாந்த்தைச் சொல்லி, "நீ யார்? இங்கு வந்த காரணமென்ன" என்று வினவினார். பதிலுக்கு அவள், "நான் சூர்ப்பநகை. இராட்சசாதிபதியான இராவணேஸ்வரர் என்ற பலவான் என் அண்ணன்; விச்ரவசின் புத்திரன்; கும்பகர்ணரும், விபீஷண கர தூஷணர்களும் என் அண்ணன்கள்" என்று விவரித்து தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி கூறினாள். இராம லட்சுமணர்கள் மறுக்கவே, வேறு வழியின்றி இராமரின் உத்தரவின் பேரில் இலட்சுமணர் அவளின் காதுகளையும்

28.ஆரண்ய காண்டம் P42, சர்க்கம் 15 CRS

மூக்கையும் அறுத்தெறிந்து அங்கஹீனம் செய்தார். (இதனால் இராம லட்சுமணர்கள் தன் நாட்டில் அத்துமீறி பிரவேசித்ததைக் கண்டித்தாள் என்றும், அதுவே இராம - இராவண யுத்தத்திற்கும் ஒரு காரணம் என்றும் புலனாகிறது. அக்காலத்தில் பகை நாட்டு ஆநிரைகளையும், பெண்களையும் கவர்ந்து வருவது இராஜதந்திர வழக்கமாகும்.)

சம்பூகன் கதை

இந்த கதை ஜைன இராமாயணத்தில் வேறு விதமாக சொல் லப்பட்டிருக்கிறது. சூர்ப்பநகையின் மகன் சூர்யஹஸ் என்கிற தெய்வீக வாளைப் பெற (தண்டகாரண்யத்தில்) தலைகீழாகத் தொங்கிக் கொண்டு தபஸ் செய்து கொண்டிருந்தான். அந்த வாள் அவனை நோக்கி ஆகாயத்திலிருந்து வந்து கொண்டிருக்கும்போது, அங்கு தற்செயலாக வந்த இலட்சுமணர் அதைப் பார்த்து, பாய்ந்து எடுத்துக் கொண்டார். அதனுடைய வலிமையை சோதிக்க நினைத்து அருகிலிருந்த மூங்கில் புதரை வெட்டினார். மூங்கில் புதருக்குள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த சம்பூகனின் தலை வெட்டப்பட்டு விட்டது.

தன் மகனைத் தேடி வந்த சூர்ப்பநகை, சம்பூகன் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு பதைபதைத்துக் கதறி அழுதாள்.

தன் மகனைக் கொலை செய்தவனைப் பழி வாங்க இரத்த கறையையும் பாதசுவடுகளையும் பின்பற்றி இராம லட்சுமணர்கள் இருந்த இடத்தை அடைந்தாள். அவர்களைக் கண்டதும் சூர்ப்ப நகை, காதலால் காமவெறி பிடித்து, அவர்களை திருமணத்திற்கு அழைத்ததாக வர்ணிப்பது, தாய்மையையும் தாய்பாசத்தையும் இழிவுபடுத்தும் நீசர்களின் நகைச்சுவை நாடகமே!

கரதூஷணர்களின் வதம்

தன் மகன் சம்பூகனைக் கொலை செய்தும், தன்னை மான பங்கமும் செய்த இராம லட்சுமணர்களைக் கொன்று, வஞ்சம் தீர்க்கும்படி அண்ணன்களான கரதூஷணர்களிடம் கண்ணீரும் கம்பலையுமாக கதறியழுது வற்புறுத்தினாள்.

கரதுஷாணர்கள் உடனே 14,000 வீரர்களுடன் இராமருடன் போரிடக் கிளம்பினார்கள்.

கரனிடம், இராமர், "லோகத்தில் சர்வ ஜந்துக்களையும் துன் புறுத்தும் பாபிகளை அழிப்பதற்காக சக்ரவர்த்தி தசரதர் என்னை

அனுப்பினார்,'' என கூறினார். (இப்படி தசரதர் சொன்ன தாக தெரியவில்லை). இராமர் அவர்கள் அனைவரையும் தன்னந் தனியாக தன் திறமையான வில் பயிற்சியால் கொலை செய்தார்.[29]

இராமர் வெற்றி வீரனாக இருப்பதைக் கண்ட ரிஷிகள் அவரை வாழ்த்தினார்கள். ஆஸ்ரமத்தில் நுழைந்த இராமரின் தேகமெங்கும் பாறைகள், பாணங்கள், மரங்கள், ஆயுதங்கள் முதலியவற்றால் காயம் ஏற்பட்டிருந்தது. இரத்தம் தாரை தாரையாக பெருகியது. அவரின் வெற்றியையும் தீரத்தையும் கண்ட சீதை, ஆசை மீறி என்ன செய்கிறோம் என்றே அறியாமல் தானே அவரை வலுவில் அணைத்து கொண்டாள்.

முன்பு அயோத்தியில் இருக்கும்போது இராமரை நோக்கி, "உன்னை புருஷன் என்று நம்பி மோசம் போய், என் பிதா என்னை உனக்கு மனைவியாக கொடுத்து விட்டாரே! நீ ஆண்மையற்ற பேடியென்று அவர் அறியவில்லையே! ஐயோ கெட்டேன் என்று சொல்லி விட்டோமா?'' என்று வருத்தப்பட்டு, அந்த அபசாரத்திற்கு பரிகாரமாக வெட்கத்தையும் அடக்கத்தையும் விட்டு தானே வலிய வந்து அணைத்தாள்.[30]

மாரீசன் வதம்

தாடகையின் மகனான மாரீசனுக்கு இராவணேஸ்வரர் மாமன் முறை. மாரீசனை அணுகி, இராவணர் சீதையை அபகரித்து வர உதவி கோரினார். மிகுந்த வற்புறுத்தலுக்கு பின், வேறு வழியின்றி மாரீசன் உதவி செய்ய சம்மதித்ததும், சீதை வாழைமரம் சூழ்ந்த தோட்டத்தில் இராமரின் ஆஸ்ரமத்தில் இருப்பதை இராவணர் காட்டினார். (இந்த இடம் எப்படி தெரியுமென்று சொல்லப்பட வில்லை. சி.ஆர்.சீ.,)

மாரீசனும் தங்கமயமான புள்ளிமான் உருவமெடுத்து, பலவித விளையாட்டு சேஷ்டைகளால், சீதையின் உள்ளத்தைக் கவர்ந்தார். இலட்சுமணர் இந்த புள்ளிமான் மாரீசனே என்று எச்சரித்தார். ஆனால் இராமர் "இதை சீதை விரும்புகிறாள். இந்த பொன் மானும் ஆகாசத்தில் நட்சத்திரங்களில் ஒன்றான மிருகசீர்ஷம் என்ற மானும் லோகத்தில் சிறந்தவை'' என கூறினார். சீதையை இலட்சுமணரிடம் ஒப்படைத்து விட்டு "நாம் செய்ய வேண்டிய சகல காரியங்களும் இவளையே பொறுத்திருக்கிறதல்லவா?''[31]

29. ஆரண்ய காண்டம், சர்க்கம் 29, P 69. 30 Ibid Page 80-81. CRS
31. ஆரண்ய காண்டம் சர்க்கம் P 119.

(பக்கம் 15ல் காண்க) என்று தெரிவித்து விட்டு மானைப் பிடிக்கக் கிளம்பினார். மாய மானும் வெகு தூரம் ஓடி ஒளிந்து, துரத்தி வந்த இராமரை வெறுப்படைய செய்தது. இராமர் அதை பாணத்தால் எவ்வளவோ சிரமப்பட்டு அடித்து கொன்றார்.[32] மாய மானும் திட்டமிட்டபடி "ஹா சீதே! ஹா இலட்சுமணா' என்று இராமரின் குரலால் கத்தி உயிரை விட்டது.

சீதையின் உள்மனம்

இந்தக் குரலைக் கேட்ட சீதை, இராமருக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்று யூகித்து, இலட்சுமணரை உடனே சென்று இராமரைக் காப்பாற்றச் சொன்னாள். இலட்சுமணர் இது மாய மானின் சூழ்ச்சி என்று பலவாறு விவரித்தும், கேட்காத சீதை இலட்சுமணரைத் தூஷித்து, "துஷ்டா! இரக்கமற்றவனே! க்ரூர ஸ்வபாவம் உள்ளவனே! மகாபாபி! இட்சவாகு குலத்தை கெடுக்க வந்த பித்ரு துரோகி! என் மேல் ஆசை கொண்டு இராமருக்கு இந்த அபாயம் எப்பொழுது நேரப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாயோ? உன்னைப் போன்ற சக்களத்தி மகன்கள் இப்படி சொல்வது ஆச்சரியமா? நீங்கள் கொடியவர்கள், துஷ்டர்கள், ருத்ராட்ச பூனையைப் போல் நிஜ ஸ்வரூபத்தை மறைத்து நடப்பவர்கள்! எந்த பாபத்தையும் செய்வீர்கள்! மகாயோக்யனைப் போல் எங்களுடன் வனத்திற்கு இதற்காகவா வந்தாய்? என்னைக் கைப்பற்ற வந்தாயோ அல்லது பரதன் உன்னை அனுப்பினானா? உங்களைப் போன்ற அல்ப ஜந்துக்களை மனதாலும் நினைப்பேனா? நீ பார்த்து கொண்டிருக்கும் போதே உயிரை விடுவேன். (சீதையின் உள்மனத்திலிருக்கும் எண்ணங்கள் இதன் மூலம் தெரிகிறது.)[33]

இந்த அபசார வார்த்தைகளைக் கேட்ட இலட்சுமணர் மிகவும் மன வருத்தமடைந்து, "பெண்களின் ஸ்வபாவம் எப்பொழுதும் இப்படியே! அடக்கம், பொறுமை, வினயம் முதலிய நற்குணங்கள் இல்லாமல் சபல சித்தத்துடன் கூர்மையான வார்த்தைகளால் புருஷர்களுடைய இதயங்களைப் பிளப்பதும், பரம சிநேகிதம் உள்ளவர்களை விரோதிகளாக்குவதும் அவர்களுடைய தொழில். உங்களுடைய கூர்மையான வார்த்தைகளைக் கேட்டு என் மனம் பதறுகிறது. மகா ஞானியான ஜனகருக்கு எங்கே வந்து பிறந்தாய்? இந்த வார்த்தைகள் நாராச பாணங்களைப் போல் என் இதயத்தை பிளக்கின்றனவே! நியாயமான மார்க்கத்தை விட்டு விலகாத

32, Ibid சர்க்கம் 57, P 162. 33 Ibid சர்க்கம் 45, P123. CRS

என்னைப் பார்த்து இந்த குரூரமான வார்த்தைகளைச் சொன்னாய் அல்லவா? இந்த வனத்திலுள்ள அனைத்து பஞ்ச பூதங்களும் இதற்கு சாட்சி. கோரமான பாபத்தை என் மேல் சுமத்தின உன்னைச் சுட வேண்டும். சீ! சீ! இப்படிபட்ட நீ இப்பொழுதே இறந்தால் உலகங்கள் சுகப்படும். பெண்களுக்கே துஷ்டத்தனம் சுவபாவமோ? நீயும் ஒரு பெண்ணா?'' என்று பதிலுரைத்து வனத்திற்கு புறப்பட்டார்.

சீதை இலட்சுமணரிடம், ''நீ இராமரை அழைத்து வராவிட்டால் கோதாவரியில் குதிப்பேன்! தூக்குப் போட்டு கொண்டு உயிரை விடுவேன்! விஷத்தைத் தின்பேன்'' எனக் கடிந்து மகாதுக்கத்துடன் இரண்டு கைகளாலும் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதாள்.[34]

மாரீசனின் கபடமான கதறலைக் கேட்டும், காட்டில் கண்ட அபசகுனங்களாலும் பதறிப் போன இராமர், உடனே ஆஸ்ரமத் திற்கு திரும்பும் போது, எதிரில் இலட்சுமணர் வருவதைக் கண்டார். பதறி, நடுங்கிப் போன இராமர், சீதை இலட்சுமணரைத் தகாத முறையில் தூற்றியதைக் கேட்டறிந்தார். ''எப்படி இருந்தாலும் நீ இங்கு வந்தது மிகவும் பிசகு. சீதை கடிந்து சொன்ன வார்த்தைகளைப் பொறுக்க முடியாமல் நீ இங்கு வந்தது மிகவும் பிசகு. பெண்களுக்கு விவேகமில்லாமல் இருப்பது சகஜம். அதிலும் சீதை கோபத்தால் புத்தி மயங்கியிருப்பவள். விவேகியான புருஷன் அதை லட்சியம் செய்யலாமா?'' (இந்த உபதேசத்தை கைகேயி விஷயத்தில் தான் (இராமர்) ஏன் காட்டக் கூடாது? இலட்சுமணரின் நிலையில் இராமர் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்று தெரியவில்லை). நீ கோபத்திற்கு இடம் கொடுத்து என் கட்டளையை மீறியது நல்லதல்ல. அவள் உன்னால் பூஜிக்கத் தக்கவள்; பெண்; கோபத்தால் புத்தி சிதறியிருப்பவள். அவளின் வார்த்தைகளை பொறுக்க முடியா விட்டாலும் வேறு எங்கேயாவது மறைந்திருந்து அவளைக் காப்பாற்ற வேண்டும்.''[35]

சி.ஆர்.சீ., விமர்சனம் (இராமனிடத்து போகிறேன் என்று சீதையிடத்தில் சொல்லிவிட்டு, அப்படி செய்யாமலிருப்பது பொய் யல்லவென்றும், சீதையை ஏமாற்றுவதாகாது என்றும் இராமர் உபதேசிப்பது போல் தோன்றுகிறது. ''மாரீசனை விளையாட்டாகக் கொன்றேன். அவனும் என் குரலில் ஹா சீதே! ஹா லட்சுமணா! என்று கத்தி உயிரை விட்டான்''. (முன்பு கஷ்டப்பட்டு கொன்றேன், என்று சொன்ன இராமர், இப்பொழுது விளையாட்டாகக் கொன் றேன்) என்று ஜம்பமடித்துக் கொள்கிறார்.) (பக்கம் 27 காண்க)

---

34. ஆரண்ய காண்டம் P-124, 125. 35. Ibid சர்க்கம் 59, P 166-167. CRS

ஜடாயு சொல்லிய தகவல்

சீதை காணாமல் போனதால் பலவாறு அழுது புலம்பிக் கொண்டு அவளத் தேடிச் சென்ற வழியில், அவர் வம்சத்தினரின் மித்ரரனான ஜடாயு என்ற கழுகைக் கண்டார்கள். ஜடாயு இராமரிடம் நீங்கள் தேடிக் கொண்டிருக்கிற சீதையை இராவணன் என்ற துஷ்ட ராட்சதன் கொள்ளயடித்துக் கொண்டு போய்விட்டான். அவன் விஸ்ரவசின் மகன். குபேரனின் தம்பி என்று சொல்லிய வாறே உயிரை விட்டார். இராவணர் இருக்கும் இடத்தைச் சொல்ல வில்லை.

இராமர் மான் மாமிசத்தால் பிண்டம் செய்து, தர்பங்களின் மேல் வைத்து, ஜடாயுவுக்கு தர்ப்பணம் செய்தார்.

சி.ஆர்.சீ., வியாக்யானம்:

ஜடாயு இராவணர் இருக்குமிடத்தைச் சொல்லாததால் சீதை யைத் தேடிக் கொண்டே போனார்கள். சுக்ரீவனும், இராவணர் இருக்குமிடத்தை அறியேன் என்று சொல்கிறான். விச்வாமித்ரர் அவர்கள் யாகத்தை அழித்த மாரீச, சுபாஹு பற்றிச் சொன்னார். அவர்களுக்கு பக்கபலமாக இராவணர் வருகிறார் என்றதும், தசரதர் அவரைப் பற்றிய வரலாற்றை முழுவதும் அறிந்தவராதனால் நான் அவர்களுடன் யுத்தம் செய்ய மாட்டேன் என்றார். ஆகவே இராவணனைப் பற்றிய விஷயங்கள் யாவும் இராமருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

தரசதர் சொல்லாவிட்டாலும் சுபாகு, மாரீசர்களை ஜெயித்ததைக் கேட்ட பிறகாவது, அவர்கள் இராமருக்கு சொல்லியிருக்க வேண் டும்.

யாகத்தைக் கெடுக்க வந்த ராட்சசர்களையும் இராவணரையும் பற்றிய விஷயங்களை, இராமர் விஸ்வாமித்திரரிடம் கேட்டிருப்பார். அவரும் சொல்லியிருப்பார்.

சூர்ப்பநகை, இராம லட்சுமணர்களிடத்தில் இராவணரின் வரலாற்றைச் சொல்லியிருந்தாள்.

அவளை அங்கஹீனம் செய்தவர்களைப் பழிவாங்க கர, தூஷணர்கள் வந்தது போல், தங்கையைக் கெடுத்தவனையும், சகோதரர்களை கொன்றவர்களையும் தண்டிப்பதற்கு, யுத்தத்திற்கு வருவாரென்றும் இராமர் எதிர்பார்த்தது சரியே!

தண்டகாரண்யத்து ரிஷிகளிடமிருந்து இராவணாதி ராட்சசர்களின் விவரங்கள் யாவற்றையும் அறியாமலிருக்க மாட்டார்கள்''[36]

இட்சவாகு வம்சத்தில் பிறந்த அனரண்யன் என்பவரை இராவணர் கொலை செய்தார். அவர் இறக்கும் போது ''என் வம்சத்தில் பிறக்கும் இராமன் உன்னைக் கொல்வான்'' என்று சபித்தான். இது இராமருக்கு தெரியப்பட்டிருக்கும். (பழி வாங்கு வதற்காகவே இராமர் காட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கலாம்).

இராம லட்சுமணர்கள், தேவர்களுக்கும் இந்திரனுக்கும் கடவு ளான விஷ்ணுவைப் போல் காட்டிற்குள் நுழைந்தார்கள். அச்சுதா! அமரர் ஏறே! என்று போற்றுகிறோம்.[37]

கபந்தன் தந்த தகவல்

சீதையைத் தேடிக் கொண்டே போன இராம லட்சமணர்கள் கபந்தன் என்ற ராட்சசனைக் கண்டார்கள். அவன் அவர்கள் குலத்திற்கு சத்ருவான தேவராஜனை யுத்தத்திற்கு அழைத்ததினால் தண்டிக்கப்பட்டான். அவனை இராம லட்சுமணர்கள் கொலை செய்து சாபவிமோசனம் கொடுத்தார்கள். அவன் ''சுக்ரீவன் உங்களுக்கு உதவி செய்வான். அவனுடைய அண்ணன் வாலி அவனிடமிருந்து ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டு அடித்துத் துரத்தி விட்டான். சீதையைத் தேடிக் கொண்டிருக்கும் உங்களுக்கு சகல உதவிகளையும் செய்வான். தங்களை விட்டு பிரிந்த துக்கத்தால் தவிக்கும் சீதை இராவணனுடைய இராஜதானியான இலங்கையில், இருந்தாலும், எவ்விடத்தில் இருந்தாலும், தேடி கண்டுபிடித்து தங்களிடத்தில் ஒப்புவிப்பான்" என அறிவித்தான்.

மேலும், கபந்தன், ''எதிரில் இருக்கும் சபரியைக் கேட்டால் அவள் தங்களுக்கு எல்லா உதவியும் செய்வாள்'' என்றும் கூறி னான். இவ்வாறு அவர்கள் இராவணனின் இராஜதானி இலங்கை என்று தெரிந்து கொண்டார்கள்.

சபரியைச் சந்தித்த இராம லட்சுமணர்கள் அவள் செய்த மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். சபரி அவர்களுக்கு தெரிவித்தது: "சீதா தேவியை இராவணன் அபகரித்துச் சென்றான். இச்சமயம் அவள் இலங்கா நகரத்தில் இருக்கிறாள். இங்கே சமீபத்தில் பம்பா நதிகரையில் ருஷ்யமுகம் என்ற பெரிய மலை இருக்கிறது. அங்கே மகாபலசாலியான வானர ராஜன் சுக்ரீவன் தனது நான்கு மந்திரிகளுடன் வசித்துக் கொண்டிருக்கிறார்.

36, ஆரண்ய காண்டம். சர்க்கம் 68, PP 180. 194, 195 CRS, 37. VR. All P 424.

அவருடைய சகோதரன் வாலியிடம் உள்ள பயத்தினால் அங்கே ஒளிந்து வாழ்கிறான். தாங்கள் அங்கே சென்று அவனுடன் நட்பு கொள்ளுங்கள். அவனுடைய உதவியால் தங்கள் காரியங்கள் யாவும் நன்கு நடைபெறும்''.[38]

ஆரண்ய காண்டத்தில் சர்க்கம் 58 முதல் 68 வரை மனைவியைப் பிரிந்த இராமர் விரகதாபத்தால் புலம்புகிறார். இலட்சுமணர் அவரை பலவாறாகத் தேற்றி ஆறுதல் செய்கிறார். இந்த கட்டத்தில் வால்மீகி தன் அற்புதமான கவிதை திறமையை வெளிபடுத்துகிறார்.[39] இக்காலத்தில் கவிதை எழுத கரு கிடைக்காமல் தவிக்கும் இளம் கவிஞர்களுக்கு இது ஒரு ஊற்றுக்கண்.

கிஷ்கிந்தா காண்டம்

அனுமாரிடம், இலட்சுமணர் "இவர் இராமர், சகல ஐஸ்வர் யங்களையும் இழந்து காட்டில் இருக்கையில் யாரோ ஒரு ராட்சசன் இவருடைய பார்யையை எடுத்து போனான். அவன் இன்னா ரென்று தெரியவில்லை. நானும் இராமரும் சுக்ரீவனை சரணம் அடைந்திருக்கிறோம். தன் குடிமகனான சுக்ரீவனை நாதனாக அடைய விரும்புகிறார் என் தமையன். சுக்ரீவனுடைய ஒத்தாசையை விரும்புகிறார். தன் குடிமகனாகவும் அல்ப ஜந்துவாயும் இருக்கும் சுக்ரீவனுடைய கிருபையை இவர் இப்போது விரும்புகிறார். (கோசல ராஜ்யத்திற்கு மாத்திரம் அரசனான இராமனுக்கு சுக்ரீவன் எப்படி குடிமகன்? சி.ஆர்.சீ.,) உன் அரசனான சுக்ரீவன், தன்னை சரணடைந்த இவரிடத்தில் கிருபை செய்ய வேண்டும் என்றார்." அனுமார் வானர ரூபத்தை மீண்டும் எடுத்துக் கொண்டு இராம லட்சுமணர்களைத் தன் தோளில் ஏற்றிக் கொண்டு சுக்ரீவன் இருக்குமிடத்திற்குப் போனார்.[40]

அனுமார், சுக்ரீவனிடத்தில் ''இவருடைய பார்யையை இராவணர் எடுத்து போனார். (முரண்: எடுத்துப் போனது இன்னாரென்று தெரியவில்லை என்று இலட்சுமணர் சொல்லியிருந்தார். அனு மாருக்கு இராவணன் என்று எப்படி தெரியும்? சி.ஆர்.சீ.,) ஒரு பெண்ணைப் பற்றி தங்களைச் சரணமடைகிறார்.

''அனுமார் அக்னி மூட்டி, அதன் சாட்சியாக, இராமரும் சுக்ரீவனும் தங்கள் கைகளைப் பிடித்து கொண்டு "நம் இருவருக்கும் சுக துக்கங்கள் பொது. என் அண்ணன் வாலி என்னை ஏமாற்றி என் பார்யையை எடுத்து கொண்டு ராஜ்யத்திலிருந்து துரத்தி

38. அத்யாத்ம ராமாயணம் ப. 175, 39. ஆரண்ய காண்டம் ப. 58–68,
40. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் ப. 22 CRS

விட்டான். நான் பயத்தில் இருக்கிறேன். தாங்கள் அந்த பயத்தை தீர்க்க வேண்டும் என்று கூறினார். இராமரும் பதிலுக்கு "உன் பார்யையை எடுத்து போன வாலியைக் கொல்லுகிறேன்," என பிரதிக்ஞை செய்தார்.

இராமர், "வாலி உன்னைக் கடுமையாகத் தண்டித்திருந்தால் அவனைக் கொல்வேன். அல்லது சமாதானம் செய்விக்கிறேன்," என உறுதியளித்தார். என் தமயன் என்று பெயர் பெற்ற சத்ருவை இப்பொழுதே கொன்று, என் துக்கத்தைப் போக்கி, அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும்படி சுக்ரீவன் பிரார்த்தித்தான். "சுக்ரீவா! கிஷ்கிந்தைக்கு போவோம். நீ எங்களுக்கு சற்று முன்னே போய், உன்னுடன் பிறந்தவன் என்று சொல்லும் வாலியை யுத்தத்திற்கு அழை," என்றார். பிறகு இராம லட்சுமணர்கள் வாலியின் இராஜதானிக்குப் போய் அடர்ந்த, இருண்ட மரங்களுக்குப் பின் மறைந்து நின்றார்கள். சுக்ரீவன் சற்று முன்னே சென்று வாலியை யுத்தத்திற்கு அழைத்தான்.

வாலி அவரின் தந்தையான தேவேந்திரன் கொடுத்த தங்க மாலையை அணிந்திருப்பார். அந்த மாலையை அணிந்து, வாலி ஒருவனிடம் யுத்தம் செய்யும் போது எதிரியின் பலம் குறைந்து, வாலியின் பலம் அதிகரிக்கும். அதனால் வாலியே வெற்றியடைவார்.

ஒரு சமயத்தில் மயனுடைய புத்திரனும், துந்துபிக்கு மூத்த வனுமான மாயாவி என்பவனுக்கும், வாலிக்கும், ஒரு பெண் பற்றி விரோதம் உண்டாயிற்று. (இராவணரின் பார்யை மந்தோதரி மயனின் மகள். மாயாவி மற்றும் துந்துபிக்கு சகோதரி). துந்துபி யிடம் பின்னர் யுத்தம் செய்யும்போது, தங்கமாலையின் மகத் துவத்தால், அவனின் பலம் குறைய ஆரம்பித்து, வாலியின் பலம் அதிகரிக்க, வெற்றியடைந்த வாலி, அவனைக் கொன்று பல யோசனை தூரம் தூக்கியடித்தார்.[41]

வாலி வதம்

வாலியும் சுக்ரீவனும் கோரமாக யுத்தம் செய்தார்கள். சுக்ரீவன் வாலியால் ஜெயிக்கப்பட்டு திரும்பிப் பார்க்க, இராமரைக் காண முடியாமல், பயந்து ரிஷ்யமூக பர்வதத்தை நோக்கி ஓடினான். வாலியும் "இன்று உன்னை விட்டேன்" என்று சொல்லி கிஷ்கிந் தைக்கு திரும்பினார்.

சுக்ரீவன் இராமனிடம் "என்னை சாகும் நிலையில் வைத்து விட்டீர்களே! இது தங்களுக்கு அழகா? வாலியைக் கொல்ல மாட்

41. கிஷ்கிந்தா காண்டம் பக். 35. CRS

டேன் என்று சொல்லியிருந்தால் நான் இங்கிருந்து போயிருக்க மாட்டேன்".

இராமர் பதிலுக்கு ரூபம், நடை, உயரம், குரல், காந்தி, பராக்ரமம், பார்வை, பேச்சு, அலங்காரங்கள் முதலியவைகளில் உங்கள் இருவருக்குமிடையே கொஞ்சம் கூட பேதமில்லை. தவறாக என் பாணம் உன் மீது பட்டுவிடக் கூடாதே என்று தான், நான் பாணத்தை விடவில்லை என்று கூறி சமாதானம் செய்தார்.

பிறகு லட்சுமணரிடம் சுக்ரீவனுக்கு அடையாளமாக புஷ்பங்கள் நிறைந்த ஒரு கொடியை மாலையாக அணிவிக்கும்படி கூறினர். கொடிமாலையை அணிந்த சுக்ரீவன் இராமரின் வார்த்தைகளால் தைரியமடைந்து மீண்டும் கிஷ்கிந்தைக்குப் போய் வாலியை யுத்தத்திற்கு அழைத்தான்.

தங்கமாலையை அணிந்திருந்த வாலிக்கும், வெறும் கழுத்துடன் இருந்த சுக்ரீவனுக்கும் வித்தியாசம் தெரியவில்லை என்பது சரியென்று தோன்றவில்லை.

தாரை, "மீண்டும் சுக்ரீவனுடன் யுத்தம் செய்ய வேண்டாம். சுக்ரீவனை வருவித்து அவனுக்கு யௌவராஜ்யாபிஷேகம், செய் வியுங்கள்.[42] அயோத்தியின் புத்திரர்களான இராம லட்சுமணர்கள் சுக்ரீவனுக்கு உதவியாக சேர்ந்திருக்கிறார்களாம். இராமர் அளவற்ற பராக்கிரமம் உடையவர். யுத்தத்தில் ஜெயிக்க முடியாதவர். பலமடைந்த தங்கள் சகோதரனுடன் பகைக்க வேண்டாம்," என்று கெஞ்சி பிரார்த்தனை செய்தாள். ஆனால், வாலியோ, "என்னை யுத்தத்திற்கு அழைத்தவனை நான் பொறுக்க மாட்டேன். அவனுக்கு சுக்ரீவன் என்று பெயரே ஒழிய வாஸ்தவமாக கழுத்தே இல்லாதவன்" என்றார்.

உண்மையில் வாலிக்கு சுக்ரீவன் மேல் பாசம் இருந்தது. ஆனால், சுக்ரீவனுக்கு வாலியைக் கொல்ல வேண்டுமென்ற வெறி இருந்தது.

சகோதரர்கள் ஆக்ரோஷமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். வாலியின் பலம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. சுக்ரீவனின் பலம் வர வர குறைந்து கொண்டே இருந்தது. திகைத்துப் போய், சுக்ரீவன் இராமர் இருக்கும் திக்கை ஆவலுடன் பார்த்து அவரைத் தேடலானான். இதைக் கண்ட இராமர் கோதண்டத்தை வளைத்து வாலியை மார்பில் அடித்தார்.

42. கிஷ்கிந்தா காண்டம், சர்க்கம் 15, பக். 55 சிஆர்எஸ்

வாலி மகா தேஜஸ்வி; மாவீரன்; ஆனாலும் காந்தியிழந்து, பிரக்ஞையிழந்து, பிரளய காலத்தில் வெளிப்படும் யமனைப் போலும், பரமசிவனுடைய முகத்திலிருந்து புகையுடன் கிளம்பின அக்னியைப் போலும் அது இந்திர குமாரரான வாலியின் மார்பில் விழுந்தது. வாலி இரத்தம் பெருக தரையில் விழுந்தார்.

பிரளய காலத்தில், தெய்வ கதியால், ஆகாயத்திலிருந்து பூமியில் தள்ளப்பட்ட சூரியனைப் போலும், ஒருவராலும் எதிர்க்க முடியாத மகேந்திரனைப் போலும், மகேந்திர புத்திரனான வாலி தங்கஹாரத்தால் அலங்கரிக்கப்பட்டு, காந்தியால் ஜொலிக்கும் முகத்தை உடையவராய், தரையில் கிடப்பதைப் பார்த்த இராம லட்சுமணர்கள் வாலியின் சமீபத்தில் வந்தார்கள்.[43]

அப்பொழுது வாலி, இராம லட்சுமணர்களைப் பார்த்து மதுர மாகவும், கடுமையாகவும் தர்மத்தை அனுசரிக்கும் வார்த்தை களைச் சொல்ல ஆரம்பித்தார். (சி.ஆர்.சீ.,) (வாலி இராமனு டைய செய்கையைக் கண்டித்த வார்த்தைகள் தர்மத்திற்கு விரோத மில்லை என்று வால்மீகி மகரிஷியின் கருத்தென்பதை பலர் கவனிப்பதில்லை. வாலி வதத்தைப் பற்றின இருவித அபிப்ரா யங்களில் வால்மீகி எதை ஆமோதிக்கிறார் என்று இதனால் தெரிகிறது). இராமருக்கு, நேருக்கு நேர் நின்று வாலியுடன் மோதினால், தோல்வியும், மரணமும் நிச்சயம் என்று தெரிந்திருக்க வேண்டும். வாலி தங்கமாலையை அணிந்திருப்பதை சுக்ரீவனும் மாருதியும் சொல்லா விட்டாலும் இராமருக்கு எப்படியோ தெரிந் திருக்க வேண்டும். ஆகவே தான் அவர் மரங்களுக்கு பின்னால் ஒளிந்திருந்து அம்பை எய்திருக்கிறார். இது தற்கால கொரில்லா போர் முறைக்கு முன்னோடியாக அமைந்திருக்கிறது.)

வாலியின் வாதம்

"நீ தசரத சக்ரவர்த்தியின் மகன்; மகாகீர்த்திசாலி; தர்மத்தை அனுஷ்டிப்பதில் பிரியமுள்ளவன்; உத்தம குலத்தில் பிறந்தவன். வேறு ஒருவனுடன் யுத்தம் செய்து கொண்டிருந்தேன். நீ இருப் பதை அறியவில்லை. என்னைக் கொன்றதால் என்ன பெருமை யடைந்தாய்?

இந்திரியங்களை அடக்குவது, சாந்தி, பொறுமை, தர்மபுத்தி, சத்யம், பராக்ரமம், அபராதம் செய்தவர்களை தண்டிப்பது இவை அரசருக்குரிய உத்தம குணங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீ அரசனானதால் உனக்கு நன்றாகத் தெரியும். மேற்சொன்ன

43. கிஷ்கிந்தா காண்டம், சர்க்கம் 17, பக். 59 சிஆர்எஸ்

குணங்களையும் தர்மாத்மாக்களான இட்சவாகு வம்சத்தில் நீ பிறந்தவன் என்பதையும் ஆலோசித்து உன்னை நம்பினேன். தாரை எவ்வளவு தடுத்தும் இலட்சியம் செய்யாமல் சுக்ரீவனுடன் யுத்தம் செய்ய வந்தேன். வந்து பார்க்கையில் உன்னைக் காணவில்லை. நான் வேறு ஒருவனுடன் யுத்தம் செய்து கொண்டு பரவசமாய் இருக்கும் போது நீ என்னுடன் யுத்தம் செய்ய மாட்டாய் என்று நிச்சயித்தேன்.

ஆனால், நீ இவ்வளவு துர்புத்தியுடையவன் என்றும், தர்மாத் வைப் போல் வேஷம் தரித்தவன் என்றும், அதற்கு முற்றிலும் விரோதமான ஸ்வபாவத்தை உடையவன் என்றும், பாபமான ஆசாரத்தை உடையவன் என்றும், புல்லால் மூடப்பட்ட பாழுங் கிணற்றைப் போன்றவன் என்றும், சாதுக்களின் வேஷத்தைத் தரித்த பாவியென்றும், நீறு பூத்த நெருப்பைப் போன்றவன் என்றும், தர்மத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு பிழைப்பவன் என்றும் அறியாமல் போனேனே!

உன் தேசத்திலாவது நகரத்திலாவது நான் வந்து செய்த அபகாரம் என்ன? உனக்காவது செய்த அவமானம் என்ன? குற்றமில்லாத என்னை நீ ஏன் கொன்றாய்? உன்னுடன் யுத்தம் செய்ய வந்தேனா? அதர்மத்தின் அடையாளங்கள் உன்னிடத்தில் காணப்படுகின்றன; நன்றாக விளங்குகின்றன.

நீ காமத்தையே முக்கியமாக உடையவன்; மகாகோபி; கட்டுப் பாடு இல்லாதவன். ஒருவனைக் கொல்ல வேண்டும் என்று தோன்றியவுடன், அவனைக் கொல்கிறவன். தர்மத்தில் உனக்கு சிரத்தையில்லை. பிறர் பொருளைக் கைப்பற்றும் ஆசையுள்ளவன். இந்திரியங்களை அடக்காமல், அவை போகிற வழியிலேயே போய் விடுகிறவன்.

அரசனைக் கொல்கிறவன், பிராம்மணனைக் கொல்பவன், பசுவைக் கொல்கிறவன், திருடன், பிராணிகளைக் காரணமில்லாமல் கொல்வதில் பிரீதியுள்ளவன், ஈஸ்வரனே இல்லை என்பவன், தமையனுக்கு விவாகமாகாதபோது தான் விவாகம் செய்து கொள்பவன், கோள் சொல்பவன், செல்வமிருந்தும் கொடுக்காத லோபி, மித்ரர்களுக்கு துரோகம் செய்பவன், குருவின் பார்யையைக் கெடுப்பவன், இவர்கள் மகாபாபிகள் அடையும் நரகத்திற்குப் போகிறார்கள். இதில் சந்தேகம் இல்லை.

தர்மத்தை அறிந்தவர்கள் என் தோலையாவது எலும்புகளை யாவது தொடக் கூட மாட்டார்கள். ஒன்றுக்கும் உதவாத ஐந்து

நகங்கள் உள்ள என்னை ஏன் கொன்றாய்? இந்த பூமிக்குத் தகுந்த நாதன் நீ இல்லை. என்னிடம் காட்டின பராக்ரமத்தை இராவணனிடத்தில் காட்டவில்லையே! எனக்கு எதிரே நின்று என்னிடத்தில் யுத்தம் செய்திருந்தால் உன்னை அப்போதே கொன்று யமனைத் தரிசனம் செய்ய அனுப்பியிருப்பேனே!

இராவணனை கொல்வதற்காக அல்லவா சுக்ரீவனுடன் சிநேகம் செய்து அவன் இஷ்டப்படி என்னைக் கொன்றாய்? அதே இராவணனை யுத்தத்தில் கொன்று கழுத்தில் கயிற்றால் கட்டி உன்னிடம் இழுத்து வர மாட்டேனா? நீ எனக்கு ஒரு வார்த்தை சொன்னால், முன் காலத்தில் மதுகைடபர்களால் பாதாளத்தில் வைக்கப்பட்ட ஸ்வோஸ்வதாரி என்ற சுருதியை, ஹயக்ரீவர் அவர்களைக் கொன்று, மறுபடியும் பூலோகத்திற்கு கொண்டு வந்தது போல், அவனை உன்னிடத்தில் கொண்டு வர மாட்டேனா?

நான் இறந்த பிறகு சுக்ரீவன் இராஜ்யத்தையடைய வேண்டியது நியாயம். தர்மவிரோதமாக நீ என்னைக் கொன்றது அநியாயம். பிறந்தவன் என்றைக்காவது இறக்க வேண்டியது சகஜம். நீ மறைந்திருந்து என்னைக் கொன்றது நியாயமானால், தகுந்த பதிலை யோசித்துச் சொல்,'' என்று மகாத்மாவான வாலி இராமரைப் பார்த்து பேசாமல் இருந்தார்.[44]

இராமரின் பதில்

"லோகத்தில் சில அரசர்கள் தங்கள் ஆளுகைக்குட்படாத மலைகளையும் காடுகளையும் அபகரித்துக் கொண்டு அங்குள்ள ஜந்துக்களையும் பீடிக்கிறார்கள். (ராமனுடைய செய்கையும் இவ் விதமே: சி.ஆர்.சீ.,) இந்த ஜம்பத்வீபமும் அதிலுள்ள பர்வதங்களும் ஆரண்யங்களும் இட்சவாகு வம்சத்திற்கு உட்பட்டவை (ஜனகர், கேகய ராஜா முதலிய அரசர்கள் தசரதருக்கு கப்பம் கட்டி வந்தார்களா? இதற்கு பிரமாணம் இல்லை: சி.ஆர்.சீ.,) இப்பொழுது அந்த இராஜ்யத்தை பரதன் ஆண்டு வருகிறான். இராஜ தர்மத்தை அனுசரித்து அவனுடைய ஆக்ஞைபடி நாங்களும் மற்ற அரசர்களும் லோகத்தில் தர்மத்தை நிலை நிறுத்த சஞ்சரிக்கிறோம் (பரதர் அரசனல்ல, இராமனுடைய பாதுகைகளையே அரசனுடைய ஸ்தானத்தில் வைத்துத் தான், சேவகனாக ராஜகாரியங்களை நடத்துகிறான். இராமனையாவது மற்ற எவரையாவது மேற் சொன்னபடி ஆக்ஞையிட்டதாக தெரியவில்லை.[45]

44. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 17, பக் 60-64. CRS.
45. Ibid P 65, CRS, Huxlay Press

பெரியோர்களின் தர்மத்தை கைவிட்டு உன் தம்பியான சுக்ரீவனுடைய பார்யையை அனுபவிக்கிறாய். அவன் பிழைத்திருக் கையில் உன் மருமகளான ருமை என்பவளைக் கைப்பற்றினாய். (இந்த தர்ம நியாயம் மனிதர்களுக்குள் வழங்க வேண்டும் என்று நமது ஸ்மிருதி கர்தாக்கள் விதித்திருக்கிறார்கள். மிருகங்களுக்கு ஏற்படவில்லை. அவன் (வாலி) மிருகம் இல்லை. மனுஷர்களைப் போன்றவன். அந்த தர்மாதர்மங்களுக்கு கட்டுப்பட்டவன். அதற்காக இராமர் கொன்றார் என்றால் மனுஷ்ய தர்மப்படி அவனுடன் தர்மயுத்தம் செய்திருக்க வேண்டும். சி.ஆர்.சீ.,).

இலட்சுமணனுக்கும் எனக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தைப் போல் சுக்ரீவனுக்கும் எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதனால் சுக்ரீவனுக்கு இராஜ்யமும் பார்யையும் கிடைக்க வேண்டியது (சி.ஆர்.சி.,) நியாயத்தை விசாரிக்காமல் எப்படி கிடைக்கும்? சுக்ரீவனை விசாரித்தவர், வாலியையும் விசாரித்து இருவரின் நியாயத்தைச் சீர்தூக்கி, பிறகல்லவா தீர்ப்பு செய்ய வேண்டும். ஒருவேளை வாலி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு பரிகாரம் செய்ய சம்மதித்தால், இராமர் என்ன செய்வார்? (சி.ஆர்.சி.,)

இந்த வானரர்களுக்கு முன் உன்னைக் கொல்லப் போவதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறேன். என்னைப் போன்றவர்கள் செய்த பிரதிக்ஞையைத் தவறுவார்களா?

(இரு தரப்பையும் விசாரிக்காமல் பிரதிக்ஞை செய்தது தவறு) இப்படி முன்யோசனை இல்லாமல் தசரதர் கைகேயியிடத்திலும் விச்வாமித்ரரிடமும் செய்தார். இராமனும் மானைப் பிடித்துத் தருவதாக சீதையிடம் பிரதிக்ஞை செய்தார். ஆகவே, இது குல வழக்கமென்றே தெரிகிறது. இராஜதர்மத்தை அனுஷ்டிக்கும் இராஜாக்கள் தர்மத்தையம், வாழ்வையும், நலத்தையும் குடிகளுக்கு கொடுக்கிறார்கள் என்பது சந்தேகமில்லை. அப்படிப்பட்ட இராஜாக்கள் எட்டு லோகங்களின் அம்சங்கள் ஒன்று சேர்ந்து மனுஷ்ய சரீரத்துடன் பூலோகத்தில் சஞ்சரிக்கிறார்கள். (இது இராமனுக்கு ஒத்திருக்கும் பட்சத்தில் அவரைப் போல் அரசர்களான வாலிக்கும் இராவணருக்கும் ஒத்திருக்கும்: சி.ஆர்.சீ.,)

தர்மாத்மாவும், விவேகியுமான வாலி தனக்கு மரணம் நெருங்கி விட்டதை உணர்ந்து, தன் பார்யைக்கும் மகனுக்கும் தனக்குப் பின்னால் பிரச்னைகள் வரக் கூடாது என்ற பாசத்துடன் நினைத்து இராமரை நோக்கி கைகூப்பி மன்னிப்பு கேட்டார். தன்னிடத்தில் கிருபை செய்து, "நீ செய்த அபராதத்தை மன்னித்தேன் என்று

அனுக்கிரகித்து என்னை காப்பாற்ற வேண்டும்'' என்றார். (இதை விசாரித்தால் ஒரு ஆட்சேபம் ஏற்படுகிறது. வாலி சொன்ன விஷயங்களுக்கு இராமர் ஒரு விதத்திலும் திருப்தியான சமாதானம் சொன்னதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க திடீரென்று வாலி இராமரிடத்தில் தோஷமில்லை என்றும், தான் செய்தது பிசகு என்றும் ஒப்புக்கொண்டான் என்று சொல்லப்படுகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும். வாலியின் காரணங்களுக்கு இராமர் ஏதோ தகுந்த பதில் சொல்லி அதை வாலி ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். அப்படியிருந்தால் நமக்கு கிடைத்திருக்கும் இராமாயணத்தில் காணப்படவில்லை. நஷ்டமாயின. அல்லது இராமர் ஈஸ்வரன். அவர் செய்தது பிசகாய் இருக்காது. ஆனால், காரணம் மாத்திரம் நமக்கு தெரியவில்லை என்ற மூட பக்தியாலும் மதாபிமானத்தாலும் பிற்காலத்தில் இந்த சுலோகங்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். வேரை களைந்து பார்த்தால் ஒன்று புலப்படுகிறது. வாலி தான் வரும் வரையில் சுக்ரீவனை குகை துவாரத்தில் இருக்கச் சொல்லி ஆணை வைத்துப் போனான். அதை மீறி அவன் தானாகவே ஊகித்து கிஷ்கிந்தைக்கு திரும்பி வந்தது தவறு; பட்டத்தை ஒப்புக் கொண்டதும் தவறு; தாரையை கைப்பற்றியதும் தவறு. ஆகையால், வாலி அவனை கோபித்து தண்டித்தது நியாயம் ஆகும். அப்பொழுது வாலி செய்த பாபம் என்ன? மேலும் வானரர்களுக்குள் சகோதரர்களின் பார்யையை கைப்பற்றுவதால் யாதொரு தோஷமும் ஏற்பட்ட தாகத் தெரியவில்லை. அதற்கு யாதொரு பிராயசித்தமும் விதிக்கப் பட்டதாகவோ செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை. ஆனால், இராவணரின் வீட்டிலிருந்த சீதையின் மேல் சந்தேகித்த இராமன், அவளுடைய வார்த்தையை நம்பாமல் அக்னிபிரவேசம் செய்ய சொன்னார். அதுவும், போதாமல், அயோத்திக்கு திரும்பியவுடன், ஊரும் பெயரும் இல்லாத யாரோ ஒருவன் எதையோ சொன்னான் என்று, பட்டமகிஷியும் கர்ப்பிணியுமான ஜானகியை காட்டிற்குத் துரத்தினார். ஆனால் மிருகங்களுக்குள் அது ஒரு தோஷமாக ஏற்படாது. விராதன் (சீதையை) தொட்டு தூக்கிக் கொண்டு போன பிறகு இராமர் என்ன பிராயசித்தம் செய்ய சொன்னார் என்று தெரியவில்லை.''[46] (சி.ஆர்.எஸ்.,)

தாரை பிரலாபித்தது

வாலி பாணத்தினால் அடிபட்டு மூர்ச்சையடைந்து கீழே விழுந்த செய்தியைக் கேட்ட தாரை மற்ற இராணிகளும், வானரர்களும்

46. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 18, பக் 71–72. CRS.

புடைசூழ அவரைக் காண அலறி அடித்து கொண்டு வந்தாள். அங்கு இராமர் வில்லின் மேல் ''ஒய்யாரமாக'' சாய்ந்து கொண்டு நிற்பதையும், அருகில் சுக்ரீவனைக் கண்டு வானரர்கள் பயந்து, சிதறி ஓட ஆரம்பித்ததையும் கண்டாள். அவர்களைத் தடுத்த தாரை ''இராஜசிம்மமான வாலிக்கு முன்னே செல்லும் நீங்கள் அவரை விட்டு பயந்து கதியற்றவர்களைப் போல் ஏன் ஓடு கிறீர்கள்? சுக்ரீவன் இராஜ்யத்திற்காக ஆசைப்பட்டு இராமரைக் கொண்டு உங்கள் அரசனை பாணத்தால் அடித்து கொல்வித்தால் உங்களுக்கு என்ன பயம்?''[47]

தாரை தன் மனதுக்கத்தை எல்லாம் வெளிப்படுத்தி அழுது புலம்பினாள். வாலியின் மீது சாய்ந்து ஆலிங்கனம் செய்து அழுதாள். வாலி சற்று நேரத்தில் மூர்சை தெளிந்து சுற்றிருக்கும் அனைவரையும் பார்த்தார். விவேகியான வாலி, சுக்ரீவனைப் பார்த்து, ''இராகவனுக்கு நீ பிரதிக்ஞை செய்தபடி அவருடைய காரியத்தை சீக்கிரமாக வஞ்சனை இல்லாமல் செய்து முடி. செய்யாவிட்டால் அதர்மத்திற்கு ஆளாவாய். இராமர் உன்னை அழித்து விடுவார். இதோ என் கழுத்திலிருக்கும் தங்கஹாரத்தைப் பெற்றுக் கொள். நான் உயிருடன் இருக்கும் போதே இதை பெற்றுக் கொள்.[48]

(தனக்கு எவ்விதத்திலும் நேரில் கெடுதல் செய்யாத வாலியை இராமர் சுக்ரீவனுடைய கட்சியை மாத்திரம் கேட்டுக் கொன்றார். வாலியை அதற்கு முன் இராமர் பார்த்ததே இல்லை. தன் இராஜ்யத்தையும் பார்யையையும் தான் இருக்கும் போதே ஆழ்ந்து யோசிக்காமல் அபகரித்து, தன்னைக் கொல்வதற்கு இராமனைச் சரணடைந்து, தூண்டிவிட்டு கொன்ற சுக்ரீவனின் குற்றங்களையும் துரோகத்தையும் வாலி மன்னித்தான். விரோதத்தை மறந்தான். தானிருக்கும் போது அரசனாக நியமித்தான். தன் சக்திக்கு ஆதாரமான தங்கமாலையைக் கொடுத்தான். அருகிலிருந்த தன் பாசமான மகன் அங்கதனுக்குக் கொடுக்கவில்லை. அவனை நம்பி மகனையும் பார்யையையும் அவனிடத்தில் ஒப்படைத்தான். தன்னைக் கொன்ற இராமருடைய காரியத்தை முடித்து கொடுக் கும்படி எச்சரித்தான். இதையெல்லாம் யோசித்தால் மற்றவர் களைக் காட்டிலும் வாலியே உத்தம புருஷனென்று பட்சபாதம் இல்லாதவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.)[49]

பிறகு இறப்பதற்குத் தயாராகி மகன் அங்கதனை பாசத்துடன் பிரியத்துடன் அழைத்து, ''நான் இறந்த பிறகு எக்காலத்தில் எவ்

47. Ibid sargam 19 PP 75-76
48. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 22, பக் 83–84. 49. Ibid P 84 CRS.

விடத்தில் எது செய்ய வேண்டியதோ, எது செய்யத் தகாததோ அதை நன்றாக அறி. யஜமானன் அன்புடன் சொல்லும் வார்த்தை களைக் கேட்டு மகிழ்வது போல், கடுமையான வார்த்தைகளையும் பொறுத்து கொள். சுகதுக்கங்கள் நேரும் போது மனங் கலங்காமல் அவைகளை அனுபவி. எப்பொழுதும் சுக்ரீவனுக்கு அடங்கி நட. நான் உன்னை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தேன். நீயும் இதுவரை நடந்த படி இனிமேலும் நடந்து வந்தால் சுக்ரீவன் ஒப்புக் கொள்ள மாட்டான். அவனுடைய சத்ருக்களுடனும் மித்ரர்களுடனும் சேராதே. இந்திரியங்களை அடக்கி கொண்டு யஜமானனுடைய க்ஷேமத்தையே நாடியவனாகி சுக்ரீவனுக்கு கீழ்பட்டு நட. எவருட னும் அதிகமாக பழகுவதும் பழகாமல் தனித்திருப்பதும் பிசகு. ஆகையால் இரண்டிலும் மிதமாக இரு,'' என்று இதமாக உப தேசித்து மரணமடைந்து உத்தம கதியடைந்தார்.

வாலியை தாரை அணைத்து கொண்டு பூமியில் சாய்ந்தாள். (வாலி இராமரோடும் சுக்ரீவனோடும், அங்கதனோடும் பல விஷயங் களைப் பேசியவன். தன் உயிருக்கு உயிரான தாரையுடன் ஏன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை?)[50]

விவேகியான தாரை மாறுபட்ட சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இராமரைப் புகழ ஆரம்பித்தாள். அவருடைய செயல் களைப் பாராட்டினாள். "கண்ணில்லாமல் பார்க்கிறான், காதில் லாமல் கேட்கிறான், காலில்லாமல் அதி வேகமாக நடக்கிறான். கையில்லாமல் பிடிக்கிறான் என்ற வேதத்தின்படி (இது ரிக்வேதத்தில் உள்ளது) இந்திரியங்களை வசப்படுத்தியவன் நீ ஒருவனே!'' என்று துதித்தாள். (வாலியைக் காட்டிலும் மகாபுத்திசாலி என்று அவளே ஒப்புக்கொண்ட தாரை, வாலியின் காரணங்களுக்கு தகுந்த பதில் சொல்லாத இராமருடைய நடத்தையை ஒப்புக்கொண்டாள் என்பதும் வாலியை குற்றம் சாட்டி இராமனை விஷ்ணுவாகவே அறிந்து துதித்தாள் என்பதும் காணப்படும் பாகங்கள் நியாயத்திற்கு ஒத்ததில்லை என்பது சிலரது ஆட்சேபம். இராமனை ஈஸ்வரனே என்றும் அவர் எதைச் செய்தாலும் தர்மமே என்று எண்ணும் மதாபிமானிகள் அவருடைய மனுஷ்ய பாவனையை மறந்து, தாரை இப்படி சொல்லும்படி வாக்கியங்களை பிறகு சேர்த்தார்கள் என்று மேனாட்டு பண்டிதர்களின் கொள்கை. இராமரும் அவரின் புகழாரத்தை ஏற்று அவளுக்கு ஹிதோபதேசம் செய்தார் அந்த நேரத்தில் அங்கதனுக்கு யுவராஜ்யாபிஷேகம் செய்வித்து

50. கிஷ்கிந்தா காண்டம் பக் 85.

அவனுக்கு சகல மங்களத்தையும் கொடுக்ககூடியவர் இராமன் என்று நினைத்து புகழ்ந்தாள்.

இவ்வளவு பேசிய தாரையே வாலி இறந்தான் என்று நம்பின போதும், உண்மையாக இறந்த பிறகும், சுக்ரீவனிடத்தில் பிரிய பார்யையாக இருந்தாள். இது பெண்களின் சுவபாவம் என்று வால்மீகி காட்டினார் என்று எண்ண வேண்டும். ஆனால், மந்தோதரி இப்படி செய்யவில்லை, விபீஷணனுடன் இணங்கி இருக்கவில்லை. தாரையோ சாதாரண பெண். மந்தோதரியோ விஷ்ணுவால் நியமிக்கப்பட்டு அவருடைய அம்சத்தால் விளங்கின ஆத்மஞானம் உடையவள். ஆகையால் பதிவிரதா தர்மத்தை தவறவில்லை என்பது சிலருடைய கொள்கை.)[51]

சுக்ரீவ பட்டாபிஷேகம்

மழை காலத்தில் அனுஷ்டிக்கப்படும் சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொள்வதற்காக இராமர் தன் குகையிலேயே தங்கினார். சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்படி உத்தர விட்டார்.

சுக்ரீவன் வாலியின் அந்தபுரத்திற்குள் நுழைந்து தாரை முதலிய ஸ்தீரிகளை பலவிதமாக சமாதானம் செய்து தன் வசப்படுத்தி கொண்டார். சுக்ரீவனின் நண்பர்கள் தேவேந்திரனுக்கு தேவராஜ பட்டாபிஷகம் செய்வித்தது போல் அவனுக்கு அபிஷேகம் செய்து வித்தார்கள். வெண்கொற்ற குடை பிடித்தார்கள். தங்கபிடியிலான வெண்சாமரங்களை வீசினார்கள். ஏராளமான வகைகளான தானியங்கள், விதைகள், ஓஷதிகள், சந்தனம், வஸ்திரம், மஞ் சள் கலந்த அட்சதை, தேன், நெய், தயிர், கோரோஜனை முதலிய அனைத்தையும் ஏராளமாகக் கொண்டு வந்தார்கள். உத்தமமான பதினாறு கன்யைகளும் சித்தமாக இருந்தார்கள். பிராம்மணர்களுக்கு வஸ்திரங்கள், ரத்தினங்கள் என்று அள்ளி கொடுத்தார்கள். தர்பைகளைப் பரப்பி அக்னிகளை வளர்த்து விதிப்படி ஹோமம் செய்தார்கள். புண்ணிய நதிகள், தீர்த்தங்கள் இவைகளிலிருந்து எடுத்து வரப்பட்ட தண்ணீரை தங்க குடங்களை வைத்து வேத மந்திரங்களை ஜபித்து அபிஷேகம் செய்தார்கள். (இந்தவிதமான வைதிக சடங்குகள் குரங்குகளுக்கும் உண்டா? பொருந்துமா? எனத் தெரியவில்லை.[52]

51, Ibid sargam 24. PP 97-98 CRS 52. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 26

இராம லட்சுமணர்களின் சீற்றம்

மழைகாலம் முடிந்தது. சுக்ரீவன் சீதையை மீட்க சைன் யங்களைத் தயார் செய்யாமல் இருப்பதைக் கண்டு, இராமர் லட்சுமணரைத் தூதுவனாக அனுப்பினார். மிகுந்த கோபத்துடன் சென்ற இளையவர் வாலியின் அந்தபுரத்தில் நுழைந்து, அங்குள்ள பெண்கள் காமத்தில் திளைத்து சுகபோகத்தில் இருப்பதைக் கண்டு வில்லினால் நாணோசை உண்டாக்கி பயமுறுத்தினார். சுக்ரீவன் தாரையை விட்டு இலட்சுமணரை சமாதானம் செய்ய அனுப்பினார்.

தாரையும் சம்போக சுகத்தை விருத்தி செய்ய குடித்த மதுவின் மயக்கத்தினால் கண்கள் சுழல, சிரமத்தால் தள்ளாடி, அடி மேல் அடி வைத்து நடந்து கொண்டு, வஸ்திரங்கள் தளர்ந்து, அரைநூல் மாலை அறுந்து தொங்க, படுக்கையிலிருந்த வேஷத்துடன், சம்போக குறிகள் தெளிவாக விளங்க, ஸ்தனபாரத்தால் சற்று வளைந்த தேகத்துடன் இலட்சுமணரிடம் வந்தாள். (எந்த பாணத்தால் என் பிரிய நாயகனான வாலியை அடித்துக் கொன்றாயோ அதே பாணத்தால் என்னையும் அடித்துக் கொன்று வாலியிடம் சேர்த்து வை. நான் இல்லாவிட்டால் வாலி துக்கமடைவார் என்று சொன்ன பதிவிரதை இவளே! வால்மீகியின் கருத்து இப்படி தெளிவாக இருந்தாலும், கம்பருக்கு இது இஷ்டமில்லை. தாரையைக் குறை வாக சொல்ல மனமில்லை. அவள் மகாபதிவிரதை என்றும் கைம் பெண்களுக்குரிய வேஷத்துடனும் நியமத்துடன் காலம் கழித்தாள் என்றும் அழுத்தமாக சொல்லுகிறார்.)[53]

இராவணர் சீதையின் கூந்தலை இடது கையால் பிடித்து, வலது கையால் இரு தொடைகளையும் பிடித்துத் தூக்கினார் என்று வால்மீகி வர்ணிக்க, கம்பர், அவளை பூமியோடு பெயர்த்துத் தூக்கிச் சென்றார் என்று வர்ணிக்கிறார். இது அதீதமான மதாபி மானத்தை வெளிப்படுத்துகிறது.

தாரையின் சமாதான பேச்சாற்றலாலும், சுக்ரீவனின் வாக்குறுதி யாலும், இராம லட்சுமணர்களின் சீற்றம் தணிந்தது.

சீதையைத் தேட சைன்யம் சென்றது

சுக்ரீவனின் ஆணைப்படி கோடிக்கணக்கான வானரர்கள் திரண்டு வந்தார்கள். அவர்களுக்கு நான்கு திசைகளிலும் சென்று சீதையைத் தேடுமாறு சுக்ரீவர் விரிவான உத்தரவிட்டார். (ஏன் தேட

53. Ibid P 135 CRS

வேண்டும்? ஜடாயு, ராட்சசாதிபதி இராவணர் எடுத்து சென்றார் என்று முன்பே சொல்லியிருக்கிறார். கபந்தனும் இலங்கையில் இருந்தாலும் வானரர்கள் கொண்டு வருவார்கள் என்று கோடிட்டு காட்டியிருக்கிறார். சபரி "இச்சமயம் அவள் இலங்கா நகரில் இருக்கிறாள்" என்று தெரிவித்திருக்கிறாள். இராமரால் அடிபட்ட வாலி "என்னிடம் சொல்லியிருந்தால் இராவணனையும் இலங்கா நகரையும் அரை முகூர்த்த நேரத்திற்குள் சீதையுடன் இங்கு வருவேனே" என்று பிரலாபித்திருந்தார்.)

அனுமார் தலைமையில் ஒரு பகுதி சைன்யம் தெற்கு திசைக்கு அனுப்பப்பட்டது. சுக்ரீவர், அனுமார் எங்கேயெல்லாம் சீதையைத் தேட வேண்டும் என்றும், செல்ல வேண்டிய வழிகளையும் மிக துல்லியமாகக் கூறினார். "தெளிந்த ஜலத்துடன் விளங்கும் காவேரி என்ற புண்ணிய நதி தென்படும். அங்கு அப்சரஸ்கள் சஞ்சரிப்பார்கள். மலைய பர்வதத்தின் சிகரத்தில் அகஸ்திய மகரிஷியை வணங்கி, தாமிரபரணி நதியைத் தாண்டவேண்டும். இந்த நதிக்கரை சந்தன காடுகளால் பரிமளம் நிறைந்து விளங்கும். இந்நதி தன் நாயகனான சமுத்திரராஜனைச் சேருகிறது. பிறகு முத்து, நவரத்தினங்கள் முதலிய விலை உயர்ந்த பதார்த்தங்களுக்கு இருப்பிடமான பாண்ட்ய இராஜாக்களின் தங்கமயமான இராஜதானி தோன்றும். தங்கத்திலான கோட்டை கதவுகளைக் காணலாம். பிறகு மகேந்திர மலையைக் காண்பீர்கள்". அகஸ்திய மகரிஷி பின்வரும் காரியங்களை உத்தேசித்து அதை சமுத்திரத்தில் வைத்தார்.[54]

அனுமன் தலைமையில் சுக்ரீவரின் அறிவுறுத்தலின்படி சீதை யைத் தேடினார்கள். ஒரு மாதம் கடந்தும் அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை. மீண்டும் முயற்சி செய்யவே, முன் காலத்தில் மயன் என்ற தானவனால் உண்டாக்கப்பட்ட ரிஷிபுலம் என்ற ஒரு விஸ்தாரமான குகையைக் கண்டார்கள். பசி தாகத்தால் வாடிய வானரர்கள், அந்த குகைக்குள் தண்ணீர் கிடைக்குமா என்று தேடினார்கள். அங்கு சுயம்பிரபை என்ற பேரழகியான தபஸ்வி பெண் இருப்பதைக் கண்டு அவளை வணங்கினார்கள். அப்பெண் அவர்கள் அனைவருக்கும் ஆகாரமும் தண்ணீரும் கொடுத்து உபசரித்தாள். வானரர்களின் வரலாற்றைக் கேட்ட சுயம்பிரபை, அனுமார் விண்ணப்பத்தை ஏற்று, அதன் வரலாற்றையும் கூற லானாள்.

54. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 41, பக் 155, ALL P 516

இந்த தங்கமயமான குகையையும், வனத்தையும், மயன் தன் மாயா சக்தியினால் நிர்மாணித்தார். அவர் தானவர்களுக்கு சிற்பியாக இருந்தார். சுக்ராசாரியரால் உபதேசிக்கப்பட்ட சிற்ப சாஸ்திர ஞானத்தைப் பரிபூரணமாக கற்றார். அவர் இங்கே வசித்து கொண்டிருந்தார்.

“பிறகு தன் புத்ரியான மந்தோதரியை இராவணனுக்கு விவாகம் செய்து கொடுத்ததாலும், ஹேமை என்ற அப்சரஸ் பெண்ணுடன் ரகசியமாக விசேஷ ப்ரீதி வைத்திருந்ததாலும், இந்திரன் வஜ்ரா யுதத்தால் அவரை (மயனை) அடித்துக் கொன்றான்.” பிறகு சுயம்பிரபை, அவர்கள் ரிஷிபுலத்தினின்று வெளியேற உதவி செய்தாள்.[55]

இதற்கு முன் பேரழகியும், அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்த வளான மந்தோதரியை திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டு, இந்திரனும், வாலியும், மயனிடம் பெண் கேட்டார்கள். இந்திரன், தன் நாட்டையும் இனத்தையும் சார்ந்தவன் அல்ல என்பதாலும், வாலி மனித இனத்தைச் சேர்ந்தவன் இல்லை என்பதாலும், அவர்களின் கோரிக்கையை மயன் நிராகரித்தார். மயனும், இராவணரும் வெவ்வேறு தொகுப்பைச் சேர்ந்த பிராம்மணர்கள். ஒரு சமயம் தற்செயலாக இராவணரைக் கண்ட மந்தோதரி அவரை ஆசையுடனும், ஆர்வத்துடனும் பார்த்தாள். இதை கவனித்த மயன், இராவணரிடம் பேசி அவரின் குலம், கோத்திரத்தை அறிந்து, மகிழ்ச்சியடைந்து, திருமண நிச்சயதார்த்தம் செய்து, சாஸ்திரப்படி முறையாக மந்தோதரியை இராவணருக்கு கன்யாதானம் செய்து கொடுத்தார்.[56]

ஏமாற்றமடைந்த இந்திரனும், வாலியும் பொறாமையால், இராவணர் மீது மனதளவில் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தார்கள். இராவணர் சீதையுடன் இலங்கையில் நுழைந்ததைக் கண்ட இந்திரன், இராவணருக்கு கெட்ட காலம் ஆரம்பித்து விட்டது என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தான். சீதைக்கு ஆறுதல் கூறி ஓராண்டு காலம் பசியையும் தாகத்தையும் தாங்கும் தெய்வீக பாயாசத்தைக் கொடுத்தான்.[57]

சுயம்பிரபையின் உதவியோடு வெளிவந்த வானரர்கள், சீதை யைக் கண்டுபிடிக்க விதிக்கப்பட்ட காலகெடு முடிந்து விட்டபடியால், மரண தண்டனைக்குப் பயந்து என்ன செய்வது என்று அறியாமல்

55. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 51, பக்.176. 56. இந்து மதம் எங்கே போகிறது ?
57. கிஷ்கிந்தா காண்டம் பக் 424 All,

தவித்தார்கள். யுவராஜா அங்கதனை சுக்ரீவனிடம் தூது அனுப்பி காலகெடுவை நீட்டிக்கலாம் என்று கூறினார்கள்.

இதை ஏற்றுகொள்ளாத யுவராஜா அங்கதன் “அவன் (சுக்ரீவன்) ஆத்மசுத்தி, மனசுத்தி இல்லாதவன். தமையனுடைய பார்யை தாயல்லவா? அவன் பிழைத்திருக்கும் போதே அவனுடைய பார்வையைக் கைப்பற்றியவனுக்கு ஆத்மசுத்தியாவது? மன சுத்தியாவது? என் பிதா மாயாவியுடன் (இன்னுமோரிடத்தில் அவன் தம்பி துந்துபி) குகையில் யுத்தம் செய்த போது அதன் துவாரத்தை மூடியவன் குரூர ஸ்வபாவம் இல்லாதவன் என்று எப்படி சொல்ல முடியம்? அக்னி சாட்சியாய் இராமனுக்கு கையடித்து கொடுத்து அவரிடம் ஒப்பில்லாத உபகாரத்தைப் பெற்றவன். அவர் விஷயமாக செய்த பிரதிக்ஞையை மறந்தவன். கபடமானவன். சைன்யங்களை அழைத்து சீதையைத் தேட அனுப்பியது சுதர்மத்திற்கு பயந்தல்ல; லட்சுமணரின் பாணத்திற்கு பயந்தே!

அவன் பாபி; நன்றியற்றவன்; சஞ்சலமுடையவன்; மறதியுள்ளவன்; இவனிடத்தில் எவனாவது நம்பிக்கை வைப்பானா? அவன் எனக்கு தாயாதி. அவனுக்குப் பின் பட்டத்தை அடைய வேண்டியவன். எனக்குப் பிழைக்க ஆசையிருக்குமானால் அவனை நம்பலாமா? சத்ருகுலத்தில் பிறந்த என்னை உயிரோடு வைப்பானா? நான் அவனுக்கு அபஹாரம் செய்தவன்: பலஹீனன்; அனாதை; அவனுக்கு விரோதி என்று பிறருக்கு சொல்லியும் விட்டேன். உங்களுடன் கிஷ்கிந்தைக்கு வந்து உயிர் தப்புவேனா? சுக்ரீவன் குரூரன்; இரக்கமற்றவன்; ரகசியமாக கெடுதி செய்பவன்; ராஜ்யத்தை ஆள்வதற்கு (அவனுக்கு பிறக்கப் போகும் மகனுக்கு) நான் இடையூறாக இருக்கிறேன் என்று என்னைக் காவலில் போடுவான். இங்கேயே பிராயோபவேசத்தால் (உண்ணா விரதத்தால்) உயிரை விடுவது நலமல்லவா? நீங்கள் எல்லாம் திரும்பிப் போங்கள். நான் உங்களுடன் கிஷ்கிந்தைக்கு வருவதில்லை: இது சத்யம். நான் மரணமடைவதே எனக்கு நலம்.”[57A]

இதைக் கேட்ட வானர சைன்யங்கள் வாய்விட்டு அலறி பிரயோ பவேசத்தில் உட்கார்ந்தார்கள்.

அவர்களின் அலறலைக் கேட்ட சம்பாதி, (ஜடாயுவின் அண் ணன்) அவர்களைக் கொன்று தின்பதற்கு வந்தார். அப்பொழுது வானரர்கள், இராவணன் சீதையை அபகரித்தபோது, ஜடாயு அவருடன் போரிட்டு மரணம் அடைந்ததைப் பற்றி பேசிப்

57A: பக்கம் 180, 181. சர்க்கம் 53 CRS

புலம்பியதைக் கேட்டு, அவர்களுடன் பேசலானார். ‘‘நீங்கள் சொன்ன ஜடாயு என் தம்பி. இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போனதை நான் பார்த்தேன். அவன் விஸ்ரவசின் புத்ரன். குபேரனுக்குத் தம்பி, லங்காத்வீபத்தில் இருக்கிறான். அங்கே சீதை ராவணனின் அந்தப்புரத்தில் ராட்சசிகளால் காக்கப்பட்டு, தீனமாக உட்கார்ந்திருக்கிறாள். இலங்கை இங்கிருந்து, 100 யோஜனை தூரத்தில் உள்ளது’’.

இந்த செய்தியால் மகிழ்ச்சி அடைந்த வானரர்கள் அனுமார் இலங்கைக்கு செல்ல வேண்டியது என தீர்மானித்தார்கள்.

அனுமார் சிறு குன்றின் மீது ஏறி, ஆகாயத்தில் பாய்ந்து, கருடனைப் போல் சமுத்திரங்களின் மேல் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது சமுத்திரராஜன் அவருக்கு மரியாதை செய்ய விரும்பி, தன்னுள் புதைந்திருக்கும் மைநாகமென்ற மலையை அழைத்து அனுமாருக்கு விருந்து உபசாரம் செய்யப்பணித்தார். மைநாகனும் சமுத்திரத்திலிருந்து வெளிப்பட்டு, அனுமாரிடம் பணிவோடு தன் அதிதி பூஜையை ஏற்றுக்கொண்டு, சற்றே களைப்பாறி செல்லும்படி விஞ்ஞாபித்தார். தான் மிகவும் அவசரமாகச் செல்வதால், பகலுக்குள் இலங்கைக்கு செல்ல வேண்டியிருப்பதால் அம்மலையை கையால் தொட்டு, அதிதி பூஜையை அங்கீகரித்து, புன்சிரிப்புடன் ஆகாய மார்க்கமாக தன் பயணத்தைத் தொடங்கினார். மைநாகத்தின் செயலை தேவேந்திரன் பாராட்டினார். (இது யுத்தக் காண்டத்தில் ராமர் சமுத்திர ராஜனை வில்லால் அடித்ததாக சொல்லப்படுகிறது).

பயணத்தைத் தொடர்ந்தவரை, நாகங்களின் தாயாகிய சுரசை வழி மறித்தாள். ராம தூதனாக செல்லும் எனக்கு, அவருடைய ராஜ்யத்தில் வசிக்கும் நீ, உதவி செய்ய வேண்டுமெனக் கூறினார் (இலங்கை சமுத்திரப் பகுதி அயோத்தியின் ஆட்சிக்கு உட்பட்டதல்ல). ஆஞ்சநேயர் தன் உடலை கட்டைவிரல் அளவிற்கு சுருக்கி அவள் வாயில் புகுந்து வெளியேறினார்.

இலங்கையில் இறங்கிய அனுமார் இராவணரின் அந்தப்புரத் திற்குள் நுழைந்து சீதையைத் தேடினார். அங்குள்ள உத்தம குலத்தில் பிறந்த கன்யைகள், ராவணனை மோகித்து, வலுவில் ஆசை மீறி வந்தவர்களே! அனைவரும் பத்தினி ஜாதி உத்தம ஸ்திரீகளே! அவனுக்கு சமஸ்த உபசாரங்களையும் பரமப் பிரீதி யுடன் செய்யாதவர்கள் அங்கில்லை (சீதை திருமணத்திற்கு முன்பே ராமனைக் கண்ட மாத்திரத்தில் மயங்கினாள். அவனும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்; என்று கம்பர் வர்ணிக்கிறார்).

இந்தப் பெண்களை எல்லாம் கன்யைகளாக இருக்கும்போதே கொண்டு வந்து மணஞ்செய்தது போல், சீதையையும், ராகவன் பாணிக்கிரஹம் செய்வதற்கு முன், கொண்டு வந்து மணம் புரிந்திருந்தால், அவனுக்கு நலம் உண்டாயிருக்குமே என அகஸ் மாத்தாக எண்ணினார். ஜாதி சுபாவத்தினால் இப்படி விபரீத புத்தி யும், இப்படி எண்ணினோமே என வருத்தமும் அடைந்தார்.[57B]

‘‘சீதையைக் காணும் வரையில் இங்கேயே இருந்து இலங்கை யில் அடிக்கடி தேடுவேன். அல்லது சம்பாதி சொன்ன வார்த்தையை நம்பி ‘‘சீதை இலங்கையில் இருக்கிறாளன்று இராமரை அழைத்து வந்தாலென்ன? ஐயோ, சீதை இல்லாவிட்டால் வானர குலத்தை சாம்பலாக்குவாரே! ஆகையால், இங்கேயே உபவாசம் செய்வேன். பாவம்! என்னால் வானரர்கள் எல்லாம் நாசமடைய வேண்டுமா,’’ என அனுமார் மனக் குழப்பத்துடன் இருந்தார்.

சீதையைக் காண அலைந்தபோது, அவர் கண்ட இலங்கை நகரில் சில வீடுகளில் ராட்சசர்கள் வேதம் ஓதிக் கொண்டிருந்தார்கள். சிலர் மந்திரங்களை ஜபித்துக் கொண்டு இருந்தார்கள்.[58]

தேடிக் கொண்டே அசோகவனம் வந்தார். அந்த வனத்தில் சற்று தூரத்திற்கு அப்பால், புத்தரின் ஆலயம் போல் கட்டப்பட்ட ஒரு உப்பரிகையைக் கண்டார். (ராமரின் காலத்திற்கு பின் தான் புத்தர் பிறந்தார்.) அங்கிருந்து சிம்சுபா மரத்தின் அடியில் சீதையைக் கண்டார். அவளின் மனநிலையையும், உருவத்தையும், அம்மரக்கிளையில் மாட்டிவிட்டு தொங்கும் நகைகளையும் பார்த்து அந்தப் பெண் சீதையே எனத் தீர்மானித்தார். அவளின் மனமும் இராமனின் மனமும் ஒன்றாக இருக்கிறது என அனுமானித்தார்.

மால்யவான் என்ற மலையில் ராகவன் சீதையின் பிரிவை சகிக்காமல் புலம்பின பொழுது, ‘‘இதென்ன விபரீதம்! வசிஷ்ட மகரிஷியின் சிஷ்யராம்! வேதவேதாந்தங்களைக் கடந்தவராம். சகல கஷ்டங்களையும் சகிக்கவல்ல க்ஷத்திரிய வீரராம்! யாரோ ஒரு ஸ்திரியை விட்டுப் பிரிந்ததற்காக இவ்வளவு பாடுபடுகிறாரே!’’ என நித்ய பிரம்மச்சாரியும் இந்திரிய சுகங்களில் வெறுப்பு அடைந்தவருமான அனுமார் பரிஹாசம் செய்திருந்தார்.[59]

சீதையைக் கண்ட அனுமார் அவளுடன் எந்த மொழியில் பேசு வது என சிந்தித்தார். மனுஷ்ய வார்த்தையால் பேசலாமா? அல்லது இலக்கண அம்சங்கள் பொருந்திய சமஸ்கிருத பாஷையில்

57B. சுந்தரகாண்டம் பக்கம் 50, 58. சுந்தரகாண்டம் பக்கம் 30. 59. Ibid P

பேசலாமா என பலவாறாகச் சிந்தித்து அவரின் கோசல தேசத்தில் உள்ளவர்கள் பேசும் பாஷையிலேயே இவளுடன் பேச வேண்டும் எனத் தீர்மானித்தார்.

(சமஸ்கிருதம் கி.மு.4ம் நூற்றாண்டில் தான் மேம்படுத்தப்பட்டது. அப்படியிருக்க, 6,000 ஆண்டுகளுக்கு முன்னதாக நடந்ததாக சொல்லப்படும் சம்பவங்கள் எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கும்?).

சீதையிடம் அவளின் கோசல தேச பாஷையிலே மிகவும் சாதுர்ய மாகவும் வினயமாகவும் பேசினார். அவரை சோதிக்கும் நிமித்தம், சீதை, ''இராம லட்சுமணர்களின் அவயப் பொருத்தங்களையும் ரூபங்களையும், தொடைகளையும், புஜங்களையும் விஸ்தாரமாக விவரித்தால் உன்னை நம்புவேன் என்றாள்''.

அனுமாரும் இராமரை வர்ணிக்கலானார்:-

''இராமனின் சகல அவயவங்களும் வெகு சுந்தரமாக இருந் தாலும், அவரின் கண்கள் செந்தாமரை இதழ்களைப் போன்றவை. மஹா தேஜஸ்வி, பிரஹ்மசரிய விரதத்தை அனுஷ்டிக்கிறவர். (ஆரண்ய காண்டத்தில் அவர் சீதையுடன் ஜலக்கிரீடை செய்து அனுபவித்ததையும், இலட்சுமணரிடம் தனக்கும் சீதைக்கும் தனி யாக பர்ணசாலைகளை அமைக்கும்படியும், அவளை மடியில் படுக்க வைத்து மாமிசத்தை ஊட்டிவிட்டதையும், சீதையுடன் அவர் அனுபவித்த தாம்பத்ய ரகசியங்களையும் சொல்லி விரக தாபத்தால் புலம்பினார் என விவரிக்கப்பட்டுள்ளது.) இராமர் யஜுர் வேதத்தில் சமர்த்தர். தனுர் வேதத்திலும், இதர வேதங் களிலும் வேதார்த்தங்களிலும் நிபுணர். 96 அங்குலம் (8 அடி) உயரமும், ஆண்குறி சிறியதாகவும் மழமழப்பாகவும் இருக்கும். (மகாபாரத்தில் ஸ்ரீகிருஷ்ணரும் இப்படித்தான் வர்ணிக்கப்படுகிறார்) தும்பிக்கையைப் போன்ற கைகளை உடையவர், சத்யத்திலும், தர்மத்திலும், பிறருக்கு கொடுப்பதிலும் பிரியமுள்ளவர். சுமித் திரைக்குப் பிறந்து, கௌசல்யையால் வளர்க்கப்பட்ட, இலட்சுமணர் பிறரால் ஜெயிக்க முடியாதவர்.''

இந்த வர்ணனைகளை நம்பிய சீதை, அவரிடமிருந்து ராமர் கொடுத்தனுப்பிய கணையாழியைப் பெற்றுக்கொண்டு, தன்னிட மிருந்த சூடாமணியை ராமருக்கு கொடுத்து அனுப்பினாள். சூடாமணியைப் பெற்றுக் கொண்ட அனுமார், ''தாங்கள் என்னு டன் வந்தால், மஹா விஷ்ணு அசுரர்களை நாசம் செய்வதில் உற்சாகத்துடன் இருப்பது போல், ராட்சசர்களை வேரறுப்பதில் எப்போதும் கவலையுள்ள ரகுநாதனையும் இலட்சுமணனையும் இப்போதே பார்க்கலாம்'' என்றார்.[60]

அனுமார் கிஷ்கிந்தைக்குத் திரும்பி ராமரிடம் 'கண்டேன் சீதையை' என்று சொல்லி கணையாழியைக் கொடுத்தார்.

சீதை இருக்குமிடத்தை தெரிந்து கொண்ட பின் வானர, கரடி சைன்யங்களை கோடிக்கணக்கானவர்களாகத் திரட்டிக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டார்கள். சேதுக்கரையில் இராமர் சிவ லிங்கம் வைத்து பூஜை செய்தார்.

இலங்கையின் மீது படையெடுப்பு துவங்கியது. நூற்றுக் கணக்கான விமானங்களில் கோடிக்கணக்கான வானரர்கள் பயணிக்கலானார்கள். இரண்டாயிரம் விமானங்களில் போர் குதிரைகளும், யானைகளும், ரதங்களும், தேர்களும், வீரர்களும் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.(JR)III

சேது, மற்றும் சமுத்திரா என்ற கடலில் உள்ள மலையில் (வேலாந்திர மலை) ஆட்சி செய்த மன்னர்கள் விமானங்களைத் தாக்கினார்கள். அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ராமரிடம் சரணடைந்தார்கள் மன்னர்களின் மூன்று புத்ரிகளை மணக்கும்படி இலட்சுமணருக்கு ராமர் உத்திரவிட்டார். இராம லட்சுமணர்கள் முதல் நாள் பயண இரவை வேலாந்திர மலையில் கழித்தார்கள். (JR)III

சமுத்திரராஜனைப் பணிய வைத்து, சமுத்திரத்தைக் கடப்பதற்கு பாலம் கட்ட ஆரம்பித்தார்கள். மிதக்கும் கற்களைப் (Pumice Stone) போட்டு, அதை கொடிகளால் கட்டி, அதன் மேல் செடி, புல், இலைகள் முதலியவற்றைப் பரப்பி, பலமான பாலத்தை ஐந்து நாட்களில் அமைத்தார்கள்; இலங்கைக்குள் நுழைந்தார்கள்.

யுத்தமும் ஆரம்பித்தது. இலங்கையை துவம்சம் செய்ய ஆரம் பித்தார்கள். இரு தரப்பிலும் ஏராளமானவர்கள் காயப்பட்டார்கள்; அங்க ஹீனம் அடைந்தார்கள்; இறந்தார்கள்.

இந்திரஜித்தின் வீராவேசமான போர் முறையால் இராம இலட்சுமணர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இந்திரஜித்தின் பிருமாஸ்திரப் பிரயோகத்தால் இராம இலட்சுமணர்களும் வானர சைன்யங்களும் மயக்கமடைந்து கீழே விழுந்தார்கள்.

திகைத்து நின்ற மாருதி போன்ற வல்லமை வாய்ந்த தலைவர் களைப் பார்த்து விபீஷணன், இமயமலைக்கு அப்பால் உள்ள ஔஷதி

60. சுந்தர காண்டம் சர்க்கம் 37, பக் 157 CRS

(சஞ்சீவி) மலையிலுள்ள சில மூலிகைகளைக் கொண்டு வந்தால், அனைவரும் பிழைத்துக் கொள்வார்களென்று அறிவுறுத்தினான். அனுமாரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது. அனுமாரும் உடனே புறப்பட்டு மிகுந்த பிரயாசையுடன் அம்மலையைக் கண்டுபிடித்தார். ஆனால், குறிப்பிட்ட மூலிகைகளை அடையாளம் காண முடியாததால், அந்த மலையையே அப்படியே தூக்கிக் கொண்டு, விண்ணில் பாய்ந்து ஒரு முகூர்த்த நேரத்திற்குள் யுத்த பூமிக்கு வந்து விட்டார்.

இலங்கைக்குள் மலையுடன் நுழைந்தபோது அதிலுள்ள மூலிகைகளின் வாசனையாலேயே வானர சைன்யத்தில் அனை வரும் பிழைத்துக் கொண்டார்கள். ஆரோக்கியத்துடன் எழுந்து நின்றார்கள். போர்க்காயங்கள் ஆறின, கை, கால் இழந்தவர்கள் அவைகளை மீண்டும் பெற்றார்கள்.

ஆனால், இராவணரின் சைன்யத்தினர் யாவருக்கும் இதனால் ஒரு பலனுமில்லாமல் போய்விட்டது. இதற்கு என்ன சமாதானம் சொல்கிறார்கள் என்றால், தங்கள் தரப்பில் இறந்தவர்கள், காயப்பட்டு ஊனமானவர்கள் கணக்கு தனக்கு தெரிவதற்காகவும், பிறருக்கு தெரியாமலிருப்பதற்கும், வானவர்களால் கொல்லப்பட்டவர் களையும், சாகப் போகிறவர்களையும் சமுத்திரத்தில் எறிந்து விடும்படி இராவணர் உத்தரவு போட்டாராம்.[61]

ஒருவர் பின் ஒருவராக இராவணரின் சேனைத் தலைவர்கள் இறக்கவே, இந்திரஜித் யுத்த களத்திற்கு வந்து வானர சைன் யங்களை துவம்சம் செய்தான். இறுதியில் இலட்சுமணரால் கொல்லப்பட்டான். தன் மகனும் உயிரிழந்ததை கேட்ட இராவணர் புத்ர சோகத்தால் பீடிக்கப்பட்டு, மிகவும் வருத்தமடைந்தார். ஏராளனமான ஏற்பாடுகளை செய்து கொண்டு, தானே நேரில் இலட்சுமணரைக் கொல்ல யுத்த களத்திற்கு வந்து, நெருப் பிடிப்போல் ஜ்வலிக்கும் ஓர் சக்தியை (அமோக விஜயா) எடுத்து விபீஷணனை அடித்தார். அதை இலட்சுமணர் குறுக்கே நின்று தடுத்தார். மீண்டும் ஒருமுறை அந்த சக்தியை இலட்சுமணர் மேல் எறிய, அது இலட்சுமணரைத் தாக்காமல் இருக்கடவது என ராமர் சொன்னார். ஆனாலும் அது இலட்சுமணரின் இதயத்தைப் பிளந்து, மர்ம ஸ்தானத்தில் அடிக்க, அவர் கீழே விழுந்து, பெருமூச்சு விட்டுக் கொண்டு புரண்டு மூர்ச்சையானார்.(JR)

61. யுத்த காண்டம் பக் 296 CRS

இந்த சக்தி மயனால் தன் மருமகன் ராவணருக்கு கல்யாணப் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

இராமரின் வேண்டுகோளின்படி, அனுமார் மீண்டும் ஓஷதி மலைக்குச் சென்று அதைக் கொண்டு வரவே, இலட்சுமணர் மூர்ச்சை தெளிந்து யுத்தத்திற்கு தயாரானார்.

துரோனமேகன் என்ற அரசனுக்கு வைசால்யா என்ற மகள் இருந்தாள். அவளின் ஸ்பரிசம் பட்டால் ஒருவருடைய நோய்கள் குணமடையும். அவர் ஆரோக்கியமானவர் ஆவார். அவளின் ஸ்பரிசத்தாலும், அவள் குளிக்கும் நீராலும், அவளுடைய தேசத்தில் மக்கள் நோய்களிலிருந்து விடுபட்டு வாழ்ந்தார்கள். அவள், குளித்த தண்ணீரால் ஒருவரின் காயத்தைக் கழுவினால் காயம் உடனே குணமாகிவிடும். அவளின் தண்ணீர் அனைத்து நோய்களையும் குணமாக்கும் சக்தி படைத்தது.(JR)

வைசால்யா இலட்சுமணரைச் காதலித்தாள். அவரை மணக்க விரும்பினாள். அனுமாரும், பாமண்டலும் (சீதையின் சகோதரன்). கௌதுகமங்கள் என்ற இடத்தில் இருந்த வைசல்யாவை ஆகாயவிமானத்தின் மூலம் இலங்கை யுத்த பூமிக்கு அழைத்து வந்தார்கள். அவள் இலட்சுமணரின் அருகில் மண்டியிட்டு பஞ்ச பரமேஷ்டி என்ற தெய்வத்தை வணங்கி இலட்சுமணரின் மார்பைத் தொட்டு, கண்களை மூடிக்கொண்டு பிராத்தனை செய்தாள். கோரட்சன் என்கிற சந்தன சாந்தை கொண்டு வரும்படி பாமண்டலைப் பணித்தாள்.(JR)

வைசால்யா அதை ஒரு தங்கக் கிண்ணத்தில் வைத்து, அவளின் தண்ணீருடன் குழைத்து, இலட்சுமணரின் சரீரம் முழு வதும் தடவினாள். புண்கள் ஆறின. மூர்ச்சையும் நீங்கியது. அவரின் வெளிறிப் போன முகம் முன்போல் பிரகாசமடைந்தது. அமோக விஜயா என்கிற சக்தியும் அவரிடமிருந்து விலகியது. யுத்த பூமியிலேயே, இராமர், இலட்சுமணருக்கும் வைசால்யாவுக்கும் அவளுடைய ஓராயிரம் நண்பிகளுடன் திருமணம் செய்து வைத்தார்.(JR)

ஆரோக்யத்தை மீண்டும் பெற்ற இலட்சுமணர், இராவணனுடன் போரைத் தொடர்ந்தார்.

வானில் தேவ கணங்களுடன் சென்று கொண்டிருந்த அகத்தியர் கீழே இறங்கி, யுத்த களத்திற்கு வந்து, இராமருக்கு ஆதித்ய இருதயம் என்கிற சூரிய வழிபாட்டு தோத்திரத்தை உபதேசித்தார்.

இந்த தோத்திரம் போரிலும் மற்றும் எதிரிகளிடமும் இருந்து நிச்சயமாக வெற்றியைத் தரும்; நிறைந்த ஆயுளைத் தரும்; செல்வத்தையும் தரும்.

மூல இராமயணத்திலும் மற்றும் பல இராமாயணங்களிலும் இந்த தோத்திரம் காணப்படவில்லை. இராமாயணத்தை விமர் சனம் செய்யும் வியாக்யான கர்த்தர்களும் இதற்கு விமர்சனம் செய்யவில்லை. ஆகவே, இது பிற்கால சேர்க்கையே (சி.ஆர்.சி.,).[62]

இராம - இராவண யுத்தம் இரவு பகலாக, ஒரு கணமாவது ஓய் வில்லாமல், இடைவிடாமல் நடந்தது. இந்திரனின் தேரோட்டியான மாதலி பிரும்மாஸ்திரத்தை உபயோகித்து இராவணரைக் கொல்லும்படி ஞாபக மூட்டினார். இராமரும் பிரம்மாஸ்திரத்தை இராவணனின் மார்பில் ஏவி அவருடைய உயிரைப் பறித்தார்.

சில நூல்களில் விபீஷணர் இராவணரின் உயிர்நாடி அவரின் நாபிப்பிரதேசத்தில் இருப்பதாகவும், அதை பாணத்தால் அடித்தால் இறந்து விடுவாரென்றும் காட்டிக் கொடுக்க, இராமரும் அப்படியே செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

தன்னைச் சிறையில் அடைத்து, அவமானப்படுத்திய இராவ ணேஸ்வரர் இறந்ததைக் கண்ட தேவேந்திரன் மிகவும் ஆனந்த மடைந்தார். இராமரைப் பாராட்டினார். இராமர் கேட்ட வரத்தைக் கொடுத்தார். அதனால் இராமரின் சைன்யத்திலிருந்த காயப் பட்டவர்கள் குணம் அடைந்தார்கள்; இழந்த அவயங்களை மீண்டும் பெற்றார்கள்; உயிரிழந்த அனைவரும் உற்சாகத்தோடு ஆரோக்கியமாக எழுந்தார்கள்.

ஒரு சமயம் இராவணர் கைலாசமலை மீது பறக்கும்போது நந்தி தடுத்து நிறுத்தினர். சீற்றம் அடைந்த இராவணர் நந்தியுடன் சண்டையிட்டு விட்டு, அவரை மதிக்காமல் அம்மலையைப் பெயர்க்க ஆரம்பித்தார், மலை கிடுகிடுவென்ற நடுங்கியது.

சிவகணங்கள் பயந்து மிரண்டார்கள். பார்வதி தேவியும் நடு நடுங்கி, பரமசிவனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். (பிரபஞ்சத்திலுள்ள சகல பதார்த்தங்களுக்கும் சக்தியாக விளங்கும் மகாதேவி நடுங்கினாள் என்பது எப்படி பொருந்தும் (சி.ஆர்.சி.,)

சிவபெருமானால் தண்டிக்கப்பட்ட இராவணர், அவரை பலவாறாக போற்றி, சாம கானத்தினால் வணங்கி, பிரீதி செய்தார், சிவபெருமானும் கருணைக் காட்டி, சந்திர ஹாசம் என்ற

62. யுத்தகாண்டம் சர்க்கம் 106, பக் 405 CRS.

கத்தியைக் கொடுத்தார். ''இதை பூஜை செய்வதை நிறுத்தினால் அது என்னிடமே திரும்பி வந்து விடும்'' எனவும் சொன்னார்.

சுகேசன் என்ற ராட்சசன் தபஸ் செய்து பார்வதி பரமேஸ்வரர் களிடமிருந்து வரங்களைப் பெற்று பெருமையுடன் இருந்தான். அவனுக்கு மாலி, சுமாலி மற்றும் மால்யவான் என மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். (மால்யவான் என்ற ஒரு மலையும் இருந்தது) இவர்களுக்கும் அமரர்களுக்கும் இடையே போட்டியும் காழ்ப்புணர்ச்சியும் ஏற்பட்டு விரோதிகளானார்கள்.

தேவர்கள் (அமரர்கள்) விஷ்ணுவிடம் தஞ்சம் அடைந்து தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டினார்கள். மகாவிஷ்ணுவும் அவர்களைக் கொல்லப் புறப்பட்டார். இதை அறிந்த மாலியும், சுமாலியும் மால்யவானைப் பார்த்து சொன்னார்கள்.

''வேதங்களை முற்றிலும் கற்றோம், தானங்களைக் கொடுத் தோம், யாக யக்ஞங்களைச் செய்தோம், அளவற்ற ஐஸ்வர்யங்களை அனுபவித்தோம், நோயற்ற வாழ்வை அடைந்தோம், தர்மத்தை நிலைநிறுத்தினோம். தேவர்களை ஜெயித்தோம். நம்மிடத்தில் விஷ்ணுவிற்கு விரோதமுண்டாக நியாயமில்லை. தேவர்களுடைய தோஷத்தால் அவருடைய மனம் கலங்கியிருக்கிறது. நாம் அவருக்கு அபகாரம் யாதொன்றும் செய்யவில்லை. இது தேவர்களால் வந்த கெடுதி. நாம் ஒன்று சேர்ந்து அவர்களைக் கொல்ல வேண்டும்.''

மால்யவான் தலைமையில் மாபெரும் படை கிளம்பியது. இதை தேவர்கள் மூலம் அறிந்த மகாவிஷ்ணுவும் கருடன் மீது அமர்ந்து யுத்தம் செய்ய ஆரம்பித்தார். தாக்குதலை சமாளிக்க முடியாமல் ராட்சச படைகள் சிதறித் தத்தளித்தார்கள். ராட்சசர்களும் மாதவனை நான்கு புறங்களிலும் அடித்துப் பிளந்தார்கள்.

மிகவும் கோரமான யுத்தத்தில் ராட்சச படை இலங்கையை நோக்கி ஓடியது. அடித்துக் கொல்லப்பட்ட அசுர சைன்யத்தில் ஏராளமானவர்கள் சமுத்திரத்தில் வீழ்ந்தார்கள். அசுரப்படை தோல்வி அடைந்தது.

வருத்தமும் கோபமும் அடைந்த மால்யவான் விஷ்ணுவை நோக்கி ''அடே வாசுதேவா! பெரியோர்கள் வெகு காலமாக அனுஷ்டித்து வரும் தர்மத்தை அறியாயோ? யுத்தம் செய்ய இஷ்ட மில்லாமல், பயந்து ஓடும் எங்களை, விவேகமற்றவனைப் போல் அடித்துக் கொல்கிறாயே! யுத்தத்தில் புறங்காட்டி ஓடுபவர்களைக்

கொல்வது அசுரர்களுக்கு சுபாவ தர்மம். மற்றவர்கள் அப்படிச் செய்தால் புண்யவான்கள் அடையும் ஸ்வர்கத்தை அடைய மாட்டார்கள். நல்லது, சங்கு, சக்ரம், கதை, சாரங்கம் முதலிய ஆயுதங்களைத் தரித்து யுத்தத்திற்கு சித்தமாயிருக்கும் உனக்கு ஆசையிருந்தால், இதோ நிற்கிறேன். என்னுடன் யுத்தம் செய்,'' என்று கர்ஜித்தான்.

மால்யவான் என்ற மலையைப் போல் அசையாமல், கலங்காமல் மால்யவான் நிற்கக் கண்டு மகாவிஷ்ணு, முன்காலத்தில் மகா பலியைப் பார்த்துச் சொன்னதைப் போல, ''அடே, ராட்சசா' உங்களால் கொல்லப்பட்ட, இம்சிக்கப்பட்ட தேவர்களுக்கு, உங்களைக் கொல்வதாக அபயம் கொடுத்திருக்கிறேன். அதை இப்பொழுது நிறைவேற்றுகிறேன். அப்படிச் செய்வதில், தோற்று ஓடுகிறவர்களை அடிப்பது தோஷமில்லை. என்னுயிரைக் கொடுத் தாவது தேவர்களின் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆகையால், நீங்கள் ரசாதல பாதாள லோகங்களில் ஒளிந்தாலும் கொல்வேன்'' என்றார்.[63]

மால்யவான் கார்த்திகேயருடைய சக்தி ஆயுதத்தால் விஷ்ணுவை அடிக்க, அவர் அதைப் பிடிங்கி எடுத்து அடிக்க, அது ஸ்கந்தரால் பிரயோகிக்கப்பட்டது போல் மால்யவனின் மார்பில் பாய்ந்தது. மால்யவன் தோல்வி அடைந்தார். அவரின் சேனைத் தலைவர்கள் மடிந்தார்கள், மற்றவர்கள் பாதாள லோகத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டார்கள்.

தேவர்கள், அச்சுதா!; அமரர் ஏறே! என விஷ்ணுவைப் புகழ்ந் தார்கள், இராமர் மஹா விஷ்ணுவின் அவதாரம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்தக் கதை இராமாயணத்தில் சேர்க்கப் பட்டிருக்கலாம்.

தண்டகாரண்ய தென்னிந்தியா அமரர்களின் அயோத்தியின் ஆளுகைக்குட்பட்டது. சுக்ரீவனும். விபீஷணனும் கோசல தேசத் தின் சிற்றரசர்கள் ஆனார்கள்.

மிகவும் மனநிறைவுடன் மகிழ்ச்சி அடைந்த இராமர் சுக்ரீவரை நோக்கி, ''அயோத்தியை விட்டு புறப்பட்டவுடன், நாங்கள் பல்வேறு இடங்களுக்கு அடர்ந்த வனங்களில் பிரயாணம் செய்தபோது, அநேக இளவரசிகளையும் அழகிய பெண்களையும் சந்தித்தோம். அவர்களை திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்திருந்தோம்.

63. உத்ர காண்டம் சர்க்கம் 8 பக் 21CRS

அந்த வாக்கை நிறைவேற்றுவதற்கு இதுவே தருணம். ஆகவே, உடனே புறப்பட்டுச் சென்று அவர்கள் அனைவரையும் இங்கே அழைத்து வர ஏற்பாடு செய்,'' என உத்திரவிட்டார். சுக்ரீவர் அப்படியே செய்ய, இராமர் இலட்சுமணர்கள் அவர்களை மணந்து கொண்டு நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். இலட்சு மணர் 16,250 மனைவிகளுடனும் இராமர் சீதை, ரெடினாபா, ஸ்ரீதர்மா மற்றும் பிரபாவதி என்று 4 மனைவிகளுடனும், அங்கு வாழ்ந்தார்கள்.[63A]

விபீஷணரின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கைக்கு செல்லும் பாலத்தை, இராமர் உடைத்தார். இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பிருமஹத்தி தோஷ பரிகாரம் செய்தார். ஐந்து நாட்களில் கட்டப்பட்ட தற்காலிக மிதக்கும் பாலம், இராமராலேயே உடைத்து எறியப்பட்டது எனக் கண்டோம்.

ஆனால், ஆன்மீக சுயநலவாதிகள் அந்தப் பாலம் இன்றும் இருப்பதாகவும், அதனால் இலங்கையை இணைக்க வேண்டிய சேது சமுத்திர திட்டம் நிறைவேறாமல் தடுக்கிறார்கள். தமிழ் நாட்டின் வர்த்தகம் பாதிக்கப்படுகிறது.

சங்கீத நாடக அகாடமியால் வெளியிடப்பட்ட 'ஏஷியன் வேரியே ஷன்ஸ் இன் இராமாயணா' என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ள சில தகவல்களை நாம் காண்போம் (அவைகளின் பக்க எண்கள் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன.)

இராமரின் கதை பல நாடுகளில் உள்ள மக்களை பல தலைமுறைகளாகப் பரவசமடையச் செய்தது. அவர்கள், இராமரின் வீர தீர பராக்ரமச் செயல்களையும், சாதனைகளையும் தங்கள் நாட்டின் கலாசாரம் மற்றும் பண்பாடுகளுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதி கொண்டார்கள்.

திபேத்திய இராமாயணத்தில் வாலியை அடையாளம் காண சுக்ரீவனின் வாலில், இராமர் ஒரு கண்ணாடியை கட்டி விட்டார். அனுமார் சுக்ரீவனின் மந்திரியானார்; அவரின் மரணத்திற்குப் பின் கிஷ்கிந்தையின் அரசரானார் (பக்கம்: 165)

லாவோஸ் இராமாயணத்தில் பராலாக், பரா ராம்' (பிரியமுள்ள இராம இலட்சுமணர்கள்) என்று கூறுகிறார்கள் ரபண சுவான் (இராவணன்) தலைநகர் இந்த பதநகோனிலிருந்து (அங்கோர்) தன்

63.A. JR II/ P 166

தலைநகரை இலங்கைக்கு மாற்றினார். இந்த பதநகோனிலிருந்து இராமர் இலங்கைக்குச் சென்று தன் மனைவி சீதையை மீட்டார். பிறகு வியட்நாமிற்குப் புறப்பட்டார் (பக்கம்: 221)

சயாம் இராமாயணத்தில், போர்களின் வெற்றிகளாலும், தன்னால் அடக்க முடியாத, அழகிய பெண்களின் மேலுள்ள காம வெறியாலும், இராமர் பல திருமணங்களைச் செய்து கொண்டார். தன் தலைநகரிலிருந்து அடிக்கடி காதலுக்காகவும், போருக்காகவும் தலைமறைவு ஆவார். சீதை இராமருடன் சண்டையிட்டு சமாதானம் ஆவாள் (பக். 299, 300).

இராமர் சீதையைப் புறக்கணித்து விட்டு, கோங்கெடாங்க் தேசத்தின், புத்ரி ஜின்டான் பேரம்பன் என்ற இளவரசியின் மேல் காதல் கொண்டார். ஆனால், அந்த இளவரசியின் மீது ரது பஹ்லாவன் என்ற மகாராஜாவும் ஆசை வைத்து திருமணம் செய்து கொள்ள விரும்பினார்.

இளவரசி தன்னை மணந்து கொள்பவர்க்கு இரண்டு நிபந் தனைகளை விதித்தாள்.

1) தன்னுடன் சண்டையிட்டு வெற்றி பெற வேண்டும்.
2) கெலிகா லெம்பு ஜண்டான் என்ற காளையுடன் மோத வேண்டும்.

இரண்டு போட்டிகளிலும், பாக்டோகல் என்ற சிறு தேவதை யிடமிருந்து கற்றுக் கொண்ட தந்திரங்கள் மூலம், இராமர் வெற்றி பெற்றார். புத்ரி ஜிண்டன் பேரம்பனுடன், அவருடைய இரு சகோதரிகளான புத்ரி ஜிண்டன் ஆயு மற்றும் புத்ரி ஜிண்டன் போங்சுவுடன் திருமணம் செய்து கொண்டார் (பக்.301)

இந்த திருமணத்தால் அவருக்கு பிரச்சினைகள் உண்டாயின. இந்த திருமணங்கள் அந்நாட்டின் நெறிமுறைகளுக்கும், ஒழுக்கத் திற்கும் புறம்பாக இருந்தன. அதனால் பேதார குரு என்ற கடவுள், தோற்றுப் போன, பொறமை கொண்ட, ரது பஹ்லாவான் என்ற மகாராஜாவின் பிராதின் பேரில், இராமரைக் கைது செய்து, சங்கிலியால் பிணைத்து, காயங்கன் என்ற ஆகாயத்தில் வைத்து விட்டார். ஆனால், பாக்டோகல் என்ற சிறுகடவுள், பேதார குருவை விட மேலான கடவுளாக மாறி, அவரை மீட்டு, மீண்டும் பூலோகத்திற்கு கொண்டு வந்தார். பூலோகத்திற்கு திரும்பிய இராமர், புதிதாக மணந்து கொண்ட, 3 மனைவியரையும் வேண்டா மென்று ஒதுக்கி விட்டார் (பக்கம் 301)

ஒரு சமயம் சீதை கண் நோயினால் பாதிக்கப்பட்டாள். அதைக் குணப்படுத்த ‘புங்கா அங்க்ரீக் தானி’ என்கிற பூ தேவைப்பட்டது. இராமர், தேவி தேவதானி என்றவள் குகைக்குச் சென்றார். அவரைத் தடுத்த காவல் பேயைக் கொன்றார். தேவி தேவதானி அழகில்லாதவள். அவள், இராமர் தன்னுடன் மூன்று இரவுகள் தங்கினால் அந்தப் பூவைக் கொடுப்பதாகவும், சீதையின் கண் நோய் குணமானவுடன், அதைத் திரும்ப கொடுக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தாள். அவளின் விகாரமான தோற்றத்தை இராமர் வெறுத்தாலும், வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். அவளும் கர்ப்பமடைந்து, ஒரு மகனை பெற்றெடுத்தாள். இராமர், தன் காரியம் முடிந்த உடன் அந்தப் பக்கம் செல்லவே இல்லை.

கர்கா சிங்க என்ற அவளுடைய விகாரமான தோற்றத்தையே கொண்ட மகன், தன் தந்தையைத் தேடலானான். இராமர் அவனையும், அவன் தாயையும் நிராகரித்தார். சீற்றம் அடைந்த தேவி தேவ தானி, அந்தப் பூவை திரும்ப எடுத்துக் கொள்வதாகவும், அதனால் சீதை மறுபடியும் குருடாவாள் எனவும் சவால் விட்டாள். ஆகவே, இராமர் அவளையும், அவள் மூலம் தனக்குப் பிறந்த மகனையும் ஏற்றுக் கொண்டார். உடனே, அதிசயிக்கும் விதமாக அவர்கள் இருவரும் அழகுள்ளவர்களாக மாறினார்கள். இராமருடனேயே தங்கினார்கள் (பக்கம்: 302).

கோடா லேடாங் என்ற நாட்டிலிருந்து, புத்ரி பிஜாக் லக்சனா என்ற அழகிய பெண்ணைக் கடத்த இராமர் தீர்மானம் செய்தார். ஏற்கனவே அவளுக்கு, ராஜா தேவ இந்தேராவுடன் திருமண நிச்சயதார்த்தம் செய்யப்பட்டிருந்தது.

பாக்தோகல் இராமரை பாம்பாக உருமாற்றி, தானும் திருமண மண்டப சமையல் அறையில் ஒளிந்து கொண்டு, மணமகளாகிய இளவரசியை, பாம்பாகிய இராமரை விட்டு தீண்ட வைத்தார். மணமகளும் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டாள். எவ்வளவு வைத்யம் செய்தும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை. பாக்தோகல் இராமரை மீண்டும் வாலிபராக மாற்றி, தன்னையும் ஒரு மருத்துவர் என்று சொல்லிக் கொண்டு வைத்தியம் செய்தார்; மணமகளும் உயிர்த்தெழுந்தாள். இராமரை ஏற்றுக் கொண்டாள்.

சில மாதங்கள் சென்ற பின், இதைத் தெரிந்து கொண்ட தேவே இந்தேரா இராமர் மீது போர்த்தெடுத்தார். இராமரும், பாக்தோகலும் பிடிபட்டார்கள். இராமர் தலை கீழாக தொங்க விடப்பட்டார்; பாக்தோகல் உயிருடன் புதைக்கப்பட்டார்.

இந்நிலையில், இராமரின் தந்தை சிராத் மகாராஜவும், தேவே இந்தேராவின் தந்தையும் நீண்ட கால நண்பர்கள் எனத் தெரிய வந்தது. சமரசம் ஏற்பட்டு அமைதி நிலவியது. இராமரும் புத்ரி பிஜக் லக்ஷணாவை தேவே இந்தேராவிடம் ஒப்படைத்தார். (பக்கம்: 303).

இலங்கையிலிருந்து, 14 ஆண்டு வனவாசத்திற்குப் பிறகு, இராமர் தனது 42வது வயதில் திரும்பி வந்து, பட்டாபிஷேகம் செய்து கொண்டார். 11 ஆண்டுகள் வர்ணாஸ்ரம க்ஷத்திரிய தர்மப் படி ஆட்சி செய்தார். தனது, 53வது வயதில், பல்லோர் முன்னிலையில் சரயு நதியின் வெள்ளத்தில் குதித்து மூழ்கிவிட்டார்.

அத்தியாயம் – 2

சீதை

ரிக் வேதத்திலும் கிருஹ்ய சூத்திரத்திலும் வயல்களுக்கு தேவதையாகப் பூஜிக்கப்படும் சக்தியே சீதை என்று சொல்லப்படுகிறது.

சீதை பூமியிலிருந்து தோன்றி பூமியில் மறைந்தாள் எனப் படுவதும் இந்த கொள்கையை வலுப்படுத்துகிறது. (வீபர் பண்டிதர் (சி.ஆர்.சீ., பாலகாண்டம்.)

ஜனகர் யாகம் செய்ய கலப்பையால் பூமியை உழுது சுத்தி செய்து கொண்டிருக்கையில் ஒரு பெண் குழந்தை அவருக்கு கிடைத்தது. அவள் பூமியிலிருந்து உண்டானதால் அவளுக்கு சீதை என்று பெயரிட்டார். சீதை கும்ப ராசியில் பிறந்தாள் என்று சொல்லப்படுகிறது. வைகாசி மாதம் சுக்ல பட்சம் நவமி திதியில் அவதரித்தாள் என்று மகிஷாசுந்தரி தந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சீதை என்றால் கலப்பை நுனி என்றும், வயல்களை உழும்போது உண்டாகும் சால்களுக்கு சீதை என்றும் பெயர்.

கிரேக்க புராணத்தில் இல்லியட் (II) என்ற வரிகளில்

Great erectheus swayed,

That owed his nurture to Blue eyed maid

But from the teeming furrow took his birth

The mighty offspring of the foodful earth[63B]

என்ற வரிகளில் சீதையின் பிறப்பை போல் வர்ணிக்கப்படுகிறது.

ஸ்திரி புருஷ சம்பந்தமில்லாமல் பூமியிலிருந்து உண்டானதால் ஸ்வபாவத்திலேயே அவள் நிகரற்ற கீர்த்திசாலி.

---

63 B, P 66 VR / ALL Note

திபெத்திய இராமாயணத்தில் சீதை இராவணனின் மகள் என்றும் அவளை ஒரு தாமிர பெட்டியில் வைத்து தண்ணீரில் தள்ளி விடப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

பாகவத புராணத்தில் (கி.பி. நான்காம் நூற்றாண்டில்) முதல் தடவையாக சீதை இலட்சுமி தேவியின் அவதாரம் என்று சொல்லப் படுகிறது. காளிகா புராணத்தில் சீதை என்ற பெண் சிசுவும், இரண்டு ஆண் சிசுக்களும் ஜனகர் வயலை உழுதபொழுது கிடைத்தனர் என்று சொல்லப்படுகிறது.

அக்னியில் தோன்றினாள் என்று ஆனந்த இராமாயணம் கூறுகிறது.

ஜைன இராமாயணத்தில் ஜனகர் வயலை உழுதபோது இள வரசன் குண்டலாமண்டிட் மற்றும் அதிசுந்தரியின் ஜீவர்கள் (ஆன்மா) அவருக்கும் ராணி வைதேகிக்கும் இரட்டை சிசுக்களாகக் கிடைத்தார்கள். அவர்களின் பெயர் பாமண்டல் மற்றும் சீதை.

சாக்த இராமாயணத்தில் சீதை பராசக்தி என்று வர்ணிக்கப் படுகிறாள்.

அத்புத சம்ஸ்கிருத இராமாயணத்தில், நாரதரை இலட்சுமி அவமானப்படுத்தியதால், அவர் இலட்சுமியை ''மண்டோதரியின் மகளாக பிறக்க கடவாய்,'' என்று சபித்ததாக சொல்லப்படுகிறது.

சீதையின் தன்மை சுவடுகள் தேவி சூக்தம், தேவி சப்தசதி, தேவி பாகவத புராணம், சக்தி தந்திரம் மற்றும் பல சக்தி புராணங் களிலும் காணப்படுகின்றன.

வால்மீகி மகரிஷி இராமாயணத்தை எழுதுவதற்கு முன்பே இந்துக்களின் குருவான வேதவியாசர் இராமர் கதையை எழுநூறு பாடல்களில், இராமோபாக்யானம், என்ற தலைப்பில் எழுதியுள்ளார். அதில் சீதை ஒன்றும் கர்பவாசம் செய்யாமல் பிறந்தவள் இல்லை (அயோனிஜா) என்று கூறியிருக்கிறார். வால்மீகி இராமாயணம், இராமோபாக்யானத்தின் தழுவல் நூலே.

பலவிதமான இராமாயணங்களில் எவ்வாறெல்லாம் சீதையின் பிறப்பைப் பற்றி கூறப்பட்டுள்ளது என்று காண்போம்.

ஜைன இராமாயணம்

இராவணரின் மனைவி மந்தோதரி ஒரு பெண் சிசுவைப் பெற்றெடுத்தாள். குழந்தையின் ஜாதகத்தை அலசிய சோதிடர் அப்பெண் குழந்தையால் தகப்பனுக்கு மரணம் ஏற்படுமென்றும் இராட்சச வம்சமும் அழியும் என்றும் கணித்தார். ஆகவே, இராவணர் அப்பெண் சிசுவை கொலை செய்ய விரும்பினார். மந்தோதரி தடுக்கவே, அச்சிசுவை ஒரு பெட்டியில் வைத்து மந்திரி மாரீசனிடம் கொடுத்து, அதை எங்கேயாவது தொலைத்து விடுமாறு உத்தரவிட்டார்கள். மாரீசனும் அந்த பெட்டியை ஜனகரின் அரண்மனை தோட்டத்திலிருந்த ஏர்முனை சாலில் (Furrow) வைத்துவிட்டு, ஜனகரிடம் ஒரு பெண் சிசு சாலில் கிடைத்ததாகக் கூறி, ஜனகரின் மனைவியிடத்தில் கொடுத்தார். ஏர்முனையில் கிடைத்ததால் சீதை என்று பெயரிடப்பட்டாள். ஏர் முனைக்கு சீதை என்று பெயர். மற்றொரு கூற்று ஜனகர் வயலை உழுதபோது பெட்டி வெளிப்பட்டது என்பதாகும்.

லாவோஸ் இராமாயணம்

குழந்தை பிறந்தவுடன் ஜோதிடர்கள் குழந்தையினால் ஆபத்து நேரிடும் என்று கூறியதால் இராவணர் அதை ஒரு தங்க பெட்டியில் வைத்து கடலில் தள்ளி விட்டார். மிதந்து வந்த தங்க பெட்டி ஜம்பு தீவின் கரையில் ஒதுங்கியது. கசப்பா (காஸ்யபர்?) என்ற ரிஷி அந்த தங்க பெட்டியை எடுத்து கொண்டார். பெட்டியை திறந்த ரிஷி அந்த குழந்தையைத் தூக்கியபோது அது கண்களை, தேய்த்து (சீ) கொண்டே (தா) திறந்ததால் சீதை என்று பெயர் வைத்தார்.

ஒரு சமயம் நாரதர், இராவணேஸ்வரரின் தர்பாருக்கு வந்தார். அங்கு, இராவணேஸ்வரரிடம் ஒரு குறி சொல்பவர், தசரத புத்திரர் இராமனும், ஜனகரின் புத்திரி ஜானகியும் அவரைக் கொல்வார்கள் என தெரிவித்தார். மற்றொருவரின் மனைவியால் இராவணேஸ்வரர் கொல்லப்படுவார். அந்த பெண் சீதை என்றும் ஆண் இராமர் என்றும் சொன்னார். இதைக் கேட்ட நாரதர் இவ்விஷயத்தை தசரதர் மற்றும் ஜனகரிடம் தெரிவித்தார்.

இராமரும் சீதையும் பிறப்பதற்கு முன்பே வேரைக் கிள்ளி எறிய வேண்டும் என்ற நோக்கத்தில் விபீஷணர் தசரதரையும் ஜனகரையும் கொல்ல நிச்சயித்தார்.[64] அவர்களின் நாட்டிற்கே சென்று விட்டார். தசரதரும் ஜனகரும் விபீஷணரின் முயற்சியை முறியடிக்கும் நோக்கத்துடன் மாறுவேடத்தில் தங்கள் நாட்டை விட்டு விலகி மறைந்து வாழ்ந்தார்கள். தசரதரின் பிரதான மந்திரி

64.JR. PP 162-169

அவரிடம் இராவணேஸ்வரர் பாரத தேசத்தின் பாதியை ஆட்சி செய்கிறார் என்றும் அவரின் இராணுவமும், இராணுவத்தின் செயல்பாடுகளும் பிரமாதமானவை என்றும் மற்றும் அவரின் திறமை ஒப்பில்லாதது என்றும் தெரிவித்தார்.

குணவதி என்ற பேரழகியை அடைவதற்கு தாஸ்தத் என்பவனும் ஸ்ரீகாந்த் என்பவனும் பரஸ்பரம் சண்டையிட்டு கொலையுண்டார்கள். தற்கொலை செய்து கொண்ட குணவதி அரண்மனை புரோஹிதரின் மகளாக மறுபிறவி எடுத்தாள். அவளுக்கு வேகவதி என பெயரிட்டார்கள். அவள் அழகியாகவும் அகம்பாவமும் திமிரும் உடையவளாக வளர்ந்தாள். இளவரசன் வஜ்ரகாந்த், அரண்மனை புரோஹிதரிடம் வேகவதியை தனக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டினான். புரோஹிதர் மறுக்கவே இளவரசன் அவரின் தலையைத் துண்டித்தான். அவனின் காம இச்சைக்கு இணங்க மறுத்த வேகவதியை பலவந்தமாக, கொடூரமாக கற்பழித்தான். வேகவதி வஜ்ரகாந்த்திற்கு "என் அடுத்த ஜன்மத்தில் உன்னுடைய பரிதாபமான சாவிற்கு காரணமாவேன்," என சாபமிட்டாள். வேகவதி துறவியாகி பின் மறுபிறவியில் சீதையாகவும்[65] வஜ்ர காந்த் இராவணேஸ்வரராகவும் பிறந்தார்கள்.

சீதையின் திருமணம்

தட்ச பிரஜாபதி யாகம் செய்தபோது, சிவபெருமானுக்கு அவிர்பாகம் கொடுக்க மறுத்ததால், சீற்றமடைந்த சிவபெருமான் அவர்களைத் தண்டிப்பதற்கு தன் வில்லை வளைத்து அம்பை விடுவதற்கு யத்தனித்தார். இதைக் கண்டு வருத்தமும் பயமும் அடைந்த தேவர்கள், சிவபெருமானை பலவாறாக துதித்து, அவரை சாந்தப்படுத்தி அவரின் அன்பையும் பெற்றார்கள். சினம் தணிந்த சிவனார் தனது வில்லை தேவர்களுக்குக் கொடுத்தார். பல தலைமுறைகள் தாண்டி அந்த வில் ஜனகருக்கு வந்தது.

விஸ்வாமித்திரரின் யாகத்தைக் காப்பாற்ற, அவருடன் காட்டிற்குச் சென்ற இராமர், அங்குள்ள தாடகை முதலிய அரக்கர்களைக் கொன்று குவித்தவுடன், மகரிஷி அவரை மிதிலாபுரிக்கு அழைத்து சென்றார். மிதிலாபுரியின் உப்பரிகையில் இருந்து இராமரைக் கண்டு சீதை பரவசம் அடைந்தாள்.

65. J R P 393

ஜனகர் தன்னிடமுள்ள வம்ச பரம்பரையாக வந்துள்ள சிவ தனுஸை, விஸ்வாமித்திரரின் வேண்டுகோளுக்கு இணங்க இராம இலட்சுமணர்களுக்கு காட்டினார். இராமர் அந்த வில்லை நாண் பூட்டி வளைத்தார். வில் முறிந்து விட்டது.

இராமருக்கு விவாகம் செய்து கொடுக்க நிச்சயித்ததைக் கேட்ட சீதை, மிகுந்த ஆனந்த பரவசத்தினால் அவளை அறியாமலேயே துள்ளிக் குதிக்கலானாள். அவளுடைய இன்ப கனவுகள் பலித்து விட்டன. இதயம் மகிழ்ச்சியினால் விம்மியது. மகிழ்ச்சியடைந்த ஜனகர் சீதையை இராமருக்கு கன்யாதானம் செய்து கொடுத்தார்.

சீதையின் திருமண வாழ்க்கை

சீதையின் ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர்களும் கைரேகை சாஸ்திர நிபுணர்களும் இவள் பிற்காலத்தில் காட்டில் வசிக்க நேரிடும் என பலன் சொன்னார்கள்.

சீதையும் இராமரும் அன்யோன்யமான தாம்பத்திய சுகத்தை அனுபவித்துக் கொண்டு மிகவும் சந்தோஷமாக காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

பித்ரு வாக்கிய பரிபாலன நிமித்தம் இராமர் வனவாசம் செய்ய தயாரான போது, பதினேழு வயதே நிரம்பிய சீதை அவருடன் காட்டிற்குச் செல்வேன் என மிகவும் அடம் பிடித்தாள். அரண்மனை வாசத்தின் சுகபோகங்களை அனுபவித்துப் பழகிய சீதைக்கு அழுகை வந்து விட்டது. அனுபவிக்க வேண்டிய காலத்தில் கணவர் மரவுரியில் இருப்பதைப் பார்த்த சீதை மிகவும் மனம் நொந்து கண் கலங்கினாள். தானும் மரவுரி தரித்து கணவருடன் கானகம் புகுவேன் என்று மிகவும் பிடிவாதமாக அடம் பிடித்தாள். மறுத்தால் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொள்வேன் என்றாள். வேறு வழியின்றி இராமரும் சம்மதித்தார்.

காட்டிற்கு போகும்போது மனதில் நிறைந்த சோகத்தால் பெருமூச்சு விட்டுக் கொண்டு பிசாசம் பிடித்தவளைப் போல் திகைத்து நின்றாள். சீதை அழுது கொண்டே இரதத்தையும் சுமந்தரரையும் பார்த்து கொண்டிருந்தாள்.[66]

வழியில் தங்கும் இடம் எல்லாம் மான், பன்றி, ஆடு, மயில் போன்ற சாதுவான மிருகங்களைக் கொன்று மாமிசத்தை புசித்

66. அயோத்யா காண்டம் பக் 245 சி.ஆர்.எஸ்.

தார்கள். நதிகளில் நீராடினார்கள். இயற்கையின் அழகை ரசித் தார்கள். ஆனாலும் உள் மனதிற்குள் வனவாசம் செய்ய வேண்டி யுள்ளதே என்ற வருத்தம் இருக்கத்தான் செய்தது.

இராமரும் இலட்சுமணரும் ஆலம் பாலால் ஜடையை மகுடமாகச் செய்து கொண்டார்கள். அதை பார்த்த சீதை, கண்களில் கண்ணீர் மல்க, தழுதழுத்த குரலுடன், இராமரைப் பார்த்தபடி சுமந்திரரிடம் சொன்னாள், "என் மாமியார்களுடைய சரண கமலங்களில் என் சாஷ்டாங்க நமஸ்காரத்தைச் சொல்லுங்கள்," என்று தலை குனிந்தபடியே, அழுது கொண்டே கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டு வேகமாக சென்று விட்டாள்.[67]

இவர்களை வேவு பார்த்த விராடன் என்ற உள்ளூர் மனிதன் (அரக்கன்) சீதையைப் பிடித்து தூக்கி தன் இடுப்பில் வைத்து கொண்டு விட்டான். ஜடாமுடி தரித்து, சன்னியாசி வேஷம் அணிந்து நீங்கள் வில், அம்பு, கத்தி வைத்திருக்கிறீர்கள். இருவரும் ஒரே பெண்ணை பார்யையாக கொண்டிருக்கிறீர்களா என்று கிண்டல் செய்தான். இராமர் அவனைக் கொன்று சீதையை மீட்டார் (சீதைக்கு அந்நிய மனிதனின் ஸ்பரிசம் ஏற்பட்டதற்கு என்ன பரிகாரம் செய்தார்? என சி.ஆர்.சீனிவாச ஐயங்கார் விமர்சனம் செய்கிறார்)

தன் பர்ணசாலையை மாற்றிக் கொண்டே, தெற்கு நோக்கி, மேற்கு தொடர்ச்சி மலை மீது பயணம் செய்து கொண்டிருந்தார்கள். வழியில் அத்ரி மகரிஷியின் ஆஸ்ரமத்தைக் கண்டு அவருக்கு வணக்கம் தெரிவித்து ஆசி பெற்றார்கள். அத்ரி ரிஷியின் பத்தினி அனுசுயா, இராஜகுமாரியான சீதை உடல் மெலிந்து, உயர்ந்த ஆடை ஆபரணங்கள் இல்லாத நிலையைப் பார்த்து பரிதாபம் கொண்டாள். அவளுக்கு உயர்ந்த ஆடை ஆபரணங்களையும் அழகு சாதனங்களையும் கொடுத்தாள். அவைகள் அனைத்தையும் மிகவும் சந்தோஷத்துடன் ஏற்று கொண்ட இராஜகுமாரியான சீதை மிகவும் ஆர்வமுடன் அணிந்து கொண்டு மகிழ்ந்தாள். ஆசை இல்லாத பெண் மனம் உண்டோ?

பஞ்சவடிவில் வாழ்க்கை

பிறகு அங்கிருந்து புறப்பட்டு பஞ்சவடியை அடைந்தார்கள். தங்குவதற்கு வசதியாக பர்ணசாலை கட்டி கொண்டார்கள்.

67. அத்யாத்ம ராமாயணம் ப. 97

இராமரின் குறிப்பறிந்து, அவர் சீதையுடன் தனியாக தங்க பிரத் யேகமாக தனி பர்ணசாலையை சகல சௌகரியங்களுடன் இலட்சு மணர் அமைத்தார். பர்ணசாலையின் எட்டு திக்குகளுக்கும் உடைய அதிதேவதைகளுக்கு மாம்சங்களால் பலி கொடுத்தார்கள். தினமும் கோதாவரி நதியில் ஆனந்தமாக குளித்தார்கள். மான்களையும், பறவைகளையும், காட்டு பன்றிகளையும் வேட்டையாடி நெருப்பில் வாட்டி சாப்பிட்டார்கள்.

சீதை, இராமருடன் கோதாவரியில் ஜலக்கிரீடை செய்யும்போது சோர்ந்து போன இராமர் கரையேற முயற்சித்தபோது, சீதை அவரை கரையேற விடாமல் தடுத்து தண்ணீரை வாரி இறைத்து விளையாடினாள். இராமரின் மடியில் சீதை படுத்து கொள்ள அவர் மாமிசத்தை தானும் சாப்பிட்டு சீதைக்கும் ஊட்டி விட்டார்.[68]

சீதையின் இரக்க குணம்

இராம, இலட்சுமணர்கள் செல்லும் இடமெல்லாம் எதிர்பட்ட உள்ளூர் மக்களான அரக்கர்களை ஈவு இரக்கமின்றி இலட்சக் கணக்கில் கொன்று குவித்தார்கள். இந்த கொடூரத்தைக் கண்டு மனம் வருந்திய சீதை, "குற்றமில்லாத, கபடமற்ற மக்களை கொல்லாதீர்கள். தண்டகாரண்யத்தில் உள்ள அப்பாவி அரக்கர் களை கொன்று குவிப்பதில் ஈடுபட வேண்டாம். காரணமில்லாமல் கொல்பவன் வெற்றி பெறலாம். ஆனால், அதற்கு பிறகு புகழ் குறையும்" என்று கூறினாள்.[69]

இராமர் தன் க்ஷத்திரிய தர்மத்தை மிகவும் பெருமையுடன் அனுஷ் டித்தார். அவரின் சத்திரிய தர்மம் நற்பெயரும் புகழும் ஈன்று கடைசியில் மோட்சத்திற்கும் வழிவிடும் என்று நம்பினார். ஆகவே "ஆன்மீகவாதிகளான ரிஷிகளின் எதிரிகளான இராட்சதர்களை கொல்வேன். நான் பிராம்மணர்களுக்கு கொடுத்த வாக்கைத் தவற மாட்டேன். ரிஷிகளைக் காப்பாற்றுவேன்," என்று உறுதியாக பதில ளித்தார். என் மீதான அன்பினாலும் பாசத்தினாலும் இவ்வாறாக கூறுகிறாய் என்றார்.

ஒரு சமயம் காகாசுரன் சீதையின் ஸ்தனங்களை கொத்தியபோது சினம் கொண்ட இராமர், அதைக் கொல்ல வாளை உருவினார். சீதை இரக்கம் காட்ட சொல்லியதின் பேரில் அதன் ஒரு கண்ணை மட்டும் குத்தி துரத்தி விட்டார்.

68. ஆரண்ய காண்டம் சர்க்கம் 63, பக் 177

69. VR All P. 352-355

சீதையின் சந்தேகமும் இலட்சுமணரின் வாக்குவாதமும்

இராமரின் குரலைப் போல் ஒலித்த குரலை நம்ப வேண்டாம் எனக் கூறி, அவரைத் தேடச் செல்ல மறுத்த இலட்சுமணரைப் பார்த்து, சீதை "துர்புத்தி உள்ளவனே! நீ இராமருடைய அழிவையே விரும்புகிறாய் எனத் தோன்றுகிறது. இராமருடைய நாசத்திலேயே விருப்பமுள்ள பரதனே உன்னை இங்கே அனுப்பியிருக்கிறான்."[70] சீதையின் சுடுசொற்களைப் பொறுக்க முடியாமல் இலட்சுமணர் சீதையிடம், "பிடிவாத குணமுள்ளவளே! நீ இவ்வாறு கூறுவது தகாது" என்று சொல்லி விட்டு, இராமரைத் தேடிச் சென்றார். இராமர் இலட்சுமணரிடம் "சீதை சொன்ன வார்த்தைகளைப் பொறுக்க முடியாமல், நீ வந்தது பிசகு. ஸ்திரிகளுக்கு விவேகம் இல்லாமல் இருப்பது சகஜம். அதிலும் சீதை கோபத்தால் புத்தி மயங்கி இருப்பவள். விவேகியான புருஷன் அதை இலட்சியம் செய்வானா? சீதை எதை சொன்னாலும் நீ கோபிக்க கூடாது. அப்படி அவளுடைய வார்த்தைகளைப் பொறுக்க முடியா விட்டாலும் எங்கேயாவது மறைந்திருந்து அவளைக் காப்பாற்ற வேண்டும்."[71]

சீதை கடத்தப்பட்டது

தண்டகாரண்ய தென் நாட்டிற்கு, பாரத தேசத்தின் தென் பகுதிக்கு ஏகசக்ரவர்த்தியான இராவணேஸ்வரர், தன் சகோதரியான சூர்ப்பநகையை அங்கஹீனம் செய்தும், தன் நாட்டு மக்களான கர தூஷணர்கள் முதலிய பதினாலாயிரம் பேர்களைக் கொன்றும் அதர்ம வழியில் செயல்பட்ட இராமரை, பழி வாங்க எண்ணம் கொண்டார். தன் நெருங்கிய உறவினரான மாரீசனை, மான் உருவமெடுத்து, சீதை மயங்கும் வகையில் நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வு லாவோஸ் இராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரனின் மனைவி சுஜாதா, இராவணரைப் பழி வாங்கத் துடித்தாள். இதை தன் தெய்வீக அறிவால் புரிந்து கொண்ட தேவேந்திரன் புள்ளி மானின் உருவமெடுத்து, தலையைக் குனிந்து கொண்டு விளையாட்டுத் தனமாக இராம, இலட்சுமணர், சீதை முன் நடந்தார்.[72] எதிர்பார்த்தது போல் இராமர், சீதை விரும்பியபடி மானைப் பிடிக்க சென்றார்.

70. அத்யாத்ம இராமாயணம் பக்கம் 157
71. ஆரண்ய காண்டம் சர்க்கம் 59. பக் 153–155 72. AVR P 240,

சிறிது நேரம் கழித்து சீதையை, பூமி தாய் வசம் ஒப்படைத்து விட்டு, இலட்சுமணர் இராமரைத் தேடிச் சென்றார். இலட்சுமணர் பூமி தாயின் பாதுகாப்பில் சீதையை விட்டுவிட்டு வந்ததை இராமர் நம்பவில்லை. இராமரின் அவநம்பிக்கையால் வருத்தமடைந்த பூமி தாய் சீதையை தன் பாதுகாப்பிலிருந்து விடுவித்து விட்டாள். இத்தருணத்திற்காக காத்திருந்த இராவணேஸ்வரர் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு சீதையைத் தூக்கிச் சென்றார். தேவேந்திரனின் சூழ்ச்சி பலித்தது.

வால்மீகி இராமாயணத்தில் இராவணர் சீதையை அவளின் கூந்தலை ஒரு கையாலும், மற்றொரு கையால் இரு தொடைகளையும், பிடித்துக் கொண்டு சென்றார் என்றும், அத்யாத்ம மற்றும் கம்ப இராமாயணத்தில் அவளை பூமியோடு பெயர்த்துத் தூக்கிச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. இலட்சுமண ரேகா என்னும் பாதுகாப்பு வளையத்தைப் பற்றி வால்மீகி இராமாயணத்தில் காணப்படவில்லை.

இராவணரை மறக்காத சீதை

அசோக வனத்தில், திறந்தவெளியில், சிறை வைக்கப்பட்டிருந்த சீதை, அரக்கியர்களின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சவில்லை. சிலர் தங்கள் மன்னரின் சாதனைகளையும், வீரத்தையும், அழகு கம்பீரத்தையும் வர்ணித்து சீதையை மயக்க முயன்றார்கள். சீதை இதையெல்லாம் இலட்சியம் செய்யாவிட்டாலும் அவரின் அழகையும் கம்பீரத்தையும் கண்டு பிரமிக்காதவள் இல்லை.[73]

சீதையின் மீட்பு

சுக்ரீவனும் விபீஷணனும் தங்கள் அண்ணன்களின் ஆட்சியைக் கைப்பற்றி சிம்மாசனத்தில் அமர அவா கொண்டிருந்தனர். இராம, இலட்சுமணர்களின் வருகை அவர்களுக்கு சரியான சந்தர்ப்பமாகவும் வாய்ப்பாகவும் அமைந்தது. அவர்களின் உதவியோடு இராமர், இலங்கைக்கு ஐந்து நாட்களில் மிதக்கும் கற்களாலும் மரக்கட்டைகளாலும் கடலை நிரப்பி அவைகள் நகர முடியாதபடி செடி, கொடி, தாவரங்களாலும் இறுகக் கட்டியும், வலுவான ஒரு தற்காலிக பாலத்தை அமைத்தார். கரடி மற்றும் வானர ஸேனைகள் இந்த தற்காலிக பாலத்தின் வழியாக இலங்கையைச் சென்றடைந்தார்கள்.

73. AVR. P 245.

இராம - இராவண யுத்தம் ஏழு நாட்கள் இரவு பகலாக சிறிதும் ஓய்வின்றி நடந்தது. இறுதியில் இராவணர் அவரது நாற்பத்தி இரண்டாவது வயதில் கொல்லப்பட்டார். சீதையும் மீட்கப்பட்டாள்.

சீதையின்றி தவித்த இராமர், கிஷ்கிந்தையில் தான் இருந்தபோது, வசந்த கால பட்சிகள் கூவுவதினால் சீதை ஆசை மிகுந்து தன்னை அழைத்து பலவிதமான இன்பங்களை அனுபவித்ததை நினைவு கூர்ந்தார். சீதையின் ஆசைகளையும் மனோபாவத்தையும் நன்கு அறிந்திருந்த இராமர், நீ இராவணருக்கு ஸ்வாதீனப்படாமல் இருக்க முடியுமா? (பக்கம்: 455/yk) எனக் கூறி, அவளை அக்னி பிரவேசம் செய்ய பணித்தார். சீதை அக்னியைச் சுற்றி மெதுவாக நடந்தாள். ஆத்திரப்பட்டு உயிரை விடுவது பிசகு என்று எண்ணி, மெதுவாக நடந்தாள். தன் இதயத்தையும் நடத்தையையும் அறிந்த இலட்சுமணரும், அனுமானும், விபீஷணனும் இந்த அநியாயத்தை பொறுக்காமல் தடுப்பார்கள் என்று எண்ணி சற்று பொறுப்போம் என்று மெல்ல நடந்தாள். இது நடக்காமல் போகவே, அக்னியை ஸ்தோத்திரம் செய்து, அக்னியில் பிரவேசித்தாள்.[74] அதில் தேறிய பின் சீதையை ஏற்றுகொண்ட இராமர் தன் நாற்பத்தி இரண்டாவது வயதில் அயோத்திக்கு திரும்பினார்.

சீதா ராமர் பட்டாபிஷேகமும், அயோத்தியில் வாழ்க்கையும்

அயோத்திக்கு திரும்பிய இராமர் அதன் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். மனைவி சீதையுடன் சந்தோஷமாக காலம் கழித்து க்ஷத்ரிய தர்மபடி ஆட்சி செய்து, வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்டினார். பதினோரு ஆண்டுகள் இவ்வாறு ஆட்சி செய்து, பின் ஐம்பத்தி மூன்றாவது வயதில் சரயு நதியில் குதித்து மூழ்கிவிட்டார்.

சீதைக்கு சோதனை

தசரத மன்னருக்கு இராம, இலட்சுமண, பரத, சத்ருக்னர்கள் மகன்களாக பிறந்தபோது அவர்களுடன் கூடவே சாந்தா என்ற பெண்ணும் மகளாகப் பிறந்தாள்.[75] ஆகவே சீதைக்கு சாந்தா என்கிற நாத்தனாரும் பிரபாவதி, ரதிநாபா மற்றும் ஸ்ரீதாமா என்கிற சக்களத்திகளும் இருந்தார்கள்.[76] சீதையிடம் மட்டுமே இராமர் அதிக அன்பு காட்டியதால் மூன்று சக்களத்திகளும் சீதை

74. யுத்த காண்டம் பக். 459 சிஆர்எஸ்., 75. ஏ.வி.ஆர். பக் 34–37.
76. JR 3. பக். 282.

யின் மேல் பொறாமை கொண்டிருந்தார்கள். சாந்தா என்கிற நாத்தனார் கைகேயியிடம் அடிக்கடி சீதையைப் பற்றி கோள்மூட்டிக் கொண்டிருந்தாள்.

சீதையைக் கேவலப்படுத்தும் விதமாக சக்களத்திகள் சதி திட்டம் தீட்டி, அவளிடம் அன்புள்ளவர்கள் போல் சாமர்த்தியமாக கபட நாடகமாடி, தங்களின் சதி திட்டத்தை மறைத்து, இராவணர் எப்படி இருப்பார்? என்று அவரின் உருவத்தை சித்திரமாக வரைந்து காட்டுங்களேன் என்று அன்புடனும் ஆவலுடனும் கேட்டார்கள். முதலில் மறுத்த சீதை, இராவணரின் பாதத்தை மட்டும் வரைந்து காட்டினாள். கெட்ட எண்ணம் கொண்ட சக்களத்திகள் அந்த சித்திரத்தை இராமரிடம் காட்ட அவர் அதை பொருட்படுத்தவில்லை. ஏமாற்றம் அடைந்த அவர்கள் தங்களின் நம்பிக்கைக்குரிய பணிப் பெண்கள் மூலம் சீதை அழகிலும் வீரத்திலும் சிறந்த இராவணரை இன்னும் விரும்புவதாக ஒரு வதந்தியை நாட்டில் பரவ விட்டார்கள். இராமர் வேறு வழியில்லாமல் அவளைக் காட்டிற்கு அனுப்பிவிட்டார்.[77] இலட்சுமணர் மற்றும் விபீஷணரின் ஆலோசனைப்படி சீதைக்கு இராமர் ஈமக்காரியங்களையும் செய்து விட்டார்.

கைகேயிக்கு கக்குவா என்ற மகள் இருந்தாள் என்றும் அவள் சீதையிடம் இராவணனின் தோற்றத்தை சித்திரமாக வரையும்படி கேட்டுக் கொண்டாள் என்றும், வங்காள பெண் கவி சந்திரவதி எழுதியுள்ளார்.[78]

தாய்லாந்து நாட்டின் இராமாயணத்தில் சூர்ப்பநகையின் மகள் சீதையின் பணிப்பெண்ணாக உருவமெடுத்து, இராவணரின் படத்தை வரையும்படி செய்தாள் என்று கூறப்பட்டிருக்கிறது.[79]

ஷிகாயத்-செரி-ராமா என்கிற மலேசிய இராமாயணத்தில் சீதை ஆறு மாத கர்பிணியாக இருந்த காலத்தில், கைகேயி சீதையைத் தூண்டிவிட்டு இராவணரின் படத்தை ஒரு விசிறியில் வரையும்படி செய்தாள். சீதை தூங்கிகொண்டிருக்கும் போது அந்த படத்தை அவளின் மார்பில் வைத்து விட்டாள். அதைக் கண்ட இராமர் சீதையை நம்பகமான நடத்தையுள்ளவள் இல்லை என்று தீர்மானித்து அரண்மனையிலிருந்து விலகுமாறு உத்தரவிட்டார்.

77. ஜெ.ரா. J.R. P 262, 263. 78. ஏவிஆர். PP 244-245. 79. ibid P 287

குவாய் துவோரபி மற்றும் பராலாக் பராராம் ராம்கியான் இராமா யணங்களில், அரண்மனை பணிப்பெண்கள் கேட்டு கொண்டதின் பேரில், சீதை வரைந்த சித்திரத்தை இராமரின் சிம்மாசனத்தின் அடியில் மறைத்து வைத்து விட்டார்கள். காட்டிலிருந்து தலைநகர் திரும்பிய இராமர் சிம்மாசனத்தில் அமர்ந்தபோது, படம் குரல் எழுப்பியது, "நாம் இருவரும் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள். ஏன் என் தலைமீது அமர்கிறீர்கள்?" சிம்மாசனத்தை விலக்கி பார்த்த இராமர் துணுக்குற்று சீற்றமடைந்தார். சீதையின் நடத்தை யில் சந்தேகமடைந்த ராமர் அவளுக்கு மரண தண்டனை அளித்தார்.[80]

சீதை மீண்டும் அக்னிபிரவேசம்

ஆறு மாத கர்ப்பிணியான சீதையைக் காட்டில் விட்டவுடன் அவளை காட்டிலிருந்த மகரிஷிகள் காப்பாற்றி ஆதரவு கொடுத் தார்கள். சீதை லவ, குச என்ற இரு மகன்களை ஈன்றெடுத்தாள். நாளடைவில் குமாரர்கள் இருவரும் தன் அன்னை சீதையை இராமரின் தர்பாருக்கு அழைத்து வந்தார்கள். அவளை மீண்டும் ஏற்று கொள்வதற்கு அக்னி பிரவேசம் செய்ய பணித்தார். அக்னி குண்டத்தில் குதித்த சீதையை ஒரு தாமரைபூ தூக்கி வந்தது. அவள் மகாலக்ஷ்மி போல் தோற்றமளித்தாள். இராமர் அவமானப்பட்டு, நேருக்கு நேர் பார்க்க வெட்கப்பட்டு தலைகுனிந்தார். சீதை இராமருடன் வாழ மறுத்து, அனைத்து நகைகளையும் தியாகம் செய்து விட்டு சந்நியாசினி ஆனாள்.[81]

பிற்காலத்தில் இப்பூவுலகை விட்டு சென்ற சீதை, பன்னிரண் டாவது சொர்க்கத்தில் தேவேந்திர பதவியை அடைந்து சீதேந்திரா என்று அறியப்பட்டாள். தேவ பதவியை அடைந்தவள் பூலோகத்தில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும் சக்தியையும், அனைத்தையும் அறியும் ஞானதிருஷ்டியையும் பெற்றாள்.

திடீரென்று ஒரு நாள் இராமர் கோடிசிலா என்ற பாறையின் மீது ஒற்றை காலில் நின்று கொண்டு தவமிருப்பதைக் கண்டாள். சீதேந்திராவுக்கு பழைய ஆசா பாசங்கள் நினைவுக்கு வந்து விட்டன. அவள் சீதையின் உருவமெடுத்து இராமரிடம் தன் காதலை ஏற்றுகொள்ளும்படி மிகவும் வற்புறுத்தினாள். இராமர் கண்டு கொள்ளவே இல்லை. சொர்க்கத்திலிருந்த தோழிகளுடன்

80. AVR P-243 81.ibid P 366-375

சேர்ந்து இரவு பகலாக பாடியும் நடனமாடியும் அவரிடம் சரீர இச்சை பெறுவதற்காக முயற்சித்தாள். இராமர் இணங்கவில்லை. ஏமாற்றமடைந்த சீதை, இராவணர் மற்றும் இலட்சுமணரைப் பற்றி விசாரித்தாள். அவர்கள் இருவரும் நான்காவது நரகத்தில் இருப்ப தாகவும், பல ஜென்மங்களுக்கு பிறகு சீதையின் மகன்களாக பிறந்து, இறுதியில் மோட்சம் அடைவார்கள் என்றும் சீதைக்கும் பிற்காலத்தில் மோட்சம் கிடைக்கும் என்றும் கூறினார்.

வால்மீகி இராமாணத்தில் அவளை பூமி தாய் ஏற்றுக் கொண்டு பூமிக்குள் மறைந்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இராவணர் மந்தோதரியின் மகள் சீதை என கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் இன்றும் இலங்கையில் வாழ்கிறார்கள் என்று கற்பனை யாக யூகித்தால் தமிழ் மொழியில் தான் பேசிக் கொள்வார்கள். ஆகவே, சீதை தமிழச்சியே!

சீதை வாழ்நாளின் பெரும்பகுதியை சோகத்திலேயே கழித்தாள். பிறப்பிலும் இறப்பிலும் கைவிடப்பட்டாள்.

அத்தியாயம் – 3

இராவணேஸ்வரர் மற்றும் மந்தோதரி

கி.மு. 4342ம் ஆண்டு சித்திரை மாதம் வளர்பிறை நவமி திதி புனர்பூச நட்சத்திரத்ததில் இராமர் அயோத்தியிலும், அன்றே இராவணேஸ்வரர் தென்னகத்தில் பொதிகைக்கு அருகிலும் பிறந் தார்கள்.[82]

இராவணேஸ்வரர் காஸ்யப கோத்திரம் பிரிவைச் சேர்ந்த தென்னாட்டு பிராமணர். சதுர் வேதங்களையும் படித்தவர். ஸாம வேதம் ஓதுவதில் வல்லவர். தினமும் அக்னிஹோத்திரம் செய்பவர். அவர் தினந்தோறும் பூஜை செய்யும் தங்கமயமான சிவலிங்கம் அவர் போகும் இடமெல்லாம் கொண்டு போகப்படும். (ஐஸ்வர்யத்தை விரும்புவர்கள் தங்கமயமான விக்ரஹத்தை பூஜிக்க வேண்டும்).[83] அவர் மிக சிறந்த இசைஞானி. வீணை வாசிப்பதில் நிபுணர். முதன் முதலில் இராகங்களை ஸ, ரி, க, ம, ப, த, நி என்று ஸப்தஸ்வரங்களாக வகுத்தவர்.[84] இவர் தான் முதன் முதலில் குலகுரு சுக்ராச்சாரியாரிடமிருந்து பரத நாட்டியம் கற்றுக் கொண்டு தென்னாட்டில் அதை பிரபலமாக்கியவர். மேலும், அவரிடமிருந்து யுத்தத்தில் வெற்றியைத் தரும் சூக்ஷமமான யாக நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டார்.

வைசேஷிக தர்சனம் என்னும் நூலுக்கு விளக்கவுரையும், மருத்துவத்தைப் பற்றிய நூலும், அர்த்தபிரகாசா, வேதாந்தபாஷ்யம் முதலிய நூல்களையும், சிவதாண்டவ நிருத்யம் பற்றி தொகுத்து எழுதியும் சாதனைப் படைத்தார்.[85] ஸாம கானத்தினாலும் வீணை இசையாலும் சிவபெருமானைப் போற்றி ‘ஈஸ்வரன்’ என்ற பட்டத்தையும் பெற்றார். அவரிடமிருந்து திவ்யாஸ்திரங்களைப் பெற்றார். ஈஸ்வரன் என்ற பட்டம் அவரைத் தவிர நந்திகேஸ்வரர் சண்டிகேஸ்வரர் மற்றும் சனீஸ்வரர் ஆகியவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

82. Indian Cronology, 83. யுத்தகாண்டம் பக். 109 சி.ஆர்.எஸ்.,
84. ப–6. நடநாதிவாத்ய ரஞ்சனம் 1892. 85. VR All P.412-413

கடும் தவத்தாலும் யாக யக்ஞங்களாலும் பிரம்மாவை மகிழ் வடையச் செய்து, யுத்தத்தில் நிச்சயம் வெற்றியைத் தரும் சிவ அஷ்டோத்திர உபதேசத்தையும் பெற்றார்.

நாரதரைப் போல, புலஸ்தியரும் பிரம்மாவின் மானசீக புத்திரர். புலஸ்தியரின் மகன் விஸ்ரவஸ். விஸ்ரவஸின் புத்திரர்கள் குபேரன், கும்பகர்ணர், இராவணேஸ்வரர் மற்றும் விபீஷணர். ஆகவே இவர்கள் பிரம்மதேவரின் கொள்ளு பேரர்கள். புலஸ்திய மகரிஷியின் வம்சாவளியினரே ராக்சஸர்கள் என்று அழைக்கப் பட்டார்கள்.[86]

இராவணரின் தாய் கைகஸி. இராணவர் பிறந்ததும் அவரைப் பார்த்த தந்தை விஸ்ரவஸ், சிசு அணிந்திருந்த நவரத்ன மாலையிலுள்ள ஒன்பது மணிகளிலும் சிசுவின் தலை பிரதிபலிப் பதைப் பார்த்து, ‘தசமுகா’ என அழைத்தார். ஒன்பது மணிகளிலும் பிரதிபலித்த தலைகளையும், இயற்கையாக உள்ள தலையையும் சேர்த்து 10 தலைகள். ‘தசமுகா’ என்பதே அவரது ஜாதகப் பெய ராகவும் நிலைத்து விட்டது.

அவருக்கு ஒரு தலைதான் என்று வால்மிகி ராமாயணத்தின் விமர்சகர், வைணவ மதாபிமானி, கோவிந்தராஜரும், ஜைன இராமாயண ஆசிரியர் ஹேமசந்திர சூரி அவர்களும் விளக்கி யிருக்கிறார்கள்.

ஜப்பானில் 8ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஹசிதோரா கோயில் உள்ளது. அங்கு கேநான் என்று ஒரு தெய்வ சிலை உள்ளது. அதை போதி சத்வா என்கிறார்கள். அந்த சிலை இந்தியாவில் செய்யப்பட்டதாம். இந்த தெய்வ சிலைக்கு 10 தலைகள், ஒவ்வொன்றாகக் கோர்க்கப்பட்டு, கழுத்தில் மாலையாக மாட்டப் பட்டிருக்கின்றன. இந்த 10 தலைகளும், பத்து விதமான ஞானங் களின் அடையாளமாம். கழுத்துக்கு மேல் இருக்கும் 11வது உண்மையான தலை இந்தியாவில் ஞானம் பெற்ற புத்தரின் தலை என்கிறார்கள்.

இராவணருக்கு 10 தலைகள் என வர்ணிப்பது அவர் 10 தலை களுக்கான அறிவும், ஆற்றலும் ஞானமும் பெற்றிருந்தார் எனக் குறிப்பிடும் பொருட்டே!

சரித்திரத்திற்கு முந்திய காலத்தில் (Protohistoric) நர்மதை நதியின் தென்பகுதியை தண்டகன் என்ற அசுரன் (நாகரீக

86. VR ALL. P 412- 413, 87. JRI, P-47

வளர்ச்சி அடையாதவன்) ஆண்டு வந்தான். அதனால் அது தண்ட காரண்யம் என்று வழங்கப்பட்டது. தண்டகாரண்யம் தற்போதய சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து தென்னிலங்கை வரை பரவியிருந்த பிரதேசமாகும்.

நர்மதை நதிக் கரையில் மகாபலி சக்ரவர்த்தி யாகம் செய்து கொண்டிருக்கையில், ஸ்ரீமகாவிஷ்ணு அவர் முன் வாமனராகித் தோன்றி, மூன்றடி மண் யாசித்துப் பெற்றார். அவ்வாறு பெற்றவுடன் வானுயர தோற்றமளித்தார். ஸ்ரீமகா விஷ்ணுவை நேரில் தரிசித்த சிவபக்தரான மகாபலி சக்ரவர்த்தி ஆனந்த கண்ணீர் மல்க, அளவில்லா பரவசமடைந்து, அவரைப் பலவாறாகப் போற்றித் தொழுதார். போற்றித் தொழுத சக்ரவர்த்தியின் தலையில் ஸ்ரீமகாவிஷ்ணு கால் வைத்து பூமிக்கடியில் பாதாள லோகத்தில் அழுத்தி, கை, கால்களைச் சங்கிலியால் இறுகக் கட்டி, சுவற்றில் மாட்டி சிறை வைத்தார் (இடம் கேரள ஸ்வேத தீவு. இங்கு இன்றும் மலையாளிகள் பித்ரு தர்ப்பணம் செய்கிறார்கள்). இந்திர பதவியை தன் சேவகனான, அமரனான, தேவனான இந்திரனுக்கு அளித்தார். அச்சுதா, அமரரேறே! என்று ஸ்ரீமகாவிஷ்ணு போற்றப் படுகிறார்.[88]

மகாபலி சக்ரவர்த்திக்கு பின் நர்மதை நதிக்கரையில் வசித்த பிரம்மரிஷி பரசுராமர், தண்டகாரண்யத்தின் காப்பாளராக இருந்து தேவர்களுடன் (வட நாட்டவர்களுடன்) போரிட்டு, அவர்களை அடக்கி வைத்து, தென்னாட்டைக் காப்பாற்றினார்.

பரசுராமருக்கு பின் தசமுகன் (இராவணர்) தண்டகாரண்யத்தின் சக்ரவர்த்தியாக திகழ்ந்தார். இந்நிலையில் விஸ்வாமித்ரர் (இவருடைய சகோதரியின் மகன் தான் பரசுராமர்) தன் யாகத்தைக் காப்பாற்ற, இராமரை அனுப்பும்படி தசரதரை யாசித்த போது, யாகத்தை அழிக்க வரும் மாரீசன், சுபாஹூவைப் பற்றி புகார் செய்தார். அவர்களுக்கு பக்கபலமாக இராவணர் வருகிறார் என்ற வுடன் தசரதர், இராவணரைப் பற்றி நன்கு அறிந்தவராதலால் அவருடன் யுத்தம் செய்ய மாட்டேன் என்று சொன்னார்.[89]

ஒரு சமயம் இராவணரின் தர்பாரில் ஒரு குறி சொல்பவன் தசரதருக்கும் ஜனகருக்கும் முறையே பிறக்கும், இராமரும் சீதையும் உங்கள் மரணத்திற்கு காரணமாவார்கள் என்று கூறினார். இதை முளையிலேயே கிள்ளி எறிய விபீஷணர், தசரத ரையும் ஜனகரையும் கொல்ல அயோத்திக்கு விரைந்து செல்லு

88. பாலகாண்டம் CRS VR 89. ஆரண்ய காண்டம் சர்க்கம் 68

மாறு பணிக்கப்பட்டார். இதை அறிந்த தசரதரும் ஜனகரும் மாறு வேடத்தில் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறி விபீஷணனின் முயற்சியைத் தோற்கடித்தார்கள்.[90]

இந்நிலையில், தாடகை மற்றும் அவள் மகன் மாரீசனால் இம்சிக்கப்பட்ட அகஸ்தியர், அவர்களின் தாய்நாடான தண்ட காரண்யத்தை, வடநாட்டவர்களின் (அமரர்கள், தேவர்கள்) ஆளுகைக்குள் கொண்டு வர திட்டமிட்டார். 18 யதுகுல மன்னர் களுடன், தண்டகாரண்யத்திற்கு ஒரு வழியாக பாதை கண்டு பிடித்து, விந்திய மலையின் மேற்கு பக்கமாகவே பயணித்து தண்டகாரண்யத்திற்குள் நுழைந்தார்.[91]

அகஸ்தியர் தபோபலம் மிக்கவர். முரட்டு சுபாவம் உள்ளவர். வரும் வழியெல்லாம் எதிர்பட்டவர்களை, 18 யதுகுல மன்னர்களும் அகஸ்தியரும் கொன்று குவித்தார்கள். களரி போர்கலையின் தந்தையான அகஸ்தியர் இராவணேஸ்வரரை வாதத்தில் தோற் கடித்து இலங்கைக்கு போக வைத்தார்.

தன் சகோதரிகளான தாடகையையும் சூர்ப்பநகையையும் அதர்ம முறையில் கொலை செய்தும், அங்கஹீனமும் செய்த இராம இலட்சுமணர்களைப் பழி வாங்கவும், தனக்கு சொந்தமான ஜனஸ்தானமாகிய தண்டகாரண்யத்தில் நுழைந்ததற்கு தண்டிக் கும் நோக்கத்துடன் இராவணர் சீதையைச் சிறைபிடித்து திறந்த வெளியில், பெண்கள் காவலில் வைத்தார், அந்தபுரத்தில் வைக்க வில்லை.

தன் நாட்டின் மீது அத்துமீறி பிரவேசிக்கும் அந்நிய வீரர்களைப் பிடித்து விசாரிப்பதும், அவர்களின் பெண்களையும் ஆநிரை களையும் பிடித்து, போருக்கு சவால் விடுவதும் அக்காலத்திய மரபு ஆகும். மகாபாரதத்தில் விராட பருவத்தில் இது போன்ற நிகழ்வுகளையும் காணலாம்.

கம்ப ராமாயணத்திலும், அத்யாத்ம இராமாயணத்திலும், நரசிம்ம புராணத்திலும் சீதையைத் தொடாமலேயே இராவணர் கடத்தியதாக கூறப்பட்டுள்ளது. ‘‘பரஸ்திரீகளை பலாத்காரமாக கொண்டு வருவதும், அவர்களைச் சேருவதும், இராட்சதர்களுக்கு ஏற்ற செய்கை. அப்படியிருந்தும் என்னிடத்தில் உனக்கு பிரிய முண்டாகாத வரையில் உன்னைத் தொட மாட்டேன்,’’ என்று சீதையிடம் இராவணர் கூறினார்.[92]

90 ஜேஆர்.2, பக் 162, 167, 91. இந்து மதம் எங்கே போகிறது. பக் 149
92. சுந்தர காண்டம், சர்க்கம் 20, பக் 90,

சீதையைத் தேடிக் கொண்டே வந்த அனுமார், இராவணரின் தேஜஸால் மயங்கி வர்ணிக்கிறார்.

"என்ன ரூபம்! என்ன தைரியம்! என்ன ஸத்வம்! என்ன காந்தி! இவனுடைய தேஜசுக்கும் பிரபாவத்திற்கும் அளவில்லையே! சகல லட்சணங்களும் பொருந்தியிருக்கின்றன. இந்த பலவான் தர்மசாலியாக இருந்தால் இந்திரனையும் சொர்க்கத்தையும் காப்பாற்ற தகுந்தவன் அல்லவா? தேவர்களும் அசுரர்களும் சகல போகங்களும் இவனுடைய குரூர கிருத்யங்களாலும், லோகத்தார், நிந்திக்கும் படியான நடத்தையாலும் நடுங்குகிறார்கள். இவன் கோபம் கொண்டால் இந்த பிரபஞ்சத்தை நாசம் செய்து சமுத்திரத்தில் தூற்றிவிடக் கூடியவன்."

அந்தபுர பெண்களைப் பார்த்து அனுமன் வர்ணிக்கிறார்.

"அனைவரும் உத்தமமான பத்மினி ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தாமரை மலரின் பரிமளத்தைப் போல் சுகந்தம் வீசும் முகங்களுடனும், மறைக்கப்பட்ட பல்களுடனும் நித்திரை செய்தார்கள். பெண்கள் தூங்கும்போது பற்கள் வெளிப்படுவதும், கண்கள் பாதி திறந்திருப்பதும் குறட்டை விடுவதும், வாயிலிருந்து துர்கந்தமான காற்று வீசுவதும் தாழ்ந்த ஜாதி பெண்களின் இலட்சணம்."[93]

ராஜரிஷிகள், பித்ருக்கள், தைத்யர்கள், கந்தர்வர்கள், ராட்சதர்கள் முதலியவர்களின் கன்யைகள் இராவணரிடத்தில் ஆசை வைத்து வந்தவர்களே! சிலர் இராவணரால், தங்களுடைய பந்துக்களை ஜெயித்து, கொண்டு வரப்பட்டவர்கள். சிலர் அவருடைய அழகிலும் தேஜசிலும், ஐஸ்வர்யத்திலும், பராக்ரமத்திலும் ஈடுபட்டு, வலுவில் ஆசை மீறி அவரை வந்து அடைந்தவர்களே! எல்லோரும் அவரை மோகித்தவர்களே!

எவரும் பிறந்தது முதல் வேறு புருஷனை இச்சித்தவளில்லை. அனைவரும் உத்தம ஜாதி ஸ்திரிகளே! இராவணனுக்கு சமஸ்த உபசாரங்களையும் பரம ப்ரீதியுடன் செய்யாதவர்கள் அங்கில்லை. அவனுக்குத் தகுந்த தேக பலமில்லாதவர்கள் அங்கில்லை. அவனுடைய ப்ரியத்திற்கு பாத்திரமில்லாதவர்கள் அங்கில்லை.

இந்தப் பெண்களை எல்லாம் கன்யையாய் இருக்கும்போது இராவணன் கொண்டு வந்து மணம் செய்ததைப் போல் சீதையையும் இராகவன் பாணிகிரகம் செய்வதற்கு முன், கொண்டு வந்து மணம்

93. ibid. சர்க்கம் பக். 49

புரிந்திருந்தால் அவனுக்கு க்ஷேமம் உண்டாயிருக்குமே!" என்று அகஸ்மாத்தாக எண்ணினார்.[94]

லாவோஸ் மற்றும் பிற கிழக்காசிய இராமாயணங்களில் இராவணருக்கு பத்து தலைகளும் இருபது கைகளும் உள்ளதாகச் சித்ரிக்கப்படவில்லை. "அவரை நன்றாக படித்தவராகவும் புத்திசாலியாகவும், அழகும் வசீகரமான தோற்றம் உள்ளவராகவே வர்ணிக்கிறார்கள். அவருக்கு இந்திரனின் பாதுகாப்பு உள்ளதாகவே சொல்லுகிறார்கள். சீதை ஒன்றும் அவரின் வசீகரத்தால் ஈர்க்கப் படாதவளாகத் தோன்றவில்லை."[95]

மேலும், இராமரும் ஆஞ்சனேயரும் கொரில்லா போர் முறையை ஏற்படுத்தியவர்கள் என பெருமையுடன் சொல்கிறது.

வங்காளிகளின் "ராம் லீலா ஜூமார்" என்ற நாட்டுப்புற பாடல்களில் இராவணர், அவரின் சகோதரி சூர்ப்பநகையைத் திருப்தி படுத்தவே சீதையைக் கடத்தினார் என்றும், அவர் ஒன்றும் அரக்கன் அல்ல. கண்யமிக்க மாமனிதரே என்றும் வர்ணிக்கப்படுகிறார். இராவணர் காளி தேவியின் மடியில் அமர்ந்திருப்பதை இராமர் பார்த்திருந்ததாகவும் பாடப்படுகிறது.

ஜைன இராமாயணத்தில் இராவணர்

ஒரு காலத்தில் இலங்கை அரசர்களும் வானரர்களும் மிகுந்த நட்புடன் பழகி வந்தார்கள். ஒரு சமயம் வித்யாதரர்களின் (வட நாட்டினர்) மன்னர் தேவேந்திரனுடன் நடந்த யுத்தத்தில் வானரர்களும் ராட்சசர்களும் ஓரணியில் இணைந்து போரிட்டார்கள். முடிவில் வைஸ்ரவணன் என்கிற குபேரனை இலங்கைக்கு அதிபதியாக்கி அவரது உறவினர்கள் பாதாள இலங்கைக்கு துரத்தப்பட்டார்கள். ஆனால், பிற்காலத்தில் இராவணர் தன் சகோதரன் குபேரனைத் தாக்கி இலங்கையை மீட்டார்

ஒரு சமயம் இயமன் வானரர்களைத் தாக்கி சிறை பிடித்தபோது இராவணர் அவர்களைக் காப்பாற்ற விரைந்து சென்று அவர்களின் நாட்டை மீட்டெடுத்து கொடுத்தார்.

தண்டகாரண்ய மக்களின் குலகுருவான சுக்ராச்சாரியாரின் சிஷ்யரான சிற்பி மயன் தன் மகள் மந்தோதரியை மணம் புரிய விரும்பிய வாலிக்கும் தேவேந்திரனுக்கும் கொடுக்காமல் தன் பிராமணத் தொகுப்பு பிராமணராகிய இராவணருக்கு திருமணம் செய்து வைத்தார். இதன் காரணமாக வாலிக்கும் தேவேந்

94. சுந்தர காண்டம் சர்க்கம் 9, பக் 49, 95. AVR PP. 244–245

திரனுக்கும் இராவணர் மேல் மனதளவில் காழ்ப்புணர்ச்சி இருந்தது. மாயாவியும் துந்துபியும் மந்தோதரியின் சகோதரர்கள். வாலியுடனான சண்டையில் மாயாவி கொல்லப்பட்டார். பழிவாங்க புறப்பட்ட துந்துபியும் நீண்ட நாட்களாகத் தொடர்ந்த சண்டையில் கொல்லப்பட்டார். மயனுக்கு ஹேமை என்கிற தேவலோகப் பெண் ணுடன் தகாத நட்பு உள்ளதாகக் கூறி தேவேந்திரன் அவரை வஜ்ராயுதத்தால் அடித்துக் கொன்றார்.[96]

வாலிக்கும் இராவணருக்கும் இடையே இருந்த நட்பு நாளடை வில் குறைய ஆரம்பித்தது. வாலியின் உயர்வை இராவணரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இதனால் வாலியுடனான சண்டையில் வாலி, இராவணரை தன் வாலினால் கட்டி சுழற்றிய படியே சுற்றி சுற்றி வந்து பின் விடுவித்தார். "உன் முன்னோர்கள் எனக்கு நிறைய உதவி செய்திருக்கிறார்கள். ஆகையால், உன்னை கொல்லாமல் விடுகிறேன். இன்று முதல் சுக்ரீவன் கிஷ்கிந்தையில் மன்னராவான். அவன் உன் உத்தரவை ஏற்றுக்கொண்டு ஆட்சி செய்வான். சந்தோஷமாக திரும்பிச் சென்று வளமாக வாழ் வாயாக,"[97] என்று அறிவுறுத்தினார்.

ஒரு சமயம் இராவணர் தன் சகோதரரகளுடன் நளகூபரன் என்ற மன்னரின் துர்க்காலங்புரா கோட்டையை முற்றுகையிட்டு போர் செய்யத் தொடங்கினார். நளகூபரனின் மனைவி இராணி உபரம்பா இராவணரின் வீரம், போர்திறன், பெருந்தன்மை, ஈடில்லா வசீகரம், அசாதாரணமான சாதனைகளைப் பற்றி கேள்விப்பட்டு அவர்பால் மோகம் கொண்டாள். தன் ஆசைக்கு இணங்கினால் கோட்டையைக் காக்கும் ஆசாலி சக்தியின் இரகசியத்தைத் தெரிவிப்பதாக பணிப்பெண்கள் மூலம் தூது விட்டாள்.

இதற்கு இணங்குவது தர்மத்திற்கும், ஆண்மைக்கும் உகந்ததல்ல என நிராகரித்த இராவணர் விபீஷணனின் தந்திரங்களாலும், தூண்டுதல்களாலும் ஒப்புவது போல் நடித்தார். அதனால் அவருக்கு இரகசியங்கள் தெரிவிக்கப்பட்டது மட்டுமல்லாமல் பல தெய்வீக அற்புத ஆயுதங்களும் கொடுக்கப்பட்டன. கோட்டையும் கைப்பற்றப்பட்டது. நள குபேர மன்னர் சிறை பிடிக்கப்பட்டார்.

காமத்தால் தூண்டப்பட்ட உபரம்பா அன்றிரவு தன்னை மிக அற்புதமாக அலங்கரித்துக் கொண்டு இராவணரை நெருங் கினாள். ஆனல், தர்ம சாஸ்திரங்களை நன்கு படித்து உணர்ந்த இராவணர், "நீ ஒரு நாட்டின் இராணியாக இருந்து கொண்டு

96. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 51, பக் 162, 97. JR Part I, P. 134

இவ்வாறு நடந்து கொள்வது நியாயமில்லை. நாட்டைக் காப்பாற்று வது உன் தலையாய கடமை. மேலும், மிகவும் சக்தி வாய்ந்த அசாலி மந்திரத்தைப் போதித்ததால், நீ எனக்கு குருவாகி விட்டாய். உன்னைத் தீண்டுவது பாவம். மற்ற பெண்களைத் தாயாகவும் சகோதரிகளாகவும் பார்க்கிறேன்," என அறிவுறுத்தி திருப்பி அனுப்பிவிட்டார்.[98]

இராவணரும் வானரர்களும் ஒற்றுமையாக இருந்த காலத்தில், தன் சகோதரர் மற்றும் கிஷ்கிந்தை வீரர்களுடன் வருணர் மீது போர் தொடுத்தார். வருணர் தோற்கடிக்கப்பட்டார். வெற்றி கோஷம் எழுப்பிய அனுமரை இராவணர் தடுத்தார் "மன்னர் வருணரும் அவரின் மகன்களும் சிறந்த வீரர்கள். அவர்கள் என் வாழ்த்து களுக்கும் மரியாதைக்கும் உகந்தவர்கள். அவர்களின் இராஜ்யம் எனக்கு வேண்டாம்," என கூறி வருணரை அந்த தேசத்துக்கே மன்னராக்கினார். போர் செய்த மன்னர்கள் நண்பர்களானார்கள்.

அவர் (இராவணர்) எந்த நாட்டை வென்றாலும் அந்நாட்டின் அந்தப்புரத்திற்குள் நுழைந்ததில்லை. அப்பெண்களை மிகவும் மரியாதையாகவும் கண்ணியமாகவும் காப்பாற்றினார்.

இராம - இராவண யுத்தம் ஏழு நாட்கள், இரவு பகலாக, இடை விடாது, ஓய்வின்றி நடந்தது. அக்காலத்தில் வழக்கத்திலுள்ள யுத்த தர்ம சாஸ்திரங்களை அவர் ஒரு போதும் மீறவில்லை. அரியணை ஆசை கொண்ட தம்பி விபீஷணனின் துரோகத்தால் யுத்தத்தில் தேக்க நிலையும் வீரர்களின் இழப்பும் நிகழ்ந்தது.

சுக்ராச்சாரியாரிடமிருந்து, கற்றுக் கொண்ட யுத்தத்தில் நிச்சயம் வெற்றியைத் தரும் யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார். யாகம் செய்வதை தன் ஒற்றர்கள் மூலமாகவும், யாககுண்ட புகையையும் கவனித்த விபீஷணர், இராமரிடம் அந்த யாகத்தை உடனே அழிக்க வேண்டும் என்றும், யாகம் வெற்றிகரமாக நிறைவு பெற்றால், இராவணர் வெற்றி அடைவது நிச்சயம் என்றும் எச்சரித்தார். அந்த யாகம் நடைபெறும் இடத்தைக் காட்டிக் கொடுத்தும், அங்கு செல்லும் உபாயத்தையும் சொல்லி கொடுத்தார்

இராமரின் உடனடி உத்தரவால், அங்கதன் தலைமையில், ஆஞ்சனேயரும் வானரர்களும் உடனே விரைந்து யாகம் செய்து கொண்டிருந்த இராவணரைப் பலமாகத் தாக்கினார்கள். அசைந்து கொடுக்காத இராவணர் யாகத்தை விரைவில் நிறைவு செய்வதிலேயே தீவிரம் காட்டினார். யாகத்தைக் கெடுக்க முடியாமல்

98. JR Part. I PP 227

தவித்த வானர சேனைத் தலைவன் அங்கதன் ஒரு உபாயம் செய்தான். வேக வேகமாக இராவணரின் அந்தப்புரத்திற்குள் நுழைந்தான்.

தர்ம சாஸ்திரங்களைப் பரிபூரணமாகக் கற்றறிந்த மகா பதிவிரதையான மந்தோதரியின் ஆபரணங்கள் அபகரிக்கப்பட்டு, கூந்தலைப் பிடித்துக் கதறக் கதற, அஞ்சுகம் (இரவிக்கை) கிழிந்து விலக, பெண்களுக்கே உரித்தான மரியாதையையும், மான இழப்பையும் துச்சமாகத் துணிந்து யாகசாலைக்கு இழுத்து வந்து, இராவணரின் முன் நிறுத்தினான். அதே போல் மற்ற வானரர்களும் அந்தப்புர பெண்கள் அனைவரையும் இழுத்து வந்தார்கள். (மந்தோதரி ஏழு பதிவிரதைகளில் அப்பழுக்கற்றவள். ஈடு இணை யில்லாதவள். மகாவிஷ்ணுவால் ஆசீர்வதிக்கப்பட்டவள்.)[99]

மந்தோதரியின் கதறலைக் கேட்ட இராவணர் யாக பீடத்தி லிருந்து எழுந்து, வாளை உறுவிக் கொண்டு, வானர சைன்யத் தைத் தாக்க விரைந்தார். மந்தோதரி, இராவணரிடம், “சீதையை இராமரிடம் ஒப்படைத்து விடுங்கள். விபீஷணன் நீண்ட நாட் களாக ஆசைப்பட்ட இராஜ்யத்தைக் கொடுத்து விடுவோம். நாம் தபோவனம் சென்று, ஜபம், தியானம் செய்து கொண்டு நிம்மதி யாக இருப்போம்.”

“முன் காலத்தில் அரக்கர்களே க்ஷத்ரியர்களாகத் தோன்றி, பூமிக்கு சுமையாக இருந்தபோது, இந்த இராமனே, பரசுராமனாக வந்து அவர்களுடன் பலமுறை யுத்தம் செய்து, வதம் செய்து, பூமியை காஸ்யப முனிவருக்கு தானம் செய்து பிரஜைகளை ரட்சித்தார்.”[100]

வெற்றியைத் தரும் யாகத்தைச் செய்ய முடியாமலும், பிரம்ம தேவர் அருளிய நிச்சயமாக வெற்றியைத் தரும் சிவ அஷ்டோத் திரத்தை ஓதாமலும் (அல்லது நேரமின்மையாலும்) இராவணர் யுத்த களத்திற்கு விரைந்தார்.

உக்கிரமாக நடந்த யுத்தத்தில், துரோகி விபீஷணர் ஒவ்வொரு நிலையிலும் அண்ணன் இராவணரின் யுத்த நுணுக்கங்களையும், இரகசியங்களையும், அஸ்திரபிரயோக மந்திரங்களைப் பற்றியும் விளக்கி, இராமருக்கு பேருதவியாக இருந்தார். அகஸ்தியர் யுத்த களத்தில் சூரியவணக்கம் (ஆதித்ய இருதயம்) ஓதிக் கொண்டி ருந்தார்.

---

99. அத்யாத்ம ராமாயணம் RK. Mutt. PP 333-365. 100. Ibid PP 330

யுத்த தர்மசாஸ்திர நெறிமுறைகளை மீறாமல் யுத்தம் செய்த மாவீரன் இராவணரை, இராமர் பிரம்மாஸ்திரத்தால் நாபியில் சாஸ்திர விரோதமாக அடித்துக் கொன்றார். இராவணர் பூமியில் சாய்ந்தார். தேவர்கள் பூமாரிப் பொழிந்தார்கள். அவரின் நாற் பத்தி இரண்டாவது வயதில் வைகாசி மாதம், கிருஷ்ண பட்ச, ஏகாதசியன்று சூரியாஸ்தமன சமயத்தில், யுத்த களத்தில் உயிர் நீத்தார்.

இராமரும் அதே நாற்பத்தி இரண்டாவது வயதில் அயோத்தியில் பட்டாபிஷேகம் செய்து கொண்டு, பதினோரு ஆண்டுகள் ஆட்சி செய்து, தனது ஐம்பத்தி மூன்றாவது வயதில், மன வருத்தத்துடன், சரயூ நதி வெள்ளத்தில் குதித்து மூழ்கினார்.

தன்னை க்ஷத்ரியன் என்றும் சத்ய தர்ம நியாயங்களை நிலை நாட்டுவதும், பிராமணர்களை ரட்சித்து அவர்கள் செய்யும் யாக, யக்ஞங்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் தன் கடமை என்று செயல்பட்ட இராமருக்கு யக்ஞராமன் என்று பெயருண்டு. ஆனால், அவர் கொள்கைகளுக்கு முரணாக, பிராமணர்களான இராவணரும், இந்திரஜித்தும் செய்த யாகங்களை அழித்தார். யுத்த நெறிமுறைகளுக்கு மாறாக கொலையும் செய்தார்.

பிரம்மஹத்தி சாப தோஷத்திற்கு அஞ்சிய இராமர் அண்ணனின் பிரேதத்தைக் கண்டு கலங்காத விபீஷணரை, அண்ணனுக்கு பிரேத கிரியைகள் செய்யக் கோரினார். முதலில் மறுத்த விபீஷணர், பிறகு சம்மதித்தார்.

அடுத்த நாள் துவாதசியன்று அவரின் பூதவுடலை சந்தன கட்டையால் அமைத்த சிதையின் மேல் வைத்து, அதன் மேல் வாசனை திரவியங்களைத் தூவி ரங்கு என்கிற மானின் தோலை விரித்து அலங்கரித்தார்கள். மேலும், கீழும் அரணியை வைத்து, எட்டு திக்குகளிலும் பித்ரு மேத ஸம்ஸ்காரம் முதலிய கிரியைகளைச் செய்தார்கள். ஒரு வேத பிராமணருக்குரிய வகையில் வேத கோஷங்களுடன் சாஸ்திர விதிப்படி விபீஷணர் அண்ணனுக்கு கொள்ளி வைத்தார். தலை மூழ்கி ஈர துணியுடன் எள்ளும் தண்ணீரும் விட்டு தர்ப்பணம் செய்தார். இராவணர் யுத்தகளத்தில் வீர மரணம் அடைந்ததால் விபீஷணருக்கு தீட்டு இல்லை. அதனால் அவர் உடனே அவசர அவசரமாக அரண் மனைக்கு ஓடி, தான் நீண்ட நாட்களாக ஆசைப்பட்ட சிம்மா சனத்தில் அமர்ந்து முடி சூட்டிக் கொண்டார்.

இராவணேஸ்வரர் ஒரு சக்தி வாய்ந்த பலமான மகாவீரர் மட்டுமல்லாமல் கண்ணியம் மற்றும் பெருந்தன்மை மிக்கவராகவும் திகழ்ந்தார்.[101]

இராவணர் விஷ்ணுவின் சக்ராயுதத்தால் தேகமெங்கும் காயப் பட்டவர். (இதனால் அவர் விஷ்ணுவுடன் பலமுறை போரிட்டு அவரின் சக்ராயுதத்திலிருந்து தப்பினார் என தெரிகிறது.)[102]

விபீஷணர் இராவணரைப் பற்றி இராமரிடம் கூறினார்: "தேவர்களும் இந்திரனும் ஒன்று சேர்ந்தும் இவனை ஒரு நாளும் ஜெயித்ததில்லை. கணக்கில்லாமல் தானங்களைச் செய்திருக்கிறான். குருக்களையும், தேவதைகளையும் சம்பூர்ணமாக பூஜித்திருக்கிறான். பரிவாரங்களை குறைவில்லாமல் போஷித்திருக்கிறான். மித்ரர்களுக்கு அளவற்ற தனங்களையும் சுகங்களையும் கொடுத்திருக்கிறான். சத்ருக்களிடத்தில் வைத்த பகையை தீர்த்திருக்கிறான்.

இவன் இடைவிடாமல் அக்னி ஹோத்திரங்களைச் செய்தவன்; மகா தபஸ்வி; வேதாந்த சாஸ்திரங்களில் கரை கண்டவன்; சகல வைதீக லௌகிக கிரியைகளையும் பூர்ணமாய் விதிப்படி செய்தவன்; நிகரற்ற வீரன்; தர்மசீலன்; அக்னிஹோத்ரி; சகல தர்மங்களையும் குறைவின்றி நடத்தினவன்."[103]

இராவணரும் கும்பகர்ணரும் ஜய, விஜய என்ற தேவ பதவிகளான துவார பாலகர்களாக நியமிக்கப்பட்டார்கள். அது தேவ பதவியானதால் அவர்கள் மகா பிரளயக்காலம் வரை அப்பதவியில் இருப்பார்கள்.

மந்தோதரி

மந்தோதரி, மந்தோர் என்ற ஊரில் பிறந்தவளாகவும் அங்கு அவளுக்கு தசமுகனுடன் (இராவணர்) திருமணம் நடந்ததாகவும் வடநாட்டு நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மந்தோதரி பஞ்ச கன்யைகளில் (ஐந்து கன்னிகள்) ஒருத்தி என்றும், அவளின் பெயரை உச்சரித்த மாத்திரத்தில், பாவங்கள் விலகி விடும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அவள் பேரழகி, ஆசாரசுத்தி உள்ளவளென்றும், நேர்மையானவள் என்றும் வர்ணிக்கப்படுகிறாள்.

''இராவண - மந்தோதரி திருமணம் ''ராவண்கி சாவ்ரி என்ற இடத்தில் நடந்ததாகவும், அந்த இடம் ஒரு நினைவுச் சின்னமாக இருப்பதாக தொல்லியல் மற்றும் தொல்லியல் காட்சித் துறை அத்தாட்சி செய்வதாகவும் திரு. தவே கூறுகிறார்.

101.JR. Part. PP 109 102 ஆரண்ய காண்டம் பக். 83 (சி.ஆர்.எஸ்.)
103. யுத்தகாண்டம், சர்க்கம். 117, பக். 419 (சி.ஆர்.எஸ்.)

இராவண கும்பகர்ணர்கள் இயற்கையடைந்து தேவ பதவியில் அமர்ந்தவுடன், மந்தோதரியும் அவளுடைய மற்றும் இராவண கும்பகர்ணர்களின் நெருங்கிய உறவினர்களும், விசுவாசிகளுமான 100 குடும்பத்தினர் இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து, இந்தியாவில் ஜோத்பூர் பலோடி, மற்றும் குஜராத்திலும் குடியேறினர்கள். அவர்கள் தவே, கோதா மற்றும் ஸ்ரீமல் என்ற இனத்தை சேர்ந்தவர்களென்று அறியப்படுகிறது.

அவர்கள் தசரா பண்டிகையைக் கொண்டாடுவதில்லை. ஆனால், அன்றைய தினம் இராவணர், கும்பகர்ணர் மற்றும் இந்திரஜித்துக்கு ஈமக்கிரியைகள் செய்கிறார்கள்.

அந்த வம்சாவளியினர் இன்றும் அந்த இடங்களில் இருப்பதாகவும், தசரா காலத்தில் (மகாளய பட்சம் என்ற பித்ருபட்சத்தில்) 10ம் நாளில் இராவணேஸ்வரர்க்கு சிரார்த்தம் செய்கிறார்களாம். அந்த வம்சாவழியினர் இன்றும் பெண் குழந்தைகளுக்கு மந்தோதரி என்றே பெருமையுடன் பெயரிடுகிறார்கள். அப்படி பெயர் வைக்கப் பட்ட பெண்கள் வளமாக வாழ்வதாகவும் சொல்கிறார்கள்.

(இராவணேஸ்வரர்க்குப் பின் தங்களுக்கு விபீஷணரால் துன்பமும் அழிவும் ஏற்படுமோ என அஞ்சி, மந்தோதரி தலைமையில் ஏராளமான குடும்பங்கள் இந்தியாவிற்கு வந்திருக்கலாம். ஆசிரியர்).

அட்சய ஜோதிஷ ஆய்வு நிறுவன தலைவர் கமலேஷ் தவே கூறுகிறார்: ''நாங்கள் இராவணரை ஒரு நன்றாக படித்த பண்டிதர் என்றும் சிவபெருமானின் பக்தரென்றும் நம்புகிறோம். அவருக்கு அமர்நாத் கோயில் வளாகத்தில், சாந்த்போல் என்ற இடத்தில் ஆலயம் இருப்பதாகவும் அவர் சிவனை வணங்குவதாகவும் இருக்கிறது.''

இராவணருக்கு வடநாட்டில் சில இடங்களில் கோயில் இருக்கிறது. அவருக்கு பக்தர்களும் இருக்கிறார்கள். (Wikipedia)

அத்தியாயம் – 4

விபீஷணர்

விஸ்ரவசின் இளைய மனைவி கைகசிக்கு, முறையே இராவணர், கும்பகர்ணர், விபீஷணர் என்ற மூன்று மகன்களும், சூர்ப்பநகை என்ற மகளும் பிறந்தனர்.

இராவணரும் கும்பகர்ணரும் சிறு வயதில் தந்தை மகரிஷி விஸ்ரவசின் தபோவனத்திலேயே வளர்ந்தார்கள். வேதங்களையும் தர்மசாஸ்திரங்களையும் கற்று தேர்ச்சி அடைந்தார்கள். தேஜஸ் பெற்று பலசாலிகளாகவும் வளர்ந்தார்கள். விபீஷணர் எங்கு வளர்ந்தார், யாரிடம் வேதம் பயின்றார் என்று தெரிவிக்கப்பட வில்லை.[104]

இராவண கும்பகர்ணர்கள் ஜய விஜயர்களின் அம்சாவதாரங்கள். சகோதரர்கள் இருவரும் பிரம்மாவை நோக்கி கோகர்ணத்தில் கடும்தவம் செய்து பலவிதமான வரங்களைப் பெற்றார்கள். விபீஷணர் யாருடைய அம்சம்? இராமரின் க்ருபைக்கு பாத்திரமாகி சிரஞ்ஜீவியாய் விளங்குவதற்கு என்ன புண்ணியம் செய்தார்? இந்த தகவல் ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை.[105]

விபீஷணர் "குருவின் உபதேசமின்றி எனக்கு பிரம்மாஸ்திரத்தின் மந்திரமும், இரகசியமும் தோன்ற வேண்டும்" என்று பிரம்மாவிடம் வேண்டினார். பிரம்மா அதனை அளித்து மேலும், "நீ இராட்சத ஜாதியில் பிறந்தும் எப்பொழுதும் தர்மாத்மாவாய் இருப்பாய். உனக்கு மரணம் கிடையாது" என்றும் வரமளித்தார். இதன் காரணமாகவே அவர் சிரஞ்ஜீவியாய் இருக்கிறார்.

சிரஞ்ஜீவிகளுக்கு அழியாமை இல்லை என்று சொல்லப்பட வில்லை. இவையெல்லாம் ஒரு பிரம்மகல்பம் வரை மட்டுமே! மகாபலி சக்ரவர்த்தி அடுத்த மன்வந்திரத்தில் இந்திரனாகவும், அஸ்வத்தாமா வேதவியாஸராகவும் இருப்பார்கள்.[106]

---

104. உத்ரகாண்டம் பக் 25, சி.ஆர்.எஸ்., 105–106 Ibid. P. 29.

இராவணரும் கும்பகர்ணரும் மகாவிஷ்ணுவின் துவாரபாலகர் களாகவும், நித்யசூரிகளாகவும் இருந்தவர்கள். பூலோகத்தில் அவர்களுடன் பிறந்த விபீஷணர் விஷ்ணுவின் பரிவாரங்களில் ஒருவரில்லை.

இராவணேஸ்வரரின் தர்பாரில் அமைச்சர்களில் ஒருவராகவும், ஆலோசராகவும் விபீஷணர் இருந்தார். இந்நிலையில், இராவணரின் தர்மபத்தினி மந்தோதரி ஒரு பெண் சிசுவை ஈன்றெடுத்தாள். தர்பாரிலிருந்த ஜோதிடர்களும், குறி சொல்பவர்களும், அந்த பெண் சிசுவால் இராவணருக்கு மரணம் ஏற்படும் என்றும் இராட்சத குலமே அடியோடு அழிந்துவிடும் என்றும் பலன் கூறினார்கள். மன்னர் உடனே அச்சிசுவை கொல்ல வாளை எடுக்கவே, விபீஷணரும் மந்தோதரியும் பலவாறாக கெஞ்சியும் பிரார்தித்தும், அதை ஒரு பெட்டியில் வைத்து, மந்திரியாக இருந்த மாரீசனிடம் கொடுத்து அதை எங்கேயாவது வைத்து விடும்படி உத்திரவிட்டார். மாரீசனும் அதை ஜனகரின் அரண்மனை தோட்டத்தில் உள்ள ஒரு ஏருக்கு முன் வைத்து விட்டார்.[107]

அந்தப் பெண் சிசு சீதை என்று பெயர் பெற்று, ஜனகரின் மகளாகி, தசரதரின் புத்திரனான இராமரின் மனைவியாவாள் என்றும் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் ஆபத்தை முளையிலேயே வேரோடு வெட்டி விட வேண்டும் எனத் திட்டமிட்டு, ஜனகரையும் தசரதரையும் கொலை செய்ய விபீஷணர் கூறிய புத்திமதியை ஏற்று, அப்பணியை விபீஷணரிடமே ஒப்படைத்தார்கள். தன் யோசனையை நிறைவேற்ற விபீஷணரும் மிதிலைக்கும், அயோத் திக்கும் சென்று அம்மன்னர்களைக் கொலை செய்ய முயற் சித்தார்.[108]

சீதையைத் தேடி கிஷ்கிந்தைக்கு வந்த இராமர் சுக்ரீவனுக்கும் அவர் அண்ணன் வாலிக்கும் இடையே உள்ள சிம்மாசனத்தைக் கைப்பற்ற நடந்த விவகாரத்தைத், தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, வாலியை மறைந்திருந்து கொன்று,[109] சுக்ரீவனை கிஷ்கிந்தையின் அரசனாக்கினார்.

விபீஷணர் சிறுவயதிலிருந்தே, இராவண கும்பகர்ணர்களுடன் நெருங்கி வாழாமல், பாசமுள்ள தம்பி போல் நடந்து கொண்டு அதே சமயம், தான் இலங்கையின் மன்னராக வேண்டுமென்ற ஆசையை மனதிற்குள் வளர்த்துக் கொண்டிருந்தார். சுக்ரீவனின் படையுடன், இராமர் இலங்கைக்கு படையெடுத்து வந்ததை,

---

107, JR in AVR PP 64-72. 108. ibld Vol 11, PP 162, 167. 109. AVR. P 248

விபீஷணர் தக்க சமயம் வந்ததென்று நினைத்து ஆட்சியை கவிழ்க்க திட்டம் தீட்டலானார்.

இராம தூதர்களை தண்டிக்கலாகாது என்றும், சமாதானமாக போகும்படியும், அன்பும் பாசமும் காட்டுவது போல் நடித்துக் கொண்டு, அடக்கமாகவும் மிகவும் மரியாதையாகவும் இராவ ணேஸ்வரருக்கு ஆலோசனை கூறினார். இராவணேஸ்வரர் விபீஷணரின் ஆலோசனையை நிராகரித்ததால், இருவருக்கும் வாக்குவாதம் வலுக்கவே, அவரை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார்.

இந்த சந்தர்பத்தை சாதகமாக்கிக் கொண்ட விபீஷணர் தன் முக்கிய நண்பர்களுடன், இராமரிடம் சரணடைந்து, தன்னிலை விளக்கம் கொடுத்து, அவர் அணியில் சேர்ந்து கொண்டார்.

இலங்கையின் இராணுவத்தைப் பற்றியும், போர் முறைகளையும் பாதுகாப்பு அம்சங்களையும், இராமர் நம்பிக்கை கொள்ளும்படி விவரித்தார்.

யுத்தமும் தொடங்கியது. வானரர்களும் இராட்சதர்களும் ஆயிரக்கணக்கில் வீரமரணம் அடைந்தார்கள். இரு தரப்பிலும் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். “சத்யவானும் தர்ம சாஸ்திரங்களை அறிந்தவனுமான கும்பகர்ணன் இராவணனுடன் பிறந்ததற்கும், அவரால் சகல சௌக்கியங்களையும், பெருமை களை அடைந்ததற்கும், தன் அரசன் என்ற முறைக்கும், தகுந்தபடி தன்னை யுத்தமென்ற யாகத்தில் பலி கொடுத்தார். மற்ற இராட்சத வீரர்களும் வானர வீரனும் செய்யாத வீர தீர செயல்களைச் செய்தார். தலை வெட்டப்படும் வரையும், பிரஞ்ஞை உள்ள வரையில், யுத்தம் செய்தார். வீர சொர்க்கத்தில் விளங்கினார். இவரல்லவா தர்மாத்மா? இவரல்லவா சுத்த வீரன்?”[110]

“விபீஷணனோ அண்ணன் திட்டியதைப் பொறுக்காமல் சத்ருவை சரணடைந்தான்; அவருடைய மர்மங்களை வெளியிட்டான். இராட்சத வம்சத்தை வேரறுத்தவன் இவனே, இராவணனல்ல. இவன் இல்லாவிட்டால் இராமருக்கு ஜயம் கிடைப்பது சந்தேகமே! இராஜ்யத்திற்கு ஆசைப்பட்டு அண்ணனுக்கும் அரசனுக்கும் துரோகம் செய்த சுக்ரீவனும் விபீஷணனும் நமக்கு வழிகாட்டியாவார்களா? பீஷ்மர், துரோணர், கிருபர் முதலிய உத்தமர்கள் துரியோதனனுடைய நடத்தையை கண்டித்தார்கள். ஆனாலும் அவனுக்காக உயிரைக் கொடுத்தார்கள். மேலும்,

110. யுத்த காண்டம், (சி.ஆர்.எஸ்.) பக். 266

இராவண கும்பகர்ணர்கள் ஜய விஜயர்களின் அவதாரங்கள். சீக்கிரத்தில் வைகுண்டத்திற்கு திரும்பி போனார்கள். விபீஷணன் அப்படியல்ல. ஆசை வைத்த இராஜ்யத்தை ஆளும்படி பூமியில் சிரஞ்ஜீவியாக வைக்கப்பட்டான்.”[111]

மாயா சீதையை, இந்திரஜித் வானர சைன்யங்களுக்கு முன்னிலையில் கொலை செய்ததைப் பார்த்த அனுமார், இனிமேல் யுத்தம் செய்வதில் பிரயோஜனமில்லை என தீர்மானித்து, இராம னிடத்தில் விஷயங்களைச் சொல்ல, இராமர் மயங்கி விழுந்தார்.

அது சமயம், விபீஷணர் சைன்யங்களை அங்கங்கே அணி வகுத்து தன் மந்திரிகளுடன் இராமர் இருக்குமிடம் வந்தார். அனுமாரின் பேச்சைக் கேட்ட விபீஷணர், “இது ஒரு நாளும் நடக்காது. அந்த துஷ்டனான இராவணனுடைய மனஸ் சீதை யிடத்தில் எவ்விதமாக இருக்கிறது என்பதை நான் அறிவேன். ஜானகியை ஒரு போதும் கொல்ல மாட்டான். வானரர்களை மயக்கி, தான் நிகும்பிலையில் இடையூறில்லாமல் யாகம் செய்வதற்காக இந்திரஜித் போயிருக்கிறான். ஹோமங்களை முடித்து, யுத்த களத்திற்கு வந்து விட்டால், அவனை தேவ கணங்களாலும், இந்திர னாலும் ஜெயிக்க முடியாது. இப்பொழுது சைன்யங்களுடன் நிகும்பிலைக்கு சென்றிருக்கிறான். அந்த யாகத்தை முடிப்பதற்கு முன் சைன்யங்களுடன் நாம் அங்கு செல்வோம்.”[112]

“லட்சுமணன் வானர சைன்யங்களுடன் உடனே நிகும்பலைக்குச் சென்று யாகம் செய்யும் இந்திரஜித்தை சண்டைக்கு அழைத்து, அவன் மார்பை பிளந்து கொல்லட்டும். அவன் கடும் தவத்தால் பிரம்மாவை ஆராதித்து பிரம்ம சிரசென்ற அஸ்திரத்தையும், நினைத்த இடங்களுக்குச் செல்லும் இரதத்தையும், குதிரைகளையும் பெற்றிருக்கிறான். இப்பொழுது சைன்யத்துடன் நிகும்பலைக்குச் சென்றிருக்கிறான். தடையில்லாமல் யாகத்தை முடித்து விட்டால் நாமெல்லாம் இறந்தே தீருவோம் என்பதில் சந்தேகமில்லை.

“நீ நிகும்பலை என்ற ஆலமரத்தடியில் போய் சேருவதற்குமுன், ஹோமம் செய்து முடிப்பதற்கு முன், சத்ருவை ஜெயிக்க புறப்படும் உன்னை, எவன் எதிர்த்து அடிப்பானோ, அவனால் உனக்கு மரணம்” என்று பிரம்மா விதித்திருக்கிறார். அவனுடைய மரணம் இவ்விதமென்று முன்பே எழுதப்பட்டிருக்கிறது. அவனை கொல்வதற்கு லட்சுமணனை அனுப்புங்கள். அவன் இறந்தால்

111. யுத்த காண்டம், (சி.ஆர்.எஸ்.) பக். 266
112. யுத்தக காண்டம் (சி.ஆர்.எஸ்.) பக்கம் 328, 329

இராவணனும், அவனுடைய பரிவாரங்களும் மடிந்தார்கள் என்பது நிச்சயம்,'' என அறிவுறுத்தினார்.[113]

இராமர், லட்சுமணரிடம் ''மாயா பலத்தில் நிகரில்லாத அந்த ராட்சதனை ஜெயித்து வா. இந்த விபீஷணன் மகா புத்திமான். ராட்சதனுடைய மாயையும், இருப்பிடங்களையும், வழிகளையும் நன்றாக அறிந்தவன். இவன் மந்திரிகளுடன் உன்னோடு வரு கிறான்,'' என்றார்.[114]

விபீஷணர் இலட்சுமணருடன் சேர்ந்து, வானர சைன்யங்களுடன் யாகம் நடக்கும் இடமான நிகும்பிலையை (ஆல மரத்தடியை) காட்டினார்.

வானரர்களும் ராட்சதர்களும் மிகவும் உக்கிரமாக வீரா வேசமாக மோதினார்கள். இந்திரஜித் தன் சைன்யங்களுக்குப் பின்னால் யாகம் செய்து கொண்டிருந்தார். வானரர்கள் தன் சைன்யத்தை கொன்று குவிப்பதை அறிந்த இந்திரஜித் யாகத்தை முடிக்காமல், ஆயுதபாணியாக வெளியில் வந்தார். இந்திரஜித் வில்லை வளைத்து பாணங்களைத் தொடுப்பதைக் கண்ட விபீஷணர், இலட்சுமணரிடம், ''இந்திரனை ஜெயித்த துஷ்ட ராட்சசன் ரதத்தி லிருந்து நமது மாருதியைக் கொல்ல விரும்புகிறான். ஆகையால் அவனுடைய இதயத்தை பிளந்து உயிரை வாங்கும் கோரமான பாணங்களை பிரயோகிக்க வேண்டுமென்றார்.

இலட்சுமணர் பக்கத்தில் இருந்த விபீஷணரைப் பார்த்த இந்திரஜித்:- ''அடே துரோகி! நீ இந்த இலங்கையில் பிறந்தவன். என் பிதாவுடன் பிறந்தவன். எனக்கு சிற்றப்பன். உன் பிள்ளையான எனக்கே துரோகம் செய்ய துணிந்தாயா? உனக்கு பந்துக்களும் இல்லை! மித்ரனும் இல்லை. ஜாதியும் இல்லை. யாவற்றையும் துறந்தவன். மரியாதை, தர்மம் முதலிய கட்டுபாடுகள் ஒன்று மில்லாதவன். உன் இனத்தாரை விட்டு சத்ருவுக்கு ஊழியம் செய்ய உன் தலையில் எழுதியிருந்ததல்லவா? சாதுக்கள் உன்னை காறி உமிழ்வார்கள். சத்ரு குணசாலியாய் இருந்தாலும், நம்மைச் சேர்ந்தவர்களே மேலானவர்கள். எப்படி இருந்தாலும் பிறர் பிறரே அல்லவா? தன் இனத்தாரை விட்டு சத்ருக்களைப் போய் சேருகிறவனை, அவர்கள், அவனை தங்கள் காரியம் முடியும் மட்டுமே உபசரிப்பார்கள். அவனால் அவனுடைய இனத்தாரை அழித்த பிறகு, அவனையும் அழிப்பார்கள் என்பதில் சந்தேகம் உண்டோ? இப்படி என் ஹோமத்தைக் கெடுத்து, இலட்சுமணனை

113. 114. யுத்த காண்டம் (சி.ஆர்.எஸ்.) பக்கம் 328, 329

இங்கு அழைத்து வரும் குரூர காரியமும், இரக்கமின்மையும், எங்கள் ஞாதியான உனக்கல்லாது மற்றவர்க்கு முடியுமோ?''[115]

விபீஷணர் பதில்: ''இந்த ஆலமரத்தடியில் உன்னால் வர முடியுமா? இராமர், இலட்சுமணரை விரோதித்த பிறகும் உன் உயிர் தப்புமா? யுத்தம் செய். இலட்சுமணருடைய பாணங்களுக்குத் தப்பி உயிருடன் இலங்கைக்கு திரும்பி போவேன் என்ற ஆசையை விடு.''[116]

இலக்குவன், இந்திரஜித்தைத் தாக்க ஆரம்பித்தார். இந்திரஜித் இலட்சுமணரைப் பார்த்து, ''க்ஷத்ரிய பதரே! நீச! நீ இராமனிடத்தில் எல்லையற்ற பக்தி வைத்திருக்கிறாய் அல்லவா? இன்று யுத்த களத்தில் நீ கவசம் பிளந்து, வில் முறிந்து, முண்டமாய் கிடப்பதை அவன் பார்க்கப் போகிறான்'' என்றான்.[117]

யுத்தத்தில் ஒவ்வொரு நிலையிலும், விபீஷணர் ராட்சச கூட்டத்தின் இரகசியங்களையும், இந்திரஜித்தின் போர் முறை தந்திரங்களையும், மாயா சக்திகளையும் இலட்சுமணரிடம் விவரித் தார்.[118]

இந்திரஜித்தும் இலட்சுமணனும் மிகவும் வீராவேசமாகவும், பயங்கரமாகவும், ஆண் சிங்கங்களைப் போல் போர் புரிந்தார்கள். இதை கவனித்த விபீஷணர், ''இவனுக்கு நான் சிற்றப்பன். நானே, இவனைக் கொல்வது தகாது. அப்படியிருந்தும் இராமனுக்காக, இரக்கத்தை விட்டு, என் அண்ணன் மகனைக் கொல்வேன்,'' என்று கூறி தானும் இலக்குவனுடன் சேர்ந்து தாக்க ஆரம்பித்தார் (மகாபாரதத்தில் சிறுவன் அபிமன்யுவை, அவனுடைய ஞாதிகளே சக்ர வியூகத்தில் வளைத்துப் போட்டு, சித்ரவதை செய்து கொன்றது ஞாபகம் வருகிறது).

இலட்சுமணர் பிரயோகித்த இந்திராஸ்திரத்தால் இந்திரஜித் கொலையானார். அதைக் கண்டு பூரித்த விபீஷணர் இலட்சுமண ரைப் பார்த்து, 'ஜய விஜயீ பவ' என தோத்திரம் செய்தார்.[119]

இந்திரஜித் வீரமரணம் அடைந்த பின் இராவணர் யுத்த பூமிக்கு வந்தார். மிகவும் ஆக்ரோஷமாக நடந்த பயங்கரமான யுத்தத்தில் இராமரால் இராவணரைக் கொல்ல முடியவில்லை. விபீஷணர் இராமரிடம், ''இவனுடைய நாபி பிரதேசத்தில் அம்ருதமானது குண்டலாகாரமாக சூழ்ந்திருக்கிறது. அதை அக்னியாஸ்திரத்தால் வற்ற செய்து விட்டால் உடனே மரணத்தை அடைவான்,''[120]

115, 116, 117, 118 யுத்த காண்டம் பக் 333 – 338. 119. யுத்த காண்டம் பக். 349, சிஆர்எஸ்., 120. யுத்த காண்டம் அத்யாத்ம ராமாயணம் பக். 355–356.

என்று மர்மத்தைக் காட்டிக் கொடுத்தார். இந்திரனுடைய தேரோட்டி, மார்பில் பிரம்மாஸ்திரத்தால் அடித்து கொல்லும்படி, ஞாபகப்படுத்தினார். இராமர் அவ்வாறே அக்னியாஸ்திரத்தாலும், பிரம்மாஸ்திரத்தாலும் அடித்து இராவணரைக் கொன்றார்.

இது நடந்தது வைகாசி மாதம் கிருஷ்ணபட்ச ஏகாதசி திதி மாலை பொழுது.[121] இராவணேஸ்வரர் இறந்ததும் உடன் பிறந்த விபீஷணர் அவரைப் புகழ்வது போல், பாசாங்காக, நடித்து இராமரின் ஆஞ்ஞையின்படி அவருக்கு கொள்ளி வைத்தார்.

பரிசாக இராமர் அவரை இலங்கைக்கு அரசனாக நியமித்தார் "லங்கா இராஜ்யத்தை நீதி வழுவாமல் பரிபாலித்து கொண்டு சந்தோஷமாக இரு. இனிமேல் தேவர்களால் உனக்கு எவ்விதமான தொந்திரவும் ஏற்படாது," (தேவர்கள், அமரர்கள், வடநாட்டவர்கள்) என உறுதியளித்தார். விபீஷணர் பதிலுக்கு "இந்த இராட்சத தீவிபம் பாரதத்தில் பாதி. இது உங்களுக்கே," என அறிவித்து அயோத்தியின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்.[122]

விபீஷணர் கேட்டுக் கொண்டதின்படி, இராமர் தான் கட்டிய மிதக்கும் பாலத்தை இடித்து விட்டார்.[123] (விபீஷணர் தன் பாதுகாப்பிற்காக இப்படி சொல்லியிருக்கலாம்).

துரோகி என்று இன்றளவும், உலகமெங்கும் இகழப்பட்டும், சிரஞ்சீவி என்ற வரத்தையும் பெற்ற விபீஷணர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இராமர் அன்பளிப்பாக கொடுத்த அரங்கநாதரை வழிபட்டுக் கொண்டிருக்கிறார். (இது ஐதீகம்).

121. ஜேஆர். பக். 144.
122. அத்யாத்ம ராமாயணம் பக். 356.
123. ஏ.வி.ஆர். பக். 335.

அத்தியாயம் – 5

கிஷ்கிந்தையும் கேரளாவும்

முன்காலத்தில் மகாபலி சக்ரவர்த்தி நர்மதை நதி கரையில் யாகம் செய்து கொண்டிருந்த போது, தேவர்களின் பிரார்த்தனையை நிறைவேற்ற, மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து, மூன்றடி மண் தானமாக கேட்டார். அச்சமயம் மகாபலிக்கு விஷ்ணு விச்வரூப தரிசனம் தந்தார். பகவானை நேரில் கண்ட மகாபலி மிகுந்த பரவசமாகி, கண்கள் ஆனந்த கண்ணீர் வடிக்க, அவரை பலவாறாகப் புகழ்ந்து துதித்தார். அவரின் பாதங்களில் வீழ்ந்து சரணடைந்தார். அவரின் மனைவி விந்தியாவல்லி வாமனருக்கு பாதபூஜை செய்தாள். மகாபலி அந்த நீரை தன் தலையில் தெளித்துக் கொண்டார். தன்னையும் தனக்கு சொந்தமான அனைத்தையும் தந்து விட்டேன் என்று தானம் செய்தார். உடனே கருடன் அவரை கயிற்றால் கட்டினார். இதைப் பொறுக்க முடியாமல் அசுரர்கள் தேவர்களைத் தாக்கினார்கள். மகாபலி சக்ரவர்த்தி தேவர்களைத் தாக்க வேண்டாம் என்றும், எல்லாம் காலத்தினால் ஆனது என்றும் கூறித் தடுத்தார் உடனே தேவர்கள் பலமாக தாக்கவே, அசுரர்கள் பாதாள லோகத்திற்கு ஓடி ஒளிந்தார்கள்.[124]

ஆனாலும் பலி சக்ரவர்த்தியைத் தன் பாதங்களால் அழுத்தி பாதாள உலகத்தில், சுவேத தீவின் அடியில், சிறையில் வைத்து, சங்கிலிகளால் கை கால்களை இறுகப் பிடித்து, சங்கிலியை சுவற்றில் பலமாக மாட்டி விட்டார். மகாபலி சக்ரவர்த்திக்கு சிரஞ் சீவி என்கிற ஆசீர்வாதமும், (மகாவிஷ்ணுவுக்கே தானம் கொடுத்த தினால்)[125] தன் சேவகனான இந்திரனுக்கு தேவேந்திர பதவியும் அளித்தார். அச்யுதா! அமரரேறே! என வைணவ நூல்கள் புகழ் கின்றன.

எதிர்வரும் மந்வந்திரத்தில் மகாபலி சக்கிரவர்த்தி தேவேந்திர னாகவும், ஆஞ்ஜநேயர் வேதவியாஸராகவும் பதவியடைவார்கள்.

124. நாராயணீயம், வேம்பத்தூர் நாராயணபட்டத்ரி ஆர்.கே.மட்.,
125. உத்ரகாண்டம் சர்க்கம் 22. பக். 60

மகாபலி சக்ரவர்த்தி தண்டகாரண்யமான தென் இந்தியா முழுவதற்கும் சக்ரவர்த்தியாக இருந்தார். அதனால் தென்னிந்திய மக்கள் அனைவரும் ஓணம் பண்டிகையைக் கொண்டாடி வளம் பெற வேண்டும்.

பாதாள உலகம் என்றும் நாகலோகம் என்றும் கூறப்படுவது கேரளாவே. அனந்தன் என்கிற நாகம் பூமியைத் தாங்கிக் கொண்டி ருப்பதாகவும், அந்த நாகத்தின் மேல் மகாவிஷ்ணு படுத்திருப்ப தாகவும், அதனால் அந்த இடம் திரு அனந்தபுரம் என்றும் அழைக் கப்படுகிறது.[126]

சுவேத தீபம் என்பது மாவேலிக்கரை அருகில் இருக்கும் ஆலப்புழையில் உள்ள உப்பங்கழியில் இருக்கும் ஒரு தீவுதிட்டு என்று அறியப்படுகிறது. அது விஷ்ணுவின் காலடி பட்ட இடம் என்பதால் தானோ என்னவோ அங்கு கேரளத்துக்காரர்கள் முக்கிய நாட்களில் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்கிறார்கள்.

நாகலோகத்து நாகர்களும், நாக கன்னிகைகளும் அழகு, அறிவு, வளம் மற்றும் நற்பண்புகள் உள்ளவர்களாகவும் புராணங்களிலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஓணம் பண்டிகையைக் கொண்டாடி, சிரஞ் சீவி மகாபலி சக்ரவர்த்தியின் அருளைப் பெறுவதால், அவர்கள் இன்றும் பல்லோரால் மதிக்கப்படுகிறார்கள்.

கிஷ்கிந்தை என்கிற இடம் பம்பை நதிக்கு மறு கரையில் சமீபத்தில் இருப்பதாக கபந்தன் இராமருக்கு தெரிவித்திருந்தான்.[127] அந்நாட்டு மன்னரின் கொடியில் குரங்கு படம் வரைந்திருக்கும். அதனால் அவர்களை குரங்குகள் என்றும் நாகரீகமற்ற காட்டுவாசிகளாகவும் சித்தரிப்பது கவித்வ கொடுமையே!

ஆனால், இராமகிருஷ்ண மடத்து சந்நியாசி விக்யானந்தா என்கிற ஹரிப்ரஸாத் சாட்டர்ஜி BA, LCE 1935ல் எழுதி, அலகா பாத்தில் வெளியிடப்பட்ட, வால்மீகி இராமாயணத்தில் விளக்கு கிறார், “வாலி இந்திரனின் மகன்; சுக்ரீவன் சூரியனின் மகன். அவர்களின் கொடியில் குரங்கு படம் வரையப்பட்டிருந்ததால் அவர் களைக் குரங்குகளாய் வர்ணித்து விட்டார்கள். அவர்கள் சாமர்த்திய சாலிகள், திறமையானவர்கள், அழகான தோற்றம் உடையவர்கள், சரீர பலமுடையவர்கள், வீர தீர பராக்ரமசாலிகள்.”[128]

இதற்கு வலுவூட்டும் வகையில் சீதையை எங்கெல்லாம் தேட வேண்டும் என்பதற்கு, சுக்ரீவன் உலகத்திலுள்ள அனைத்து

126, Puranic Encylopedia by Vettam Mani., 127. ஆரண்ய காண்டம் சர்கம் 73. பக்கம் 208, 128, வாரா. ALL பக்கம் 442- 443.

நாடுகளையும், அங்குள்ள நீர் மற்றும் கனிம வளத்தைப் பற்றியும், அங்கு செல்ல வேண்டிய வழிகளையும் மிகவும் விலாவாரியாக, துல்லியமாக, இந்த பூகோளத்தை வர்ணிக்கிறார். அதில் பாண்டிய நாட்டரசன் சம்பாசுரன் என்ற மீன் கொடியுடைய மன்னரின் கோட்டை தங்கமயமானது என்றும், கதவுகள் தங்கத்தால் ஆனது என்றும் வர்ணிக்கிறார்.

அவர்கள் வேதம் படித்தவர்கள்; தர்மசாஸ்திரங்களை நன்கு அறிந்தவர்கள். அவர்களுக்கென்று விதிக்கப்பட்ட வாழ்க்கை நெறி முறைகளை மீறாதவர்கள் என்றும் புரியும். வாலி என்ற மாவீரன் விவேகமானவர் என்றும், பெருந்தன்மையுள்ளவர் என்றும், அதர்மமாக க்ஷத்ரிய தர்மத்தை மீறி, மறைந்திருந்து கொலை செய்த இராமரை, வாலி குற்றம் சாட்டியதையும், தாரை பிரலாபித்ததையும், அதற்கு சரியாக பதில் கூற முடியாமல் இராமர் மழுப்பியதையும் படித்தால், வட நாட்டு மக்கள் (தேவர்கள், அமரர்கள்) தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது போல், அப்படியொன்றும் நாகரீகத்திலும், படிப்பறிவிலும், பண்பிலும் சிறந்தவர்கள் என்று ஒப்புகொள்ள முகாந்திரமில்லை.

அத்யாயம் 6

இராமரும் அகஸ்தியரும் தண்டகாரண்யத்திற்கு ஏன் வந்தார்கள்?

தாடகை மிகுந்த பலசாலி. ரூப லாவண்யத்தில் நிகரற்று விளங்கினாள்.[129] கணவர் சுந்தனுடன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். இந்நிலையில், அங்கு ஒரு ஆஸ்ரமத்தில் பிராமணர்களும் ரிஷிகளும் பெரியதொரு யாகம் செய்து கொண்டிருந்தனர். வேதம் படித்தவனான சுந்தன் யாகத்தில் பங்கேற்க அங்கு சென்றான். அவ்வாறு சென்ற இடத்தில் அவனுக்கும், அகஸ்தியருக்கும் ஏதோ சர்ச்சை உண்டாகவே, மகரிஷி சுந்தனைக் கொன்று விட்டார்.

யாகசாலையில் இருந்து திரும்பி வராத கணவனைத் தேடி சென்ற தாடகை, அவன் அகஸ்தியரால் கொல்லப்பட்டதை அறிந்து, பழிவாங்க அங்கிருந்த அனைவரையும் தாக்கவே, அவர்கள் ஓடி விட்டார்கள்.[130] தாடகை, தன்னைக் கொல்ல ஓடி வந்ததைப் பார்த்த மகரிஷி, "நீ யாரென்று வினவ, அவள், தான் சுந்தனின் மனைவி என்று பதில் உரைத்து, அவரைத் தாக்க ஆரம்பித்தாள். அவர் மகாரிஷியும், தபோவலிமை மிக்கவருமானவராகையால் அவளால் கொல்ல முடியவில்லை. மாரீசனும், நீயும் (தாடகையும்) யட்ச சாரீரத்தை விட்டு, ராட்சதர்களின் விகார சாரீரத்தை எடுக்கக் கடவீர்கள். நீயும் உன் மகனும் மனுஷ்யர்களைத் தின்று கொண்டு ராட்சதர்கள் ஆவீர்கள் என்று சபித்தார்."[131]

ஒரு பெண்ணைக் கொன்றால் தன் தபோவலிமை பாதிக்கும் என உணர்ந்த மகரிஷி ஆஸ்ரமத்தை விட்டு விலகினார். அவரின் ஆஸ்ரமத்தையும் யாகத்தையும் தாடகை அடியோடு அழித்து விட்டாள். அவளுடைய மகன் மாரீசன், தன் தாயுடன் இணைந்து தன் தந்தையின் கொலைக்கு காரணமான அந்த ஆஸ்ரமத்தை நிர்மூலமாக்கினார். இச்சம்பவம் அயோத்திக்கு அருகில் உள்ள

129, 130, 131 பாலகாண்டம், சர்க்கம் 25, பக்ம் 75 சிஆர்.எஸ்

சரயூ நதி பாயும் பிரதேசத்தில் நடந்தது. மாரீசனும் தாடகையும் இலங்காதிபதி இராவணேஸ்வரருக்கு உறவினர்கள்.

தாடகை மற்றும் மாரீசன் செயல்களால் வருத்தமடைந்த அகஸ்தியர் பழி வாங்கும் விதமாக தண்டகாரண்யமான தென் னாட்டிற்கு கிளம்பினார். விந்திய மலையை அடைந்து, அதற்கு மேற்கு பக்கமாகவே நடந்து ஒரு வழியாக தண்டகாரண்யத்தில் நுழைந்தார் (அவர் நடந்து வந்து, கண்டுபிடித்த வழியே பிற்காலத்தில் இராமர் வனவாசம் செய்ய தண்டகாரண்யத்திற்கு வர உதவியது). அவர் தன்னுடன் 18 யதுகுல மன்னர்களையும் அழைத்து வந்தார் அவர்கள் காடுகளை அழித்து நாடுகளை உண்டாக்கினார்கள். விதர்ப தேசத்திற்கு சென்று அந்நாட்டு இராஜகுமாரி லோபாமுத்ரையை திருமணம் செய்து கொண்டார். திருப்பதி திருமலையில் சுப்ரமணிய கடவுளை தரிசனம் செய்து அவரிடம் உபதேசம் பெற்றார்.[132] குடகு மலையில் தவம் செய்தார் அங்கிருந்து பொதிகைக்கு இடம் பெயர்ந்தார். சகலகலா வல்ல வரான இராவணேஸ்வரரை வாதத்தில் தோற்கடித்து இலங்கைக்கு அனுப்பி விட்டார்.

இராம லட்சுமணர்கள் பதினைந்து வயதிற்குள் குருகுலவாசம் செய்து வேதஉபநிடங்களை முழுவதும் கற்று தேர்ச்சி அடைந் தார்கள். போர் பயிற்சி பெற்றார்கள். அஸ்திர பிரயோக மந்திரங் களையும் தெரிந்து கொண்டார்கள்.

இந்நிலையில், தாடகை மற்றும் மாரீசன் முதலியோர் விச்வா மித்ரரின் ஆஸ்ரமத்தில் நடந்த யாக யக்ஞங்களுக்கு உபத்ரவம் செய்தார்கள். விச்வாமித்ரர் க்ஷத்ரியர்; மன்னர். தபஸ்வி ஆகி பின் பிரம்மரிஷி ஆனவர்; காயத்ரி மந்திரத்தைக் கண்டுபிடித்தவர். தன் ஞானதிருஷ்டியால் இராம லட்சுமணர்களால் மட்டுமே தாடகை மற்றும் மாரீசனைக் கொல்ல முடியும் என்று உணர்ந்து தசரதரை அணுகினார்.

தசரதர் தான் தண்டகாரண்யம் செல்ல மாட்டேன் என்றும் இராவணேஸ்வரருடன் யுத்தம் செய்ய மாட்டேன் என்றும் கூறினார். அவரின் இட்சவாகு குலத்து முன்னோரான அனன்யன் என்பவரை இராவணேஸ்வரர் முன்பு கொலை செய்ததை நினைத்து கொண்டி ருக்கலாம்.[133]

132. அயோத்யா காண்டம். இராமாயணம் நோட்டுகள் 1913 சி.ஆர்.எஸ்.
133. பாலகாண்டம். சிஆர்.எஸ். சர்க்கம் 20. பக். 66

இராம லட்சுமணர்களை அனுப்பி வைக்குமாறு விச்வாமித்ரர் கேட்க, அதிர்ச்சியடைந்து, நடுங்கிப் போய் தன் புத்திரர்களை அனுப்ப மறுத்தார். தர்பாரில் இருந்த மந்திரி பிரதானிகளும், குலகுரு வசிஷ்டரும், விச்வாமித்ரருக்கு ஆதரவாக பேசி மன்னரை சம்மதிக்க வைத்தனர். விச்வாமித்ரருடன் சென்ற இராம லட்சுமணர்கள் மேலதிகமாக வேத சாஸ்திரங்களையும் போர் நுட்பங்களையும் அஸ்திரபிரயோக மந்திரங்களையும் நன்றாகக் கற்றுக் கொண்டார்கள்.

இந்நிலையில், ஒரு நாள் தாடகை அங்கு வரவே, விச்வாமித்ரர் அவளை உடனே கொல்லும்படி இராமருக்கு ஆக்ஞையிட, இராமர் சற்றும் தாமதிக்காமலும், யோசிக்காமலும், விசாரிக்காமலும் அப்படியே அவளை ஒரு பாணத்தால் மார்பில் அடித்து கொன்றார். மாரீசன் மேல் எய்த அம்பு அவரைக் கொல்லாமல் பலகாத துாரத் திற்கு அப்பால் துாக்கி எறிந்தது. மாரீசன் ஒரு கண் பார்வையை இழந்தார். அவரின் ஆதரவாளர்களும் ஓடி விட்டார்கள்.

விச்வாமித்ரரிடம் தாடகை மற்றும் மாரீசனின் விருத்தாந்த்தைக் கேட்டறிந்த இராமர், ‘‘தண்டகாரண்யத்தைக் கைப்பற்றி அசுர குலத்தை அழிப்பேன்; வர்ணாஸ்ரம தர்மத்தை அங்கு பரப்பி, மேலான க்ஷத்ரிய தர்மத்தை நிலைநாட்டுவேன். க்ஷத்ரிய தர்மம் மட்டுமே மேலான மோட்சத்தை அளிக்கும்,’’ என சபதம் எடுத்து கொண்டார்.[134]

லோபாமுத்ரையை திருமணம் செய்து கொண்ட அகஸ்தியர் சாந்தி முகூர்த்தம் செய்து கொள்ள மறந்து விட்டார். வேதம் ஓதுவதிலும், ஜெபம் செய்வதிலும், மந்திரங்களை யோசித்து, யோசித்து எழுதுவதிலுமே அவரின் காலம் கழிந்து விட்டது. வருத்தப்பட்டிருந்த லோபாமுத்ரை, ஒரு சமயம் அவர் வீட்டு வழியே சென்ற இராவணேஸ்வரரைக் காணவே, அவருடன் சென்று விட்டாள். ஞானதிருஷ்டியால் இதைக் கண்டுபிடித்த அகஸ்தியர், அவர்களைப் பின்தொடர்ந்து, தன் பிரம்ம தண்டத்தால் இராவணேஸ்வரரை ஸ்தம்பிக்கச் செய்து, தன் மனைவியை மீட்டார் இராவணேஸ்வரரை அடித்துத் துரத்தி விட்டார். இராவணேஸ்வரர் அகஸ்தியருக்கு எதிரியானார்.[135]

இராம - இராவண யுத்தத்தில், அகஸ்தியர் யுத்த களத்தில் இருந்து கொண்டு, இராமரின் வெற்றிக்காக சூரிய கடவுளை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தார்.

---

134. பாலகாண்டம் சிஆர்எஸ். சர்க்கம் 9 பக்கம் 23:
135. இந்து மதம் எங்கே போகிறது. அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார்)

சில நூல்களில் சிவ பார்வதி திருமணம் கயிலையில் நடந்த போது, முப்பது முக்கோடி தேவர்களும் அங்கு கூடியதால் பூமியின் வடபகுதி தாழ்ந்து விட்டதாகவும், தென் பகுதி உயர்ந்து சமநிலை இல்லாமல் போய் விட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

நாம் இப்பொழுது இருக்கும் பிரபஞ்சத்தைப் போல் இன்னும் பல பிரபஞ்சங்கள் உள்ளன. இவ்வனைத்து பிரபஞ்சங்களுக்கும் சிவனே முதலாளி; அவைகளை இயக்குபவரே ஈஸ்வரர். பிரபஞ் சங்களில் உள்ள அனைத்து கோள்களின் சுற்றும் செயல்களே அவரின் ஆனந்த தாண்டவமாக வர்ணிக்கப்படுகிறது.

சிவபெருமானாலேயே, உயர்ந்து விட்ட பூமியை சமநிலை அடையச் செய்ய முடியும். ஆனாலும் அவர் உத்தரவின்படி, அகஸ்தியர் தென்னாட்டிற்கு வந்து, பூமியை சமநிலை அடைய வைத்ததாகச் சொல்வது, பௌராணிகளுக்கு, அந்த மாமுனிவர் பால் உள்ள அதீதமான மதிப்பும், ஏற்றப் புகழ்ச்சியும் ஆகும். அறியாமல் செய்த சிவ அபராதமும் ஆகும்.

அத்தியாயம் – 7

தேவாசுர யுத்தமும் தமிழ்நாடும்

ஒரு சமயம் தேவாசுரயுத்தம் தேவேந்திரனின் தலைமையில், தென்னகத்திலுள்ள பாண்டிய நாட்டில் நடந்தது. அச்சமயம் அபஜயம் ஏற்படும் நிலையில், தேவர்கள் தசரதரை உதவிக்கு அழைத்தார்கள். கோரிக்கையை ஏற்ற தசரதர், மந்திரி பிரதானிகளுடன், கைகேயி தேரை ஓட்ட, தெற்கில் தண்டகாரண் யத்தில், மீன் கொடியுடைய சம்பரன் என்ற மகாசுரன் அரசாளும் வைஜயந்தி புரத்தை நோக்கிச் சென்றார்.

அந்த அசுரனோ தேவர்களால் ஜெயிக்க முடியாதவன். பலமுறை தேவேந்திரனுடன் யுத்தம் செய்திருக்கிறான்.[136]

சம்பரனுடன் நடந்த கோர யுத்தத்தில், தசரதர் இருமுறை மூர்ச்சை அடைந்தார். இரண்டு முறையும் கைகேயி அவரைக் காப்பாற்றி, சைத்யோபசாரம் செய்து, லாவகமாகத் தேரை ஓட்டி, தசரதரை அயோத்திக்கு திரும்ப அழைத்து வந்து விட்டாள்.

தன் தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கும் நிமித்தம், இராமர் தண்டகாரண்யத்திற்குச் சென்று சம்பரனுடைய இராஜதானியான வைஜயந்திபுரத்தை முற்றுகையிட்டு, அவரைக் கொன்றார்.

“இந்த கதை இதற்கு முன் சொல்ல வேண்டிய இடத்தில் காணப்படவில்லை. தசரதர் அந்த அசுரனுடன் யுத்தம் செய்தார் என்பது கைகேயிக்கு கொடுத்த வரங்களால் தெரிகிறது. இப்படி வால்மீகி பல இடங்களில் அதற்கு முன் நடந்த விருத்தாந் தங்களையும் குறிப்பிடுவதால், அவை நடந்தது என்றே நாம் யூகித்துக் கொள்ள வேண்டும். சத்ருக்களுடன் யுத்தம் செய்து அவர்களுடைய நகரங்களைப் பிடித்து கொண்டு ஜெயசாலிகளாக திரும்புவது பொதுவாக சொல்லப்பட்டுள்ளது.”[137]

136 அயோத்யா காண்டம் சர்க்கம் 9, பக் 32. Hexley Press 1935.
137. ibid crs விமர்சனம்.

ஆனால், சுந்தரகாண்டம் சர்க்கம் 16ல் முரணாக, தேவேந்திரன் தான் பாண்டிய மன்னரை யுத்தத்தில் கொன்றான் என்று கூறப் பட்டிருக்கிறது. (தன்னை நம்பும் விதமாக அடையாளம் காட்ட அனுமான் சீதையின் காதில் படும்படி கூறியதாகக் காணப்படுகிறது.)

சீதையைத் தேட சுக்ரீவர் உத்திரவிட்டபோது, அனுமனையும் நீலனையும் பார்த்து “நீங்கள் தெற்கு திசையில் தேடுங்கள். தெளிந்த ஜலத்துடன் காவிரி என்ற புண்ணிய நதி காணப்படும். அங்கு அகஸ்தியரை தரிசித்து, உத்தரவு பெற்று கொண்டு, சந்தன மரங்களின் வாசம் வீசும் தாமிரபரணி நதியைத் தாண்ட வேண்டும். பிறகு முத்து, நவரத்தினங்கள் முதலிய விலை உயர்ந்த பதார்த்தங்களுக்கு இருப்பிடமான பாண்டிய ராஜாக்களின் தங்கமயமான இராஜதானி தோன்றும். பிறகு சமுத்திர கரையைச் சேர்ந்து மகேந்திர மலையைக் காண்பீர்கள்,” என்று அறிவுறுத்தினார்.[138]

சுக்ரீவர் மேலும் தன் தளபதிகளிடம் கூறினார். “ஒரு இளம் பெண் தன் கணவருடன் சேர்வதற்கு செல்வது போல், காவிரி நதி சமுத்திரத்தை நோக்கிச் செல்லும் பிராந்தியத்திற்குச் செல்லுங்கள். அதையடுத்து ஜெயந்திபுர மாகாணத்தில் பாண்டிய மன்னர்களின் தங்கத்திலானான நுழைவு வாயில் கதவைக் காண்பீர்கள். அது பார்க்கத் தகுந்தது.”[139]

புராணங்களில் கூறப்பட்டிருக்கும் தேவாசுரயுத்தம் தென்னாட்டில் தான் நடந்தது என்பதற்கு இந்த இராமாயண விவரங்களே சான்று.

தற்கால திருச்செந்துாரே அக்காலத்தில் ஜெயந்திபுரம். முருக கடவுள் இன்றும் ஜெயந்திநாதர் என்றே அழைக்கப்படுகிறார்.

திரேதா யுகத்தில், அதாவது ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாட்டில் பாண்டியர்களின் சீரும் சிறப்புமான ஆட்சி இருந்தது என்பதற்கு இராமாயணத்தில் உள்ள இந்த கதையே ஆதாரம். மேலும் கேரளா, சோழா என்ற வார்த்தைகளும் வால்மீகி இராமாயணத்தில் காணப்படுகின்றன.[140] சேர, சோழ பாண்டிய மன்னர்களை அசுரர்கள் என்றும் குரங்குகள் என்றும் வர்ணிப்பது மிகவும் வருந்தத்தக்கது. அது ஆதிக்க தீய சக்திகளின் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடே ஆகும்.

138. கிஷ்கிந்தா காண்டம் சர்கம் 44. பக் 155
139 கிஷ்கிந்தா காண்டம் விஆர். ALL பக் 156
140. வால்மீகி இராமாயணம் எம்எல்ஜே பிரஸ் 1958.

முடிவுரை

பலவிதமான இராமாயணக் கதைகள், பல்வேறு காலக் கட்டங்களில், பல்வேறு அறிஞர்களால் அவரவர்களின் கொள்கைக் கும், மனோபாவத்திற்கும் ஏற்றார்போல் திரித்துப் புனையப்பட்ட தேயாகும்.

இராமானுஜன் என்ற அமெரிக்காவில் வாழும் தமிழர், 300 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவைகளிலுள்ள முரண்களைப் பற்றியும் அலசுகிறார். கம்பன், இராவணர் சீதையை, பூமியை நகத்தால் கீறிப் பிளந்து, பூமியோடு தூக்கிச் சென்றார், என உண்மைக்குப் புறம்பாக வர்ணித்திருக்கிறார் எனக் கூறியுள்ளார்.

வேத வியாசரால் முதலில் 700 பாடல்களில் சுருக்கமாக எழுதப்பட்ட, இராமர் என்ற இளவரசரின் வீரதீர பராக்கிரம செயல் களையும், அவர் ஏராளமான சிறு நாடுகளை வென்று, உத்திர பிரதேசத்தில் உள்ள அயோத்தி நாட்டுடன் சேர்த்து சாம்ராஜ்ய விஸ்தரிப்புச் செய்த சாதனையே 'இராமோபாக்யானம' என்கிற மூலஇராமாயணம்.

பிற்காலத்தில் வால்மீகி மகரிஷி இந்த இராமாயணத்தையே ஆதார நூலாகக் கொண்டு (தற்போது கிடைத்துள்ள) இராமா யணத்தை விரிவாக்கி 24,000 பாடல்களில் எழுதினார்.

முதன் முதலில், உலகில் வால்மீகியே தன் காவியப் படைப்பில் விலங்குகள், ராட்சசர்கள் மற்றும் காட்டுவாசி மக்களையும் இணைத்து கதா பாத்திரர்களாகச் சேர்த்து, இலக்கியத்தை, அதைப் படிப்பவர்க்கு ஆர்வமும், பரவசமும் உண்டாகுமாறு படைத்தார். அதனால் இது, மிகவும் பிரபலமடைந்து, ஆசிய கண்டமெங்கும் பரவியது. மேலை நாட்டவரும் ஆர்வத்தோடு படித்தார்கள்; இந்த யுக்தியை அறிஞர்களும் கவிஞர்களும் பின்பற்றினார்கள்.

வால்மீகி ஆதிகவி எனப் புகழ் பெற்றார். ஒரு வெற்றி வீரனின் வரலாற்றை எழுதி, அதன் மூலம் வேத, உபநிஷத்துக்களின் உட்

பொருளையும், தர்ம சாஸ்திரங்களையும், அரசியலையும், ராஜநீதி மற்றும் ராஜ தந்திரங்களையும் உபதேசித்தார்.

உலகில் உள்ள நாடுகளையும், கடல்களையும், அவற்றிக்கு செல்லும் வழிகளையும், அங்குள்ள மக்களைப் பற்றியும், நீர்வள, கனிம வளங்களையும், ஆட்சியாளர்களின் சிறப்பையும் விளக்கியுள்ளார். இம்மாதிரியான வர்ணணைகள் உலகின் மற்ற நாடுகளிலுள்ள கவிஞர்களுக்கு முன் மாதிரியாக அமைந்தது.

கிரேக்க காவியங்களும் வால்மீயின் யுக்தியை பின்பற்றி எழுதப் பட்டவைகளாகத் தெரிகிறது. (உதாரணம்) ஹோமர் மற்றும் இலியட், டேவிட் அண்டு கோலியத். வால்மீகிக்கு இணை வால் மீகியே!

வால்மீகி இராமாயணத்தில் ஏராளமான முரண்களும், சேர்க்கைகளும், நீக்கல்களும், காணப்படுகின்றன (உம்) இராமர் வாலியை நோக்கி ''லோகத்தில் சில அரசர்கள் தங்கள் ஆளுகைக்கு உட்படாத மலைகளையும், காடுகளையும் அபகரித்துக் கொண்டு அவைகளிலுள்ள ஜந்துக்களையும் பீடிக்கிறார்கள் எனக் கூறினார். (ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் விமர்சனம்:'' இராமனின் செய்கையும் இவ்விதமே'') அதே சி.ஆர்.சீ.,யின் 1935ல் Huxley Press 3ம் பதிப்பில் இந்த அடைப்புக் குறிப்புகள் காணப்படவில்லை.[141]

நகைச்சுவைக்காக, கதாபாத்திரங்களின் செயல்கள் வர்ணிக்கப் படுகின்றன. (உம்) சூர்ப்பநகை மானபங்கம், மனிதர்களை குரங்குகளாகவும், கரடிகளாகவும் வர்ணிப்பது.

வால்மீகி எந்த மொழியில் இராமாயணத்தை எழுதினார் என்று தெரியவில்லை. சமஸ்கிருதம் என்றால் நன்றாகச் செய்யப்பட்டது என்று பொருள். கி.மு. 4ம் நூற்றாண்டில் தான் பிராகிருதம் மற்றும் பாலி மொழிகளிலுள்ள குறைகளை நீக்கி சமஸ்கிருதம் செய்யப்பட்டது என ஒரு கருத்துள்ளது.

இராமர் காலம் கி.மு. 4,000. ஆஞ்சநேயர் வியாகரண பிழை யின்றி (இலக்கணம்) சமஸ்கிருதத்தில் பேசினார் என்பதும், பிற்கால பௌராணிகர்களின் அதீதமான சமஸ்கிருத அபிமானமேயாகும்.

வால்மீகி மகரிஷி எழுதிய இராமாயண மூல பாடம் அவர் எழுதியபடியே நமக்கு பூரணமாக கிடைக்கவில்லை என்பது

141. கிஷ்கிந்தா காண்டம் சர்க்கம் 18.

அறிஞர்களின் ஆய்வு முடிவு. இதற்கு ஆதாரமாக அடிக்கடி ஒரே விஷயத்தை வெவ்வேறு விதமாகவும், விரோதமாகவும் பல இடங்களில் சொல்வதும், சில பாடல்களே உள்ள சர்க்கங்கள் நடுவில் சேர்க்கப்பட்டிருப்பதும், முக்கியமான பகுதிகள் விடப்பட்டி ருப்பதும் காணப்படுகிறது.[142]

அதேபோல் இந்த ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் ஆய்வு நூலிலும், கோர்வை நிமித்தம், ஒரே தகவலை, பல இடங்களில் திரும்பத் திரும்ப மேற்கோள் காட்ட அவசியமாகிறது. (ஆர்)

வீபர்பண்டிதர் ஆய்வு செய்து விளக்குகிறார்: ''ஆர்யர்கள் தங்களுடைய நாகரீகத்தை தெற்கிலுள்ள பாகங்களில் பரவச் செய்த விருத்தாந்தமே இராமாயணக் கதை மூலமாக சொல்லப்படுகிறது; மற்றதெல்லாம் கற்பனையே! ரிக் வேதத்திலும், கிருஹ்ய சூத்திரத் திலும் வயல்களுக்கு தேவதையாக பூஜிக்கப்படும் சக்தியே சீதையென்று சொல்லப்படுகிறது. பயிர்த்தொழிலை தென் தேசங்களில் பரவ செய்யும் நாகரீகமுள்ள ஜாதியே இராமர் என்று குறிப்பிடப்படுகிறது. பலராமனுக்கு கலப்பையை ஆயுதமாக சொல்லப்படுவதற்கு இதுவே காரணம். நாகரீகமற்ற ஜனங்களே குரங்குகளாகவும், ராட்சர்களாகவும் சொல்லப்படுகிறார்கள். சீதை பூமியிலிருந்து தோன்றி பூமியில் மறைந்தாள் எனப்படுவதும் இந்தக் கொள்கையையே வலுப்படுத்துகிறது.''[143]

ராமேஷ் சந்திர தத்தா என்பவர் இந்தக் கொள்கையையே ஆதரிக்கிறார் ''ரிக் வேதத்தில் முக்கிய தேவதையாகக் கொண்டா டப்பட்டு, பயிர்கள் செழிக்காமல் மழையைத் தடுக்கும் விருத்திரன் முதலிய அசுரர்களை யுத்தம் செய்து கொன்ற இந்திரனே ராமன் என்று இந்தக் காவியத்தில் கொல்லப்படுகிறது. வைதீக தேவதைகள் பிரசித்தி குறைந்து, பௌராணிக (புராண) தேவதைகளான விஷ்ணு, ருத்ராதிகள் மேலோங்கின பிறகு இந்த விஷ்ணுவையே ராமன் என்று சொல்லப்படுகிறது''.

ஜகோபி பண்டிதர்; மேற்சொன்ன வைதீக கதையே இராமா யணத்திற்கு ஆதாரமென்று முடிவு செய்கிறார். காசியில் வசிக்கும் பண்டிதரான கோவிந்த தாசர்: ''காசியில் 23 விதமான இராமா யணங்கள் இருந்ததாகச் சொல்கிறார். சரித்திரம் என்ற பதத்திற்கு

142. அயோத்யா காண்டம் சிஆர்எஸ். பக் 237.
143. பாலகாண்டம் பக்கம் XXXII
144. ibid.

தற்காலத்தில செய்யும் அர்த்தத்தின்படி ராமாயணம் சரித்திரமல்ல; ''**காவியமே !**''[144] (காவியம் மட்டுமே).

இது ''**காவியமே**'' என்பதற்கு ஆதாரமாக இராம இலட்சு மணர்கள் சூர்ப்பநகையை மானபங்கம் செய்து இழிவு படுத்திய வர்ணனையேயாகும்.

இராமர் சீதையுடன் 13 ஆண்டுகள் கோதாவரி நதிக்கரையில் சந்தோஷமாக தாம்பத்யம் செய்ததையும், பல விதமாக அவளுடன் ஜலக்கிரீடை மற்றும் விளையாடியனதைப் பற்றியும், பிறகு அவளைப் பிரிந்த பின் ஏற்பட்ட விரகதாபத்தால் புலம்பியதையும், வால்மீகி மிகவும் இலக்கிய நயத்துடன் 20 பக்கங்களில் வர்ணிக்கிறார். தம்பதிகளுக்கென்று பிரத்யேகமாக தனியாக அமைக்கப்பட்ட பர்ண சாலையில் தாம்பத்ய சுகத்தை அனுபவித்த இராமர், தன் தம்பி இலட்சுமணருக்கு இந்த வாழ்க்கை இல்லாமல் போனதைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்கவே இல்லை. அதேபோல் சீதையும், தன் ஓரகத்தியும் தனிமையில் தவிப்பாளே என நினைக்கவே இல்லை.

இராவணேஸ்வரர் சாதுர்யமாக சீதையை சிறைபிடித்த பின் இராமர் அவளைத் தேடலானார்.

அவர் அயோத்தியில் இருக்கும்போதே, தசரதர் ''நான் இராவ ணேஸ்வரரிடம் போரிட மாட்டேன்'' எனக் கூறியிருந்தார். ஆனால், வனவாசம் செய்ய ஆக்ஞை பெற்ற அடுத்த நாளே, அயோத்தி அரண்மனையில் இருக்கும்போதே, இராமர் நான் சீதையின் நிமித்தம் இராவணனைக் கொன்று குலநாசம் செய்வேன்,'' என்று நாரதரிடம் கூறினார்.

சூர்ப்பநகை என்கிற சந்திரநகை, நான் இராவணேஸ்வர, கும்பகர்ண, வீபீஷணர்களின் தங்கை எனக் கூறியிருக்கிறாள். சீதையைக் கடத்தியது விஸ்ரவசின் புத்திரன், ராட்சசாதிபதி என ஜடாயு தெரிவித்திருக்கிறாரர். கபந்தன் இராவணேஸ்வரர் இருக்குமிடம் சுக்ரீவனுக்குத் தெரியும் எனத் தெரிவித்திருந்தார். சபரி சீதையை இராவணர் தூக்கிச் சென்றதாகவும், அவர் இருக்குமிடம் சுக்ரீவனுக்கு தெரியுமென்றும், சுக்ரீவன் சமீபத்தில் வசிக்குமிடத்தை சுட்டிக்காட்டியும் விவரிக்கப்பட்டிருக்க, பாலகாண்டத்தில் மாரீசன் தாடகையின் மைந்தன் எனத் தெரிவித்திருந்தும், இராமர் ஏன்

அவளைத் (சீதையை) தேடி அலைய வேண்டும்? சுக்ரீவன் ஏன் குரங்குப் படையை உலகெங்கிலும் தேட உத்திரவிட வேண்டும்?

சம்பாதியும், அனுமாரிடம், சீதையை இராவணன் அசோக வனத்தில் வைத்திருக்கிறான் எனவும் கூறியுள்ளார். அப்படியிருக்க, அனுமார் ஏன் இலங்கை நகரெங்கும் அவளைத் தேட வேண்டும்? இலங்கை பிரதான வீதிகளில் மக்கள் வேதம் ஓதிக் கொண்டிருப்பத்தையும், மற்ற தெருக்களில் மக்கள் ஜெபம் செய்வதையும் கண்டு வியந்த அனுமார், சம்பாதி சுட்டிக்காட்டிய அசோகவனத்திற்கு நேரடியாக ஏன் செல்லவில்லை?

அப்படியிருக்க வால்மீகி மகரிஷி ஏன் கதையை வளர்த்துக் கொண்டே போனார்? அவரின் நோக்கம் வேதாந்தங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் மக்கள் அறிந்து கொண்டு நலமாக வாழவேண்டுமென்ற சீரிய நோக்கமேயாகும்.

காத்தல் பணியை, ஜீவராசிகளின் கர்ம விதிப்படி, தவறாமல் செய்யும் ஸ்ரீமன் மஹாவிஷ்ணுவை, மக்களை கோடிக்கணக்கில் கொன்று குவிப்பவராகவும், காமத்தை அனுபவிப்பவராகவும், அதை அருளுபவராகவும் வர்ணிப்பது மிகவும் தவறானதும் விஷமத்தனமானதுமாகும். மாற்று மதத்தினர் நம்மை ஏளனம் செய்வதற்கு தீனி போட்டது போல் ஆகிவிட்டது. கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் அன்னம் பாலிக்கும் கடவுள், மனிதர்களை, அரக்கர்கள் எனக் கூறி சகட்டு மேனிக்கு கொல்கிறார் என்பது அவதூறான செயலேயாகும்.

புராணங்கள் தவறாக மதத்தை விவரித்ததால் நமது தேசபிதா மகாத்மா காந்தி அடிகள், நமது மத நூல்கள் (1) வேத உப நிஷத்துக்கள் (2) பிரும்ம சூத்திரம் (3) பகவத்கீதை என்ற மூன்று நூல்களையே பிரஸ்தானத்ரையம் (முக்கிய மூன்று) என விளக்கினார். மற்ற நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இராமாயணம் முழுவதும் இராமரை ஒரு சாதாரண மனிதனாகவே சித்தரிக்கிறது. ஜைன இராமாயணத்தில் இராமரை ஒரு எடுத்துக்காட்டான மாவீரனாகவே விவரிக்கப்பட்டிருக்கிறது. இராமாயணம் சுத்த பொய்''[145] என்று அதன் ஆசிரியர் கூறுகிறார்.

மன்னர் தசரதரின் மகன் இராமர், பல தேசங்களை வென்று தன் ஆட்சிக்குள் கொண்டு வந்து, சக்ரவர்த்தி என்ற உயர் பட்டத்

145. AVR P 80.

தைப் பெற்றார். மாமன்னரிடம் சலுகைகளைப் பெற ஆன்மீக, சந்தர்ப்பவாத, சுயநலவாதிகள் அவரைத் தெய்வமாக்கிப் புகழ்ந் தார்கள் என்றே தோன்றுகிறது.

கீர்த்தனாச்சார்ய ஸ்ரீமன் சி.ஆர்.ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பி.ஏ., அவர்கள் மிகவும் படித்த அறிஞரும், ஆராய்ச்சியாளருமாவார். அவர் விருப்பு, வெறுப்பின்றி மிகவும் நேர்மையுடன், நுணுக்கமாக ஆராய்ந்து, வால்மீகி இராமாயணத்தில் உள்ள முரண்பாடுகளையும், குற்றங்களையும் கண்டித்து, ஏராளமான இடங்களில் தனது கருத்தை அடைப்புக் குறிக்குள் தெரிவித்திருக்கிறார். இவரின் கருத்துக் கணிப்பு: இராமர் ஒரு சாதாரண இராஜ குமாரனே! தண்டகாரண்யம் மற்றும் ஏராளமான நாடுகளைக் கைப்பற்றி, வடநாட்டுடன் சேர்த்துக் கொண்ட வரலாறே இராம கதை. அவர் ஏக பத்தினி விரதர் எனப் புகழப்படுவதும் ஏற்றப் புகழ்ச்சியே!

இராமாயணத்தில் சைவம்

சைவத்தையும், சிவபெருமானையும் இகழ்ச்சியாக வர்ணிப்பதை ஸ்ரீமன் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் கண்டிக்கிறார். ''வியாக்யான கர்த்தா கோவிந்த ராஜர், தனது வியாக்யானத்தில், அவருக்குள்ள வைணவ மதாபிமானத்தால் சில இடங்களில் சைவ மதத்தை அளவுக்கு மிஞ்சி தகுந்த காரணமின்றி கண்டிக்கிறார்''[146] எனத் தெரிவித்திருக்கிறார்.

''இராம தாரக மந்திரத்தில் நாராயண அஷ்டாக்ஷரமும், பரமசிவ மந்திரமான பஞ்சாட்சரமும் கலந்திருக்கின்றன. 'ர' என்ற அக்னிபீஜம், பிரகாசமென்ற அர்த்தமுள்ளது. சச்சிதானந்த ஸ்வரூபியும், தேஜோமயமான பரமாத்மாவைக் குறிக்கிறது. அதன் உச்சாரணத்தால் சகல கர்மங்களும், வாசனைகளும், உபாதிகளும் அழிகின்றன. 'ம' என்ற அட்சரம் அமிர்த பீஜம், காம, குரோத மோஹங்கள் சாம்பலாய் எரிந்து கிடக்கும் இருதய வனத்தில் பிருமானந்தம் என்ற அமிர்தவர்ஷம் பொழிகிறது; க்ஷேமமும் முக்தியும் கிடைக்கும்,''[147] என விளக்கம் அளிக்கிறார்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தை அடைய வேண்டி, விஷ்ணுவின் தலைமையில், பாற்கடலைக் கடைந்தபோது, முதலில் ஆலகால விஷம் தோன்றி, தேவ அசுரர்களைத்

146. பாலகாண்டம் முகவுரை

147. பாலகாண்டம். P xxxix

தகிக்க வைத்தது. விஷ்ணுவால் சமாளிக்க முடியாததால், அவர் சங்கரரிடம், ''தாங்களே தேவர்களில் முதன்மையானவர். ஆகவே, முதலில் வந்தது உங்களுக்கே உரியதாகும். இங்கேயே இருந்து பூஜைகளையும், பிரார்த்தனைகளையும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி உடனே மறைந்து விட்டார்''

சுக்ரீவன் அனுமாருக்கு, இலங்கைக்குச் செல்லும் மார்க்கத்தைத் தெரிவிக்கும்போது ''சோனகிரி மலையில் சம்பு வசிக்கிறார். அவர், 11 விதமாக காட்சி அளிப்பவர். இந்தப் பிரபஞ்சத்தின் ஆன்மா, பிரும்ம ரிஷிகளால் வணங்கப்படும் கடவுள்களின் தலைவர். அவர் ருத்ரர், இந்தப் பிரபஞ்சத்தின் முதலாளி,'' என வர்ணிக்கிறார்.

பெண்ணின் கர்ப்பத்தின் வழியாக பிறந்த எவரும் கடவுளில்லை. சிவபெருமான் இறப்பதுமில்லை. பிறப்பதுமில்லை. அவருக்கு உருவமும் இல்லை; பெயரும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் நிறைந்தவர். பிரபஞ்சமே சிவன் என்ற மங்களம். அங்கு காமம், பசி தாகமில்லை. ஆனாலும் ஐஸ்வர்யங்களையும், அனைத்து போக பாக்யங்களையும் அள்ளி அள்ளி அருளுபவர். அவர் ஒருவராலேயே ஜீவன்களின் பாவங்களை பஸ்பமாக்க முடியும். அவர், இயற்கையானவர்.

இராமாயணத்தைப் பற்றி அயல் நாட்டவரின் கருத்து:

காஸ்பரோ கொரேசியா என்ற ஆராய்ச்சியாளர், வான்ஸ்லேகர் என்ற மற்றொரு ஆராய்ச்சியாளரை மேற்கோள் காட்டி கூறுகிறார்: ''விஸ்வாமித்ரரால் உண்டாக்கப்பட்ட தெற்கத்திய நட்சத்திரங்கள் இந்தியர்களுக்கு அவர்கள் கங்கைக் கரைச் சீமையில் இருந்தவரை தெரியாமலிருந்தது. பிற்காலத்தில் அவர்கள் இந்தியாவின் தென் பகுதியை தன் காலனி ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்த பிறகே இதைத் தெரிந்து கொண்டார்கள்''.

கொரேசியா மேலும் கூறுகிறார்: இராமர் தென்னிந்தியாவான தண்டகாரண்யத்தை முழுவதுமாக வடநாட்டுடன் இணைத்த பிறகு வர்ணாஸ்ர தர்மத்தை அறிமுகம் செய்தார் அதற்கு சம்புகனை அவர் கொலை செய்ததே உதாரணம்.''[148]

முதலில் பஞ்சவடியில் இருந்தபோது சூர்யஹாஸ் என்கிற தெய்வீக வாளைப் பெற, மூங்கில் புதருக்குள் தலைகீழாகத்

148. வால்மீகி ராமாயணம். All P. 458

தொங்கி தவம் செய்து கொண்டிருந்த சம்பூகனைச் கொன்றார். பிற் காலத்தில் இராம பட்டாபிஷேகம் முடிந்து, இராமராஜ்யம் நடந்து கொண்டிருந்தபோது வேதம் ஓதிக் கொண்டிருந்த சம்பூகனை, அவன் சூத்திரன் எனக் கருதி, இராமர் கொலை செய்தார். பிரும்ம ஹத்தி தோஷம் நீங்க சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார்.

(இராவணேஸ்வரர் என்ற பிராமணரின் தங்கை சூர்ப்பநகைக்கும் அவள் கணவர் வித்யுத்ஜிஹ்வனுக்கும் பிறந்த சம்பூகன் எப்படி சூத்திரனாவான்?) இந்த சம்பவம் திருக்கோவிலூரை அடுத்த பல்லகைச்சேரி என்ற கிராமத்தில் நடந்தது.[149]

தென்னிந்தியாவில், இராமன் என வர்ணிக்கப்பட்ட மகாவிஷ்ணு, மால்யவான் முதலியவர்களை எப்படி நெறிமுறையின்றி கொன்று குவித்தார் என முன்பே 'இராமர்' என்ற தலைப்பில் நெஞ்சுறுகும் விதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

சூர்ய வம்சத்தைச் சேர்ந்த இராமர் சந்திர வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களுடன் போர் செய்து, அந்நாட்டு மன்னர்களைக் கொன்று நாட்டையும் அபகரித்தார். காமரூபம், கன்யாகுப்ஜம் என்கிற இராஜ வம்சங்களை ஏற்படுத்தினார்.[150]

லவ குசர்கள் சிந்துநதியைத் தாண்டி, ஆரியம் மற்றும் ஆரிய மில்லாத எண்ணற்ற இராஜ்யங்களைத் கைப்பற்றி தன் ஆளுகைக் குட்படுத்தினார்கள்.[151]

பரதன், இராமரின் உத்திரவைப் பெற்று, கேகய தேசத்தை ஆண்ட கந்தர்வர்களைக் கொன்று, சிந்து நதியின் கரைகளில் உள்ள நாடுகளைக் கைப்பற்றி தன் இரண்டு குமாரர்களுக்கும் கொடுத்தார்.

காளிந்தி நதியின் இரு புறங்களிலும் உள்ள மதுவனத்தை, மதுவின் மகன் லவணாசுரன், தேவர்களைத் துன்புறுத்திக் கொண்டு ஆண்டு வந்தான். அவனை சத்ருக்னர் கொன்று மதுரா என்ற மிகவும் அழகிய நகரத்தை ஸ்தாபித்தார். (தேவி பாகவதம் 4ம் காண்டம்) பிற்காலத்தில் சத்ருக்னரின் இரு மகன்களும் அந்த மதுராநாட்டை ஆண்டார்கள்.[152]

149. தெய்வத்தின் குரல்
150. பாலகாண்டம் XXXIV. 151. JR P 329. 152. Puraine Exclopedia. 451.

கந்தர்வர்களும், யட்சர்களும் கொடுமையானவர்கள் என்றும் ஆரியர்களே நாகரீகத்திலும், நற்பண்புகளிலும் மேன்மையானவர்கள் என்ற கொள்கையுடன் காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள். அவர்களுடைய வாழ்வு நெறியான வர்ணாஸ்ரம தர்மத்தைத் திணித்தார்கள்.

திரேதாயுகத்தில் வாழ்ந்த மாவீரன் இராமரை, கலியுகம் கி.பி. 4ம் நூற்றாண்டிலிருந்து தான் வைணவக் கடவுளாக வணங்க ஆரம்பித்தார்கள். அவருக்கென கோயில்களும் கட்டினார்கள்.

வால்மீகி உள்ளதை உள்ளபடி விவரித்த விஷயங்களை, பிற்காலத்தில், மதவாதிகள் சுயநலத்திற்காகவும், வயிற்றுப் பிழைப்புக்காகவும் நீக்கினார்கள். அவைகளை ''பிரட்சிப்த'' (ஒதுக்கப்பட்ட) பகுதிகள் என்றும், நோட்டுகள் (மொத்தம் 132 பகுதி குறிப்புகள்) என்றும் நீக்கி விட்டார்கள். அவைகளில், அகத்திய முனிவர் திருப்பதி திருமலையில் சுப்ரமண்ய ஸ்வாமியிடம் உபதேசம் பெற்றார் என்ற தகவலும் உள்ளது.

தயாமூர்த்தியான மகாவிஷ்ணுவும், பாமர மக்களின் வழிபாடுகளை, எவ்வளவுதான் தவறாக இருந்தாலும், ஏற்றுக்கொண்டு அருள் பாலிக்கிறார்.

வானிலிருந்து பொழியும் தண்ணீர் எப்படி ஒரே சமுத்திரத்தை அடைகிறதோ, அதேபோல் அனைத்து தேவர்களுக்கும் செய்யும் வழிபாடுகள் ஒரே கேசவனை சென்று அடைகின்றன'' (இது வேதத்திலுள்ளது).

இந்த வேத வாக்குக்கு வியாக்யானம்: கேசவம் என்பது சிவனாரைக் குறிக்கும் என்று ஒரு வியாக்யானம் உண்டு, கேசவம் என்றால் முடிதரித்தவன் என்று பொருள். கிழக்கு மேற்காக விரிந்து படர்ந்திருக்கும் இமயமலையே சிவனின் விரிசடை என்றும், அவரின் தலையே திருக்கயிலைமலை என்றும், வானிலிருந்து பொழியும் தண்ணீரான கங்கை, சிவனாரின் விரிசடையில் அடக்கப்பட்டு, கொஞ்ச கொஞ்சமாக உதிர்க்கப்பட்டு, கடைசியில் சமுத்திரத்தில் கலக்கிறதென்றும் பொருள் கொள்ள வேண்டும்.

அதேபோல் இப்பூவுலகில் உள்ள அனைத்து மக்களின் வழிபாடுகளும், தோத்திரங்களும், இப்பிரபஞ்சத்தின் முதலாளியான சிவபெருமானையே சென்றடைகின்றன. அவரும் ஏற்றுக் கொண்டு அனைத்து மக்களையும் ஆசிர்வதித்து காப்பாற்றுகிறார்.

பெருநாட்டின் செல்வத்தையும், வளத்தையும், மக்களின் கபடமற்ற குணங்களையும், ஒற்றுமையின்றி இருப்பதையும் தெரிந்து கொண்ட ஸ்பானியர்கள் வெறும், 168 குதிரைப்படை வீரர்களுடன் அங்கு படையெடுத்துச் சென்று அந்நாட்டை அழித்தார்கள். நாட்டின் 97 சதவிகித மக்களைக் கொன்றார்கள். மீதமிருந்த 3 சதவிகித மக்களை துப்பாக்கி முனையில் மிரட்டி கிறிஸ்தவத்திற்கு மத மாற்றம் செய்தார்கள். (முகவுரையைப் படிக்கவும்)

கலிகாலத்தில் ஸ்பானியர்கள் பெருநாட்டில் செய்த அக்ரமங்களுக்கு, திரேதா யுகத்தில் அயோத்தி இராஜ குமார்கள் செய்ததே வழிகாட்டியாக இருந்தது போல் தெரிகிறது.

இந்துக்களாகிய நம் மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்ச்சியும். ஒற்றுமையும், சுயமரியாதையும் இல்லாவிட்டால் நம் கலாச்சாரத்தையும், வளத்தையும், மகோன்னதமான பெருமையையும் இழந்து உலக அரங்கில் இகழ்ச்சிக்கு உள்ளாவோம்.

நம்மில் ஒன்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே!

- சுப்ரமணிய பாரதி

– முற்றும் –

ஆதார நூல்கள்

1. Asian variations in Ramayana Published by Sangeeth Nataka Academy, Chennai edited by Sri.K.R.Srinivasa Iyengar.

2. Valmiki Ramayana Translated in English. Published by Swami Bigyananda @ Hari Prasad Chetterji BA, LCE, Muthiganj, Allahabad, year 1935, Printed in Raj Pali Press, Muthiganj, Allahabad.

3. Jain Ramayana, Parts I, II, III by Hemachandra Soorishwarji, 12th Century First Edition 1989, Publisher Sri Viswa Kalyan Prakashan Trust.

4. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், பாலகாண்டம் by கீர்த்தனாச்சார்ய ஸ்ரீ சி.ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் B.A. மூன்றாம் பதிப்பு Huxley Press 1954 இராமாயண விலாசம், மயிலாப்பூர்.

5. வால்மீகி ராமாயணம்: அயோத்யா காண்டம் கீர்த்தனாச்சார்ய Sri. C.R.நிவாஸ அய்யங்கார் B.A., Huxley Press, முதல் பதிப்பு.

6. வால்மீகி ராமாயணம், ஆரண்ய காண்டம், Sri. C.R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சுதேசமித்திரன் ப்ராஞ்ச் பிரஸ், 1920 இரண்டாம் பதிப்பு.

7. வால்மீகி ராமாயணம், ஆரண்ய காண்டம், Sri. C.R ஸ்ரீநிவாஸ் அய்யங்கார், கல்யாண சுந்தரம் பவர் பிரஸ், தஞ்சாவூர் – 1913.

8. வால்மீகி ராமாயணம்: கிஷ்கிந்தா காண்டம், Sri. C.R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சுதேசமித்திரன் ப்ராஞ்ச் பிரஸ் 1926.

9. வால்மீகி ராமாயணம், சுந்தரகாண்டம், Sri. C.R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், மூன்றாம் பதிப்பு, Huxly Press 1926.

10. வால்மீகி ராமாயணம், யுத்தகாண்டம், Sri. C.R.ஸ்ரீநிவாஸ் அய்யங்கார், ராமாயண விலாஸ், மயிலாப்பூர், II Part, சுதேசமித்திரன் பிராஞ்ச் பிரஸ், 1928.

11. வால்மீகி இராமாயணம், உத்தரகாண்டம், Sri. C.R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் B.A., ராமாயண விலாஸ், மயிலாப்பூர், சுதேசமித்ரன் பிராஞ்ச் பிரஸ், 1927.

12. அத்யாத்ம ராமாயணம், மொழிபெயர்ப்பு ஹரிணி (ஸ்ரீராம தத்துவ ராஸாம்ருதம்) ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்

13. Chinese Ramayanam, Translated by Shiva Shankar Tripati.

14. நாராயணீயம்: வேம்பத்தூர் நாராயண பட்டத்ரி

15. Project Madurai 2003 மறைந்துபோன தமிழ்நூல்கள்: பழைய இராமாயணம்.

16. 300 Ramayanas by A.K. Ramanujam Edited by Paula Richman.

17. Puranic Encyclopedia by Vettam Mani, Published by Motilal Banarasi Das.

18. Encylopedia of Hinduism, R.K. Mutt, Mylapore

19. இந்து மதம் எங்கே போகிறது? அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச் சாரியார்.

20. தெய்வத்தின் குரல்

21. தேவி பாகவதம்

22. Wikipedia

23. Indian Chronology (8231 BC to 1963 AD) Dr. D.S. திரிவேதா, MA, PhD, பாரதீய வித்யா பவன், பெங்களூரு.

குறிப்புகளுக்காக...

